௨ கதை * 6 வரலாறு * 1 நாடகம் * மற்றும் 12 அம்சங்கள்



சாக்ரட்டீஸ்

ராகுல்ஜி

டிஸ்னி

சாமி

சக்தி

மாத வெளியீடு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS MADRAS

குட்டிக் கதைகள் ... 16
ஐவான் துர்கனேவ்

பிரகாரத் தெருவில் ... 25
வை. கோவிந்தன்

ராகுல சாங்கிருத்தியாயன் ... 34
கண. முத்தையா

படிப்பினை ... 37
சிதம்பர ரகுநாதன்

விளாத்திகுளம் சாமி ... 45
ஜி. செல்லையா

பெண்ணும் பருவ காலமும் ... 57
ஒரு உடலியல் நிபுணர்

இந்தியக் குடியரசில் இலக்கியம் ... 64
மஞ்சேரி எஸ். ஈஸ்வரன்

இந்தியாவில் புகை பிடித்தல் ... 71
த. அ.

மிக்கிமவுஸ் ... 77
தொ. மு. சி.

— முழு விவரம் மறுபக்கம் —

விரோதி அணா 8 பங்குனி

பொருள் அடக்கம்

மலர் 16 :: இதழ் 12

○

ஆசிரியர் குறிப்பு	...	ஆசிரியர்	3
அஞ்ஞாதவாசம்	...	சபரி	5
ஜெர்மன் மகாகவி கத்தே	...	ரிச்சர்டு சர்ச்	11
குட்டிக்கதைகள்	...	ஐவான் துர்கனேவ்	16
ரேடியோவும் தலைவலியும்	...	டேவில் லி. ராய்	21
ஷேக்ஸ்பியரா? பேக்கனா?	...	பிராங்க் ஸ்டூவர்ட்	23
சூறைக்காற்று	...	நா. சீ. வரதராஜன்	27
பிரசுரத்தொழில்	...	வை. கோவிந்தன்	29
ராகுல சாங்கிருத்தியாயன்	...	கண. முத்தையா	34
படிப்பினை	...	சிதம்பர ரகுநாதன்	37
விளாத்திகுளம் சாமி	...	ஜி. செல்லையா	45
தேவையற்ற விவரங்கள்	...	"ஜி. சி."	50
உங்கள் கூந்தல்	...	ஜே. ஈ. கிப்ஸன்	51
சாக்ரட்டீஸின் அந்திம காலம்	...	ஸெனபன்	53
பெண்ணும் பருவகாலமும்	...	ஒரு உடலியல் நிபுணர்	57
ஈராக்	...	...	62
இந்தியக் குடியரசில் இலக்கியம்	...	மஞ்சேரி எஸ். ஈச்வரன்	64
இந்தியாவில் புகை பிடித்தல்	...	கு. அ.	71
மிக்கிமவுஸ்	...	தொ. மு. சி.	77
வெண்டைக்காய்ப் பச்சடி	...	வை. கோ.	85
புத்தக உலகம்	...	மூவர்	87

○

விரோதி சக்தி பங்குனி

மார்ச்
18
முதல்
விஜய
குமாரி
MADRAS
விழியாலே மொழிபேசும் நடிப்பு,
உள்ளத்தை உருவகப்படுத்தும் நடனங்கள்,
சொல்லமைப்பால் சுவைபயக்தும்
பாடல்கள், அனைத்தும் ஒன்றிய கற்பனை
குன்றாத திரைச் சித்திரம்........
டைரக்ஷன்· ஏ.எஸ்.ஏ.சாமி
ஜூபிடர் தயாரிப்பு
ஸ்டூடியோ·சென்ட்ரல்

நீங்கள் இன்ஷ்யூரன்ஸ் செய்துகொள்வதற்கும்,
லைப் இன்ஷ்யூரன்ஸ் பிரதிநிதியாவதற்கும்

ஓர் அரிய ஸ்தாபனம்

ஹிந்துஸ்தான் கோ-ஆபரேடிவ்

இன்ஷ்யூரன்ஸ் ஸொஸைடி லிமிடெட்,

கல்கத்தா.

மிகவும் முன்னேற்றமான
லைப் இன்ஷ்யூரன்ஸ் ஸ்தாபனம்.

★

"முன்னேற்றத்தின் ஒளி."

புதிய வியாபாரம் (1949)	ரூ. 13,25,00,000 க்கு மேல்
நடப்பில் உள்ள இன்ஷ்யூரன்ஸ்கள்	ரூ. 63,42,26,959
மொத்த ஆஸ்திகள்	ரூ. 13,41,51,007

ஏஜண்டுகள் இல்லாத பிரதேசங்களிலிருந்து விண்ணப்பங்களை வரவேற்கிறோம். விபரங்களுக்கு எழுத வேண்டுகிறோம்.

★

டிவிஷனல் மானேஜர்,
ஹிந்துஸ்தான் கோ - ஆபரேடிவ்
இன்ஷ்யூரன்ஸ் ஸொஸைடி லிமிடெட்,
"ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்"
107, அரண்மனைக்காரத் தெருவு,
ஜி. டி. சென்னை-1.

விரோதி
மலர் 16

சக்தி

பங்குனி
இதழ் 12

மெய்ப் பொருள் காண்பது அறிவு

ஆசிரியர் குறிப்பு

இது சக்தி 16-வது மலரின் 12-வது இதழ். அடுத்த மாதம் 17-வது மலர் பூக்கிறது. சக்தியின் பதினெரு வருஷ சேவையை நினைத்து நாங்கள் பெருமை அடைகிறோம். விஷய அமைப்பிலும், அச்சு, அழகு ஆகிய விஷயங்களிலும் தமிழகத்தில் சக்தி புதுமையை உண்டு பண்ணியிருக்கிறது. ஆரம்பத்திலிருந்து இன்று வரை இதழ் தவருமல் சக்தியை வாங்கிப்படித்துவரும் வாசகர்களும் மற்றும் பேரறிஞர்களும் 'சக்தியே எனக்கு பலவிதமான அறிவுத் துறைகளிலும் ஞானத்தை அளித்தது' என்று தங்கள் பாராட்டுகளைத் தெரிவிக்கிறார்கள். இதனல் பதினெரு வருஷங்களாக நாங்கள் பத்திரிகை நடத்தினேம் என்று சொல்லுவதற்கு பதிலாக, சிறந்த ஒரு குருகுலத்தையே நடத்தினேம் என்று கூட நாங்கள் சொல்லிக்கொண்டால், அது தற்பெருமையாகாது. விற்பனையையும், லாபத்தையும் மனதில் கொண்டு, பத்திரிகையின் அமைப்புகளையும், விஷயங்களையும் மாற்றும் வழக்கம் எங்கும் சகஜமாக நடைபெற்றபோதிலும், சக்தி அவ்வித வியாபார மனப்பான்மையின்றி, பத்திரிகையின் தரத்தை மாதத்துக்கு மாதம் உயர்த்திக் கொண்டே வந்துள்ளது. சுருக்கமாகச் சொன்னல், சக்தி லாபத்தைப்பற்றி ஒரு சந்தர்ப்பத்திலும் நினைத்தது கிடையாது; பற்பல சிரமங்களுக்கிடையிலும் பதினெரு வருஷங்களாக கலைப்பணியே செய்துவந்துள்ளது.

தமிழகத்தின் சிறந்த எழுத்தாளர்கள் எல்லோரும் சக்தியில் உயர்ந்த விஷயங்களை எழுதியிருக்கிறார்கள். மேலும் இன்று பிரபலமாக விளங்குகிற எழுத்தாளர்கள் பலரை சக்தி நல்ல முறையில் தமிழகத்துக்கு முதல் முதலில் அறிமுகப்படுத்தியிருக்கிறது. இது மட்டுமின்றி உலகத்தின் தலைசிறந்த இலக்கிய கர்த்தர்கள், ஆராய்ச்சியாளர்கள், விஞ்ஞானிகள், அரசியல் வாதிகள் முதலியவர்களின் எழுத்துக்களையும், அவர்களுடைய வரலாறுகளையும் சக்தியில் கொடுத்து வந்திருக்கிறேம். சக்தியில் இதுவரையிலும் வெளிவராத உலகப் பேரறிஞர்களின் வரலாறுகளைக் கைவிரல்களைக்கொண்டு எண்ணிவிடமுடியும். அநேகமாக உலகப் புகழ் பெற்ற ஒவ்வொரு அறிஞருடைய வரலாறும், அவருடைய சிருஷ்டிகள் சிலவும் சக்தியில் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. டால்ஸ்

டாய், ஐன்ஸ்டைன், ஆனந்தகுமாரசாமி முதலிய பல மேதாவிகளைத் தக்க முறையில், தமிழகத்துக்கு, முக்கியமாகப் பிறமொழிகளை அறியாத தமிழ் மக்களுக்கு, அறிமுகப்படுத்தியது சக்தி தான் என்று பல வாசகர்களைப்போல நாங்களும் துணிந்து கூறுவோம். அத்துடன் போட்டோக்களை முதல் முதலில் வெளியிட்டு, தமிழ் நாட்டில் போட்டோக் கலை வளர்ச்சி பெறுவதற்கு அதிக அளவில் சக்தி உதவியிருக்கிறது. மேல்நாட்டுப் பத்திரிகைகளைப்போல கண்கவரும் வனப்புடன், அவ்வப்போது புதுப்புது சோபையுடன் சக்தி வெளிவந்து வாசகர்களின் பாராட்டுக்களை நிரந்தரமாகப் பெற்று வருகிறது.

உயர்ந்த விஷயங்களைப் படிக்கவேண்டுமென்ற அறிவுத் தாகத்தின் காரணமாகப் பல வருஷங்களாக சக்தியிடம் அலாதியான அபிமானங் கொண்டு, சக்தியின் வளர்ச்சிக்குத் தோன்றாத் துணைகளாக இருந்து உதவிய நம் வாசக நேயர்களுக்கு நாங்கள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்களுக்குக் கைம்மாறாக 'நம்மால் இயன்ற சேவையைச் செய்துவந்திருக்கிறோம்' என்று திருப்தியும் அடைகிறோம். சக்தியின் பெருமையை எல்லாம் தங்களுடைய புகழாக்கிக்கொண்ட எழுத்தாளர்கள், படப்பிடிப்பாளர்கள், அச்சுத்தொழிலாளிகள் முதலியவர்களுக்கும், சக்தியின் வளர்ச்சி கருதி உழைத்துவரும் அனைவருக்கும் நன்றி செலுத்துகிறோம்.

சென்ற இதழில் நாம் தெரிவித்திருந்தபடி இந்த சக்தியில் தொடர்கதையையும், புத்தகச் சுருக்கத்தையும் சிற்சில அசௌகரியங்களின் காரணமாக வெளியிட இயலாமல் ஒத்திபோடும்படி நேர்ந்துவிட்டது. மிகவும் வருந்துகிறோம். இந்த இதழில் அவற்றிற்குப் பதிலாக, வாசகர்களுக்குப் பரிபூரண திருப்தியையும், மகிழ்ச்சியையும் அளிக்கும் பல சிறந்த கட்டுரைகள் இடம் பெற்றிருக்கின்றன என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம். உலக மகா கவிகள் இருவரைப் பற்றிய கட்டுரைகளும், கலைத் துறைகளில் மேதாவிகளாக உள்ள வேறு சிலரைப் பற்றிய கட்டுரைகளும், சினிமாவில் பார்க்கும் 'மிக்கிமவுஸ்' படக்கலையின் தந்தையான வால்ட் டிஸ்னியைப் பற்றிய விபரங்களும், துர்கனேவின் சாகா வரம்பெற்ற குட்டிக்கதைகளும், மற்றும் பல சிறந்த அம்சங்களும் வாசகர்களை மகிழ்விக்கும் என்பதில் சந்தேகமில்லை.

சக்தியின் தலைசிறந்த முயற்சிகள் யாவற்றிற்கும் வாசக நண்பர்களின் தொடர்ந்த ஆதரவை எதிர்பார்க்கிறோம். அவர்களுடைய அன்பும் ஆதரவும்தான் எங்களுக்கு பெரும் பலம் என தெரிவித்துக்கொண்டு, இந்த இதழைச் சமர்ப்பிக்கிறோம்.

"சமயமும், சந்தர்ப்பமும், பணவசதியும் இல்லாத காரணத்தால் இம்மாதிரி எத்தனை அறிவுக் களஞ்சியங்கள் நாட்டில் அஞ்ஞாத வாசம் செய்கின்றனவோ? பணமென்ற ஏணியில் தூக்கி விடும் கூட்டங்களின் கைப்பிடிப்பில் ஏறி வரும் பொதுஜனப் பிரதிநிதிகளில் பாதிப் பேருக்காகிலும் உண்மை உழைப்பும், ஆர்வமும், தியாகப் பண்பும், அறிவுத் திறனும் இக் குருடருக்குள்ளது போலிருந்தால்.........."

அஞ்ஞாத வாசம்

வே. பி. சபரி

பூதலிங்க சாஸ்திரிகள் இந்தியா குடியரசான பத்தாவது ஆண்டில் அசெம்பிளியின் சபா நாயகரானார். பெரிய பெரிய சர்வகலாசாலைகளெல்லாம் அவருக்குக் கௌரவ டாக்டர் பட்டங்கள் வழங்கியிருந்தன. சமீபத்தில் வட துருவத்திற்கு 'ஸீல், வால்ரஸ்' மீன்களின் வியாபார விஷயமாக இந்திய வர்த்தகக் குழு ஒன்று சென்றதல்லவா? அதில் கூட அவர் ஒரு அங்கத்தினர். மத்திய, மாகாண சர்க்கார்களில் அரும் பெரும் பதவிகள் வகித்து, அறிவிலும், வயதிலும் முதிர்ந்ததால் 'ரிடையர்' ஆகவிருந்த பூதலிங்கமவர்களை அறிஞர்கள் கூடும் அசெம்பிளி, தன் தலைவராக்கிக் கொண்டு தன் கௌரவத்தை ஒருபடி உயர்த்திக்கொண்டது.

அசெம்பிளியில் யாராவது ஒரு மெம்பர் அனுவசியமான கேள்விகளில் ஈடுபட்டாரானல் அது மட்டும் நம் சபாநாயகருக்குப் பிடிக்காது. "அசெம்பிளியைக் குறிப்பிட்ட அன்பர் ஒரு கேள்வி—பதில் கூடமாக நினைத்து விட்டார் போலும். இங்கே வரட்டுக் கூச்சல் போடுவது தர்மமல்ல. இது பொதுஜன சபையென்பது அன்பருக்கு நினைவிருக்கட்டும்." என்று 'டக் டக்' கென்று பதிலிறுப்பார்.

கேள்வி கேட்கும் பிரதிநிதி "ஆகா, என்ன தவறு செய்தோம். நாம் பெற்றுள்ள பதவிக்கு ஏற்ற பெருந் தன்மையான கேள்வியல்லவே இது" என்று தம் மனச் சாட்சியின் தொந்தரவைப் பொறுக்க மாட்டாதவராய் "இனி மேல் பொறுப்புடன் வேலை செய்வேன்" என்று தமக்குள் தீர்மானித்துக் கொண்டு மெத்தை தைத்த 'ஸீட்டில்' மெதுவாய்ச் சாய்ந்து மேலே நோக்குவார். குளு குளு வென்று, தட்டிவிட்டது முதல் தன் 'கர்மமே கண்ணாக' ஓடிக் கொண்டிருக்கும் மின்சார விசிறி. "ஒழுங்குக்கட்டுப்பாட்டை இந்த விசிறியிடமிருந்தல்லவா மனுஷன் கற்றுக் கொள்ள வேண்டும்!"

என்ற பெருந் தன்மையான எண்ணத்துடன் கண்களை மூடிக் கொள்வார் மெம்பர். அவ்வளவு தான்.

இந்த ரீதியில் தான் அன்றைய அசெம்பிளி கூட்டமும் முடிந்தது. சபா நாயகர் ஜபர்தஸ்தாக வீட்டிற்கு வந்தார். அத்தனை கோடி மக்களின் தலைவர்களை ஆட்டிப் படைக்கும் அதிகாரம் பெற்றவர் தான் பூதலிங்க சாஸ்திரி; ஆனால் வீட்டில் பெட்டிப் பாம்பு.

அந்தக் காலத்தில் ஆதவன் மறையாத ஆங்கில சர்க்காரையும் எதிர்த்துச் சிறை சென்ற தேசிய வீரர்களெல்லாம் இன்று ஒரு மண்டபத்துள் பூதலிங்கமவர்களுக்குப் பணிகின்றனர். அதே பூதலிங்கத்தை வீட்டில் வந்து பாருங்களேன்! 'நாட்டை ராஜா ஆள்கிறார்; ராஜாவை ராணி ஆள்கிறாள்' என்ற கதை தான்.

"பார்த்தியாடி இன்றைய பேப்பரை? அந்த எம். எல். ஏ. அழகர்சாமியை என்ன பாடு படுத்தி யிருக்கேன்னு. பயல் என்னவோ தப்பித் தவறி கேள்வி கேட்டுட்டான்னு மற்ற எம். எல். ஏ. க்களெல்லாம் கை கொட்டினதுகள். அவனுக்கு ஒரே பெருமை. நாலு பக்கமும் கம்பீரமாய்ப் பார்த்துண்டு உட்கார்ந்தவன், கொஞ்ச நேரத்துக்கெல்லாம் விசிறிக் கடியில் 'கொர் கொர்ன்'னு குரட்டை விட ஆரம்பிச்சுட்டான்.

"என்ன தோழரே! ரொம்ப பிரமாதமா கேள்வி கேட்டேள். இப்பொ என்னடான்னா பள்ளி கொண்டுட்டேளே? இது என்ன தூங்கு மூஞ்சி யடமா?' என்று ஒரு அதட்டல் போட்டேன். ஆசாமிக்கு ரொம்ப அவமானமாய்ட்டது. இதைத்தான் 'மெம்பரின் பொறுப் பற்ற தன்மை; சபா நாயகரின் நியாயமான கண்டிப்பு' என்று பேப்பரில் போட்டிருக்கான்'' என்று விஸ்தாரமாய்ப் பேசி விட்டு உற்சாகமாய் நிமிர்ந்து பார்த்தார். தம் குட்டிப் பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டு நின்று கொண்டிருப்பாள் என்று நினைத்த அவருடைய மனைவியை அங்கு காணோம். அவருக்குப் பெரிய ஏமாற்றம். அதற்குப் பதில் சமையல் கட்டிலிருந்து வந்த, "வீட்டிலே யிருக்கிற ஒரு பொண்ணுக்கு வரன் பார்க்க தகுதி யில்லை. உத்யோகம் மட்டும் சபா நாயகர்'' என்ற வார்த்தைகள் சாஸ்திரிகளுக்குக் கொஞ்சம் 'சுருக்' கென்றன.

"என் தங்கம், நம்ம கல்யாணியோட கல்யாண மென்றால் ஏதோ ரெண்டொருத்தனைப் பார்த்தோம், அவன் பிள்ளைகள் பிடித்தது, ஜாதகமும் பொருந்தியது, கல்யாணமும் தீர்ந்தது என்ற சமாசாரமா? இன்றைக்கு நம் அந்தஸ்திற்கு இந்திய ஜனாதிபதி யென்ன, பிரதம மந்திரி யென்ன இன்னும் எத்தனையோ படே படே ஆசாமிகளெல்லாம் வாழ்த்துக்கள் அனுப்பி கௌரவிக்கிற 'பொஸிஷன்லெ' இருந்துண்டு, அதற்கேற்ற வரனை பார்க்க வேண்டாமோ? நானும் சும்மா யில்லேடி? அறிவாளியா, அந்தஸ்துள்ளவனை ஒருத்தனைப் பார்த்து வெச்சிருக்கேன். காலமும், அதுவும், இதுவுங் கூடி வரணுமோல்லியோ...ஹ்ம்...''

என்று வெகு தணிவாகப் பெருமூச்சு விட்டார்.

அடுப்பு வேலையை விட்டுக் கொஞ்சம் தன்கணவன் பக்கம் திரும்பிய அம்மையார் "என்னவோ, நீங்க நெனைக்கிறபடியெல்லாம் நடந்தா நம்ம கல்யாணி கொடுத்து வெச்சவள் தான்" என்று வாழ்க்கையிலேயே முதன் முதலாகத் தன் புருஷனை ஆமோதித்துப் பேசினாள்.

"தங்கம், கட்டாயம் இப்பொ நான் நெனைச்சிருக்கிற பையனே கல்யாணிக்குக் கிடைச்சுடுவான். என்ன, என்றைக்குமில்லாமல் என் பேச்சை அப்படியே ஆமோதிப்பது போல பேசி விட்டாயே, அதுவே ஒரு நல்ல சகுன மல்லவா?" தன் பொய்ப் பற்களைக் கழற்றிக் கொண்டே குழகுழத்தார் பூதலிங்கம்.

"யார் அந்தப் பையன்?" என்று சூடான காபியை நீட்டினாள் தங்கம்மாள்,

மனைவியின் அருகில் தம்மை மறந்து உட்கார்ந்திருந்த பூதலிங்கம், "மதுரை ஜில்லாவில் போடி நாயக்கனூர் தொகுதி எம். எல். ஏ. வேதாந்தம்னு பெயர். மெம்பர்களிலேயே குறைந்த வயது அவன் தான். இருபத்து நான்கு இருக்கும். நிறைய ஏலக்காய்த் தோட்டங்களிருக்கு அவனுக்கு. ஒரு குட்டி ஜமீன்தாரென்றே வைத்துக் கொள்ளேன். அவனுக்குத் தகப்பனாரில்லே.வயசானதாயும், விதவையான அக்காவும் இருக்காளாம்' என்று கதை சொல்லும் பாணியில் விவரித்தார்.

"ஆமா, இவ்வளவு விஷயங்களை எப்படித் தெரிஞ்சுண்டேள்?" என்று தன் ஆசைக் கண்களை அகல விரித்தாள் மனைவி.

"அதுவா?.. அவன் வயசிலே தான் சிறிசே தவிர, கேள்வி ஞானங்களிலேயும், தர்க்க ரீதியிலேயும், அந்தக் கால ஆகஸ்டு தியாகிகளாக விருந்து அசெம்பிளி மெம்பரானவன்களில் ஒருவன் கூட இவனுக்கு 'ஈக்வலா' ஈடு கொடுக்க முடியாது. சிலரைப் போல அசட்டுத் தனமான கேள்விகளோ, அனுவசியமான சர்ச்சைகளோ இவனிடம் கிடையாது.

"அன்னிக் கொரு நாள் அசெம்பிளி கூட்டம் முடிந்ததும் அவனைத் தனியாய்க் கூப்பிட்டு, 'இங்கே வந்து போறவர்களில் உங்களைத் தான் எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. ஜமீன் ஒழிப்பு, வரி விதிப்பு விஷயமாக உங்களுடைய யோசனை நாடு பூராவும் நல்ல தொரு கிளர்ச்சியை யுண்டு பண்ணி யிருக்கு. நீங்கள் மட்டும் கொஞ்சம் முயற்சி யெடுத்துப் பல நாட்டு நூல்களையும் படிச்சுட்டேள்னு, இன்னுஞ் சில வருஷங்களில் மத்திய நிர்வாகத்தில் வெகு லகுவாக உங்களுக்குப் பதவிகள் கிடைக்கும். இந்த சிறு வயதில் இத்தகைய அறிஞராகி விட்டீர்களே! உங்களைப் போலொத்த இளைஞர்கள் தான் நாட்டுக்குத் தேவை. இந்த பாரத பூமி தான் உங்கள் அறிவுக் கேற்ற பரிசு கொடுக்க வேண்டும்' என்று ஒரு போடு போட்டேன். பையனுக்கு ஒரே கும்மாளம்! என் மேலே ஒரு தனிப்பட்ட மரியாதை எற்பட்டுடுத்து. அப்புறம் மெள்ள மெள்ள அவனுடைய குடும்ப விவகாரங்களையெல்லாம் சொல்ல ஆரம்பித்

தான்'' என்று டம்ளரி லிருந்த காபியைத் தீர்த்தார் பூதலிங்கம்.

"அப்படீன்னு அந்த பிள்ளை யாண்டானே ஒரு நாளைக்குக் கூட்டி வரது தானே?'' இது அம்மையாரின் அவசரமான கேள்வி.

"நீ வேறே, விதை போட்ட தும் சுரை பிடுங்கறவளாச்சே. ஆகட்டும், மெதுவாய்ப் பார்க்க லாம்'' என்று வெற்றிலைத் தட் டைத் துழாவினர் சபாநாயகர்

தான் அறிய வேண்டியவை களை அறிந்துகொண்டாயிற்று என்றோ, அல்லது வழக்கத் திற்கு மாருக தம்பதிக ளிரு வரும் கலகலத்துக் கொண்டி ருந்து விட்டோமென்றோ, இருந்தாற் போல் இருந்து "சரி சரி, ஹாலுக்குப் போங் கள், எனக்குக் கொள்ளை வேலை யிருக்கு'' என்று பூதலிங்கத் தைச் சமையல் கட்டிலிருந்து அதிகாரம் பண்ணினள் திருமதி பூதலிங்கம்.

அன்று மாலை ஸ்ரீ வேதாந்தம் எம். எல். ஏ. சகிதம் வந்திறங்கி ளூர் கனம் பூதலிங்கம். "வாங்கோ, வாங்கோ'' என்று வாய் நிறைய வரவேற்ருள் தங் கம்மாள்.

வெண் கதருடை வெளீரென இளம் அறிவுக் களஞ்சியமான வேதாந்தம் சோபா ஒன்றில் அமர்ந்தார். அசெம்பிளி மண்ட பத்தின் உட்புறம் போலவே அமைந்திருந்தது சபா நாயகர் பூதலிங்க சாஸ்திரிகளின் வீடு. சுவர்களில் பழம் பெரும் தேசத் தலைவர்கள்; உட்கார்ந்ததும் தூக் கிக் கொடுக்கும் மெத்தைகள்; தென்றலை யள்ளி வீசும் விசிறி கள்; இவைகளுக் கெல்லாம் சிகரம் வைத்தது போல் 'ஒரு சிறு தூக்கம் போடலாமா?' யென்று சபலந் தட்டும் சூழ் நிலை. எல்லாவற்றுக்கும் ஈடு கொடுத்துக் கொண் டமர்ந் திருந்தார் வேதாந்தம். சட்ட சபையின் அநுபவம் வேறு அவருக்கு!

சபாநாயகரின் தலைமையில் தங்கம்மாள், கல்யாணி, வேதாந் தம் இவர்க ளடங்கிய அச்சிறு சபையில் கீழ்க் காணும் தீர் மானங்கள் நிறைவேறின.

"வேதாந்தம், அன்ருெரு நாள் உன் அறிவுக்கும், திற னுக்கும் பாரத பூமி தான் பரி சளிக்க வேண்டுமென்றேனே. அதற்கு முன் இதோ என் பெண் கண்யாணியை உன் அறிவுப் பரிசாகத் தருகிறேன். உன் அம்மாவையும், அக்காளவ யும் கலந்து பேசி எழுதினல் வருகிற முகூர்த்தத்திலேயே முடித்து விடலாம்'' என்ருர் பூதலிங்கம்.

"என்னவோப்பா அன்னிக்கு இவர் சொன்னதிலேர்ந்து உன் னைப் பார்க்கணும், பார்க்க ணும்னு இருந்தேன், எங்கள் அதிர்ஷ்டம் நீ எங்கள் பெண் ணைப் பண்ணிக் கொண் டால்...'' என்ருர் திருமதி பூத லிங்கம்.

கோணிக் குறுகித் தன் குனிந்த தலையாலும், ஓரக் கண் பார்வையாலும் தன் சம்மதத் தைத் தெரிவித்துக் கொண் டாள் கல்யாணி.

அறிஞன், பேச்சாளன்...இத் யாதி நற்சாட்சிப் பத்திரங்களை சபாநாயகர் வாயிலாகப்பெற்ற பூரிப்பில் தலைநிமிர்ந்து தன் அறி வுப் பரிசான கல்யாணியை மனதிலெண்ணியபடியே பயண மானுர் வேதாந்தம் எம்.எல்.ஏ.

சுபாநாயகர் வீட்டுக் கல்யாண மல்லவா? சம்பிரதாயத்திற்குக் கேட்கவா வேண்டும்? வந்திருந்த மந்திரிகளையும், ஆபீசர்களையும், உத்யோக பூர்வமானவர்களையும், அது அற்றவர்களையும், பொது ஜனங்களில் சிலரையும் வரவேற்று உபசரித்ததிலேயே பூதலிங்கத்தின் பூத உடல் களைப்படைந்து விட்டது. காலையிலிருந்த கல்யாண 'சலசலப்பு' சிறிது ஓய்ந்திருந்தது. ஏதோ ஒரு தெய்வத்தின் பெயரை உச்சாடனம் செய்து கொண்டே சுவரின் பக்கத்தில் கிடந்த சாய்வுப் பலகையில் சாய்ந்தார். அவருடைய கண்கள் இரண்டும் மூன்று தினங்களாகச் சரியான உறக்கமில்லாததால் கனத்துப் போயிருந்தன. மெதுவாய்க் கண்களை மூடிய சமயம் அவர் சாய்ந்து கிடந்த சுவரை யொட்டினாற் போலிருந்த அறையிலிருந்து மாப்பிள்ளை எம். எல். ஏ. யின் குரல் கேட்டுக் கொண்டிருந்தது.

"மாணிக்கம், நீ இல்லா விட்டால் இவ்வளவு பட்டம் பதவிகளும், இந்தக் கல்யாணமும் நான் அடைந்திருப்பேனா? என் வாழ்வு பூராவும் உனக்குக் கடமைப் பட்டவன் நான்"—இது வேதாந்த மவர்களின் குரல்.

"அதென்ன அப்படிச் சொல்லி விட்டீர்கள்? உங்களுடைய பணத்துக்கும், கௌரவத்துக்கும் ஏற்ற இடந்தான் இது. இதில் என் பங்கு என்ன இருக்கு?"—இது இன்னொருவருடைய குரல். ஒரு வேளை மாப்பிள்ளை குறிப்பிட்ட மாணிக்கமாயிருக்கலாம்.

"பண மிருந்தென்ன மாணிக்கம்? பாவம் நீ ஏழை யென்பதற்காக, நான் சொன்னபடியெல்லாம் தியாகம் பண்ணிட்டே. நான் உதவி செய்வேன்னு சொன்னதற்காக, அப்போ பி. ஏ. பரீட்சையில் உன் பேப்பரில் என் நம்பரைப் போட்டு எழுதிட்டே. முடிவு? நான் ஒரு மண்டு; உன் தயவால் முதல் வகுப்பில் தேறினேன். ஆனால் நான் உன் நம்பரை வைத்து எழுதினேன், அதனால் நீ தேற வில்லை. என் அப்பா வைத்துப் போன பணத்தைக் கொண்டும், நீ எனக்குப் பிச்சை யிட்ட பி. ஏ. தேர்வைக் கொண்டும் எம். எல். ஏ. ஆனேன். ஜமீன் நஷ்ட ஈடு, வரி விதிப்பு, உணவுப் பெருக்கு இவைகளைப் பற்றிய உன் மணியான அறிவுத் திரட்டலை எழுதிக் கொடுத்தாய். அதை அப்படியே அசெம்பிளியில் வாசித்தேன். நீ கற்றுக் கொடுத்த கேள்விகளைத்தான் அங்கு ஒப்பித்தேன். அறிவும், உழைப்பும், திறமையும் உனக்கு; அவைகளால் வரும் பெயரும் கீர்த்தியும் எனக்கா? கல்யாணியை என் அறிவுக்குபரிசாகக் கொடுத்ததாய் மாமா சொன்னார். உண்மையில் என்னுடையதா அறிவு? என் அறிவுக்கா பரிசு? இதை நினைக்க நினைக்க என் மனம் கஷ்டப்படுகிறது மாணிக்கம். என் பண பலத்தாலும் தந்திரத்தாலும் ஒரு உண்மை அறிஞனை பாரதத் தாயின் கண்களுக்கு மறைத்து விட்டேன்...என்னை மன்னிப்பாயா மாணிக்கம்?" என்று தேம்பினான் வேதாந்தம்.

தம் மருமகனையும், உண்மை அறிஞனையும் ஜன்னல் வழியாகப் பார்த்தார் பூதலிங்க சாஸ்திரிகள். மருமகனின் கலங்கிய

கண்களைத் துடைத்துக் கொண்டு, ஒரு கண் குருடான இளைஞன் உட்கார்ந்திருப்பதைக் கண்டார்.

வெளிப் பூச்சில் மயங்கி பூதலிங்க சாஸ்திரிகளின் மனம் சஞ்சலமடைந்தது. வேதாந்தம ஒரு பேரறிஞன் என்ற அவருடைய தீர்ப்பு இவ்வளவு சீக்கிரம் பொய்த்து விட்டதை எண்ணிப் புழுங்கினர்.

“சமயமும், சந்தர்ப்பமும், பண வசதியும் இல்லாத காரணத்தினல் இம்மாதிரி எத்தனை அறிவுக் களஞ்சியங்கள் நாட்டில் அஞ்ஞாத வாசம் செய்கின்றனவோ? பணமென்ற ஏணியில், தூக்கி விடும் கூட்டங்களின் கைப் பிடிப்பால் ஏறிவரும் பொதுஜனப் பிரதிநிதிகளின் பாதிப் பேருக்காகிலும் உண்மை உழைப்பு ஆர்வமும், தியாகப் பண்பும், அறிவுத் திறனும், இக்குருடருக்குள்ளது போலிருந்தால்...” இத்தகைய எண்ணங்களால் சூழப்பட்ட பூதலிங்கம், இடத்தை விட்டு மெதுவாய் எழுந்தார். மறுபடியும் ஜன்னல் வழியாய் ஏழை ஒற்றைக் கண் அறிஞனைப் பார்த்து விட்டு சப்தமில்லாமல் அங்கிருந்து கிளம்பினர்.

மந்த புத்திக்காரனை
இந்திரன் சந்திரனென்று
வந்தனைகள் செய்வாங்கோ—நல்ல
சொந்த புத்திக் காரனைச்
சோற்றுக் கில்லாமற் போனல்
சோம்பேறி யென்பாங்கோ

என்ற சினிமாப் பாட்டைக் கல்யாணப் பந்தல் ஒலி பெருக்கி, கதறிக்கொண்டிருந்தது.

நான்கு டாக்டர்கள் தேவை

ஒரு வாலிப டாக்டருக்குத் திடீரென்று போன் மூலம் ஒரு தகவல் வந்தது. அவருடைய நண்பர்கள் மூவர் சீட்டு விளையாட்டுக்கு மேலும் ஒரு ஆள் தேவை என்று அவரைப் போன் மூலம் அழைத்தார்கள். அந்த மூன்று நண்பர்களும் டாக்டர்கள் தான்.

“வெளியே போகிறீர்களா?” என்று ஏதோ சந்தேகத்துடன் டாக்டரைப் பார்த்து மனைவி கேட்டாள்.

“ஆமாம். போகவேண்டி யிருக்கிறது. மிக முக்கியமான காரியம் ஏற்கெனவே அங்கே மூன்று டாக்டர்கள் போயிருக்கிருர்கள்.”

—ஜி. என். கோட்

ஜேர்மன் மகாகவி கத்தே

மகாகவி கத்தே ஜேர்மன் பாஷையை விண்ணுக்கு உயர்த்திய மேதாவி. இவர் தோன்றிய பிறகுதான், இவரால்தான் ஜேர்மன் பாஷையில் பேரிலக்கியங்கள் தோன்றின. கவிதையில் மட்டுமல்லாமல், எத்தனையோ பல சாஸ்திரங்களிலும் பேரறிவு படைத்தவர் கத்தே. கம்பர் ஷேக்ஸ்பியர் முதலிய ஒரு சில மகா கவிகளைத்தான் இவருக்கு 'உவமை' சொல்ல முடியும். இவருடைய சகல கலா ஞானத்தையும், வாழ்க்கை விவரங்கள் சிலவற்றையும் இக்கட்டுரை எடுத்துரைக்கிறது. இக்கட்டுரை ஆங்கில மூலத்தின் சாரமாகும்.

ரிச்சர்டு சர்ச்

ஜோஹன் உலப் காங்க் வான் கத்தே, 1749–ம் வருஷம், ஆகஸ்டு மாதம் 28–ம் தேதியில் பிறந்தார். அவர் பிறந்து நூறாண்டுகள் ஆகிவிட்ட போதிலும், இப்போதுதான் ஸாக்ரட்டீஸ், லியானர்டோ, பாஸ்கல் போன்ற மேதாவிகளைப் போல, சகல சாஸ்திரங்களிலும் ஞானமுள்ள தத்துவ சாஸ்திரி என்று ஒப்புக் கொள்ளப் பட்டிருக்கிறார்.

19–ம் நூற்றாண்டின் மத்தியில் கலைகள், விஞ்ஞான சாஸ்திரங்கள் போன்ற மனித ஞானத்தின் சிருஷ்டிகள் அமோகமாக வளர்ந்து விரிவு பெற்றிருந்தன. அதனால், ஒரு கலைக்கும் மற்றொரு கலைக்கும், ஒரு சாஸ்திரத்துக்கும் மற்றொரு சாஸ்திரத்துக்கும் தொடர்பற்று விட்டது. ஒவ்வொரு கலைத் துறையிலும் பணியாற்றும் அறிஞர்கள், தம் கலையை விட்டு வேறொன்றைக் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை. இந்த நிலை இன்றைய தினத்திலும் நிலவியுள்ளது. அரசியல் வாதிகள் வெறும் அரசியல் வாதிகளாக மட்டும் இருப்பார்களே ஒழிய தத்துவ ஞானிகளாகவும் இருப்பதில்லை. விஞ்ஞானிகளோ அநேகமாக முரட்டுத்தனமான பூர்வீக காட்டுமிராண்டிகளாக இருப்பார்கள். கவிஞர்கள், அரசாங்கம், விஞ்ஞானம் ஆகியவற்றின் நடைமுறையை அறியாத வெறும் சௌந்தர்ய உபாசகர்களாகத்தான் பெரும்பாலும் இருப்பார்கள். சர்வகலாசாலைகளோவென்றால், சில குறிப்பிட்ட விஷயங்களை மட்டும் வரட்டுத் தனமாகப் போதிப்பதுடன் நின்றுவிடும். இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் கத்தே சாதித்தது என்ன? பழையபடியும் சகல சாஸ்திரங்களிலும் ஒரு தனி மனிதன் பணியாற்ற முடியும்

கத்தே

என்பதை மக்கள்முன் எடுத்துக் காட்டியதுதான். இந்தச் சாதனையில் அடைந்த வெற்றிக்காக (அல்லது ஒரு வேளை தோல்விக்காக)வே கத்தே இதிகாச பாத்திரம் போலப் பிரசித்தியை அடைந்திருக்கிறார்.

கத்தே பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவர். அவர் பிறந்த குடும்பம் பிராங்க்பர்ட் நகர பரிபாலனத்தில் பிரதான பங்கு எடுத்திருந்தது. அது பணம் புரளும் பெருத்த வியாபார நிலையமாக இலங்கி வந்த நகரமாகும். கத்தே பிறக்கும்போது, அந்த நகரத்தில் வாழும் மக்கள் மத்திய கால வாழ்க்கைமுறையையே அனுஷ்டித்து வந்தனர். கத்தேயின் தந்தை ஒரு பண்க்கார, ஆனல் நடுத்தர, வக்கீல். பழைய நகரப் பகுதியில் இருந்த தம் பிரமாண்டமான வீட்டில் சகல செளகரியங்களுடன் குடும்பத்தை நடத்தி வந்தார். அந்தஸ்து, பண்பாடு, லளித கலைகள் முதலியவற்றின சூழ்நிலையில் கத்தேக்குக் கல்வி ஞானம் போதிக்கப் பட்டது. ஆனல் 1756-ல் ஆஸ்திரியாவுக்கும் பிரஷியாவுக்கும் இடையே ஏழாண்டுப் போர் தொடங்கியது. அதன் பயனாக, குடும்பத்தின் ஒற்றுமை குலைந்து விட்டது. எப்படியென்றால், கத்தேயின் பாட்டனார் மேரியா தெரிஸாவின் கட்சியிலும், கத்தேயின் தகப்பனார் மகா பிரடெரிக்கின் கட்சியிலும் சேர்ந்துகொண்டனர்.

சிறு வயதில் கத்தே

மேலும், ஆஸ்திரியாவின் நேச நாட்டாரான பிரெஞ்சுக் காரர்கள் அந்த நகரத்தை ஆக்கிரமித்து வசப்படுத்திக் கொண்டனர். ஒரு பிரெஞ்சு உத்தியோகஸ்தர் கத்தேயின் வீட்டிலேயே குடியிருத்தப் பட்டார். இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் குழந்தை கத்தேயைப் பாதித்தன. அவர் "கவிதையும் உண்மையும்'' என்ற தம் சுய சரிதையில், தாம் ஆறு வயதாக இருக்கும்போது லிஸ்பன் நகரில் ஏற்பட்ட பூகம்பம் தம்முடைய தெய்வ நம்பிக்கையை மூட்டோடு அசைத்து விட்டது என்று கூறியிருக்கிறார். இப்பொழுதோ, அவருடைய சொந்த வீட்டிலேயே பூகம்பம் ஏற்பட்டுவிட்டது. இந்த பூகம்பம் குடும்ப வாழ்க்கை சமூக உறவுகள் முதலியவற்றின் சம்பிரதாயப் பழக்கங்களை மூட்டோடு அசைத்து விட்டது. எப்போதும் உளைந்து உளைந்து காரணகாரியத்தை ஆராயும் அவருடைய மூளை, இந்த நிகழ்ச்சிகளினால் பாதிக்கப்பட்டு சிம்மதியை இழந்து விட்டது. இப்படியே வளர்ந்து வாலிபத்தின் ஆரம்ப தசையை எய்தினர். அப்போது கத்தே ஒரு இளம் கலகக்காரனைப்போலவே இருந்தார். பிறகு அவருக்குப் பலருடன் நட்புறவுகள் ஏற்பட்டன. ஆனல் அவை உண்மை நட்பா என்பது சந்தேகமே. அப்படிப்பட்ட நட்புகளில் அவருடைய முதல் காதலும் ஒன்று. பதினறு வயதுள்ள

ரெட்சன் என்னும் யுவதியைக் காதலித்து, பிறகு அதன் பயனாக ஏற்பட்ட விவகாரங்களால் கத்தே, லீப்ஸிக் சர்வ கலாசாலைக்கு அனுப்பப்பட்டார். அங்கே வெகு சீக்கிரததிலேயே, ஒரு ஒயின் வியாபாரியின் மகளைக் காதலிக்கத் தொடங்கினர். அவர் தம் வாழ்நாள் முழுவதிலும் உணர்ச்சி வசப்பட்டு சாதித்து வந்த வீரப் பிரதாபங்களுக்கு இதுவே ஆரம்ப காலம். பெண்கள்பால் உறவு கொள்ளுவதில் வெகு சீக்கிரத்தில் புலன் வசப்படுகிறவர் கத்தே. ஆனல் எந்த ஒரு பெண்ணிடத்திலும் அவர் எப்பொழுதும் பரிபூரண திருப்தி கண்டவரில்லை. கடைசியில், தாம் பல வருஷங்களாக அபிமான ஸ்திரீயாக வைத்திருந்த ஒரு குடியானவப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டார். கல்யாணத்தின்போது ஏற்கெனவே அவர்களுக்குப் பிறந்த பதினேழு வயதுப் பையனும் வந்திருந்தான்.



முதுபெரும் அறிஞர் கத்தே,

தம்மைக் கவர்ந்த பெண்களில் பலரை கத்தே தம் எழுத்துக்களின் மூலம் சிரஞ்சீவிகளாக்கிவிட்டார். அந்தப் பெண்களில் பிரெடரிக்கா பிரியோன் என்பவள் ஒருத்தி. அவள் ஒரு பாதிரியாரின் மகள். கத்தே ஸ்டார்ஸ்பார்க் சர்வ கலாசாலையில் படித்து வந்தபோது, அந்தப் பாதிரியாரின் வீட்டுக்கு அடிக்கடி செல்வதும் உண்டு. அவளைப் பற்றி கத்தே தம் சுய சரிதையில் எழுதியிருக்கிறார். ஜெர்மன் இலக்கியத்திலேயே, (அல்லது எந்த நாட்டு இலக்கியத்திலும்) இது போன்ற ஒரு உருக்கமான காதல் கதையைக் காண்பது அபூர்வம். தாம் எப்படி பைத்தியமாகப் போகும் அளவிற்குக் காதலித்தார் என்பதையும், தாம் தற்கொலை செய்து கொள்ளத் துணிந்து, பிறகு புத்திசாலித்தனத்துடன் (அல்லது சுய நலத்துடன்) அந்த பந்த பாசங்களை விட்டு அறவே விலகிச் சென்றதையும் எழுதியிருக்கிறார் கத்தே.

கத்தேயின் சுய சரித்திரம், அவருடைய உள்ளத்தைப் பற்றிய

விவகாரங்களை மட்டுமின்றி அவருடைய அறிவைப் பற்றிய விவகாரங்களையும் எடுத்துக் கூறுவதில் பூரணத்துவம் பெற்றுள்ளது. கத்தேயின் பல திறப்பட்ட அபிலாஷைகளையும், ஆற்றல்களையும் அறிந்து அவருடைய இயல்பு இன்னதென்பதை தெரிந்து கொள்ள வேண்டுமானல் பற்பல கண்ணோட்டங்களுடன் அவருடைய சுய சரித்திரத்தைப் படிக்க வேண்டும். அந்தச் சரித்திரத்தில் நூற்றுக் கணக்கான மக்கள் வந்து போகிறார்கள். ஏதோ ஓரிடத்தில் தலை காட்டி மறையக் கூடியவர்களும் சதையும், ரத்தமும், தனி இயல்பும் கொண்ட ஜீவன்களாகக் காட்சி யளிக்கிறார்கள். அது, ஒரு அதீதமான மேதை ஞானத்தை ஈட்டிய கதையாகும்.

சங்கீதத்தைத் தவிர, மற்ற சகல விஷயங்களிலும் அவருடைய கவனம் சென்றது. அவருக்கு, கவிதை, சரித்திரம், ஓவியம், தாவர சாஸ்திரம், உடற்கூறு சாஸ்திரம், விவசாயம், புதை பொருள் ஆராய்ச்சி, கண்ணைப் பற்றிய சாஸ்திரம் முதலிய துறைகளில் எல்லாம் ஞானம் உண்டு என்று வரலாறு கூறுகிறது. மண்டையோட்டில் காணப்படும் எலும்பு ஒன்றை அவரே முதலில் கண்டு பிடித்தார். உயிர் ராசிப் பரிணாம தத்துவத்தைப் பற்றிய கருத்துக்களை டார்வினுக்கு முன்பே கத்தே வெளியிட்டார். வர்ணங்களின் மூல உற்பத்தியைப் பற்றி நியூடன் வெளியிட்ட தத்துவங்களை கத்தே மறுக்கவும் துணிந்தார். இதெல்லாம் போக வைத்தியம், சட்டம் முதலியவற்றையும் கத்தே கற்றிருந்தார்.

*　　*　　*

கத்தே, 1786–ல் ஆல்ப்ஸ் மலையைத் தாண்டி, ஐரோப்பிய நாகரிகத்தின் நடுநாயக ஸ்தானமாக இலங்கிய லாம்பர்டி பிரதேசத்துக்கு வந்தார். அப்போது அவர் மனவெளியில் ஏதோ ஒரு காரியம் நடந்துவிட்டது. அதன் பயனாக அவருடைய கற்பனை பிரம்மாண்டமான அருவியாகப் பெருக்கெடுத்து ஓடத் தொடங்கியது. சகல துறைகளைப்பற்றிய ஞானங்களுக்கும் ஒரு பொதுவான மத்திய ஸ்தானம் இருப்பதாக அவருடைய மனக் கண்ணுக்குப் புலப்பட்டது. ஆகவே தம் சகல ஆராய்ச்சிகளையும், உழைப்புகளையும் அந்த மத்திய ஸ்தானத்துக்குக் கொண்டுவந்தார். பழைய கிரேக்க தத்துவ ஞானிகளைப் போலச் செயலாற்றவும் உத்தேசித்தார். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் கிரேக்க அறிஞர் தேல்ஸ் தண்ணீர் என்ற ஒரு வஸ்துவிலிருந்தே சகல உயிர் வர்க்கமும் தோன்றியது என்று கூறியதை, ஏக-வாத ஞானியான கத்தேயும் ஆதரித்தார்.

கலையிலும், வாழ்க்கையிலும் காவியப் பண்பைக் கண்டார் கத்தே. தம்முடைய சொந்த வாழ்க்கையின் அடிப்படையில்தான் இவ்வாறு கண்டறிந்தாரே ஒழிய, புத்தகப் படிப்பிலிருந்தல்ல. இந்த ஞானத்தின் விளைவாகவே கவிதைகளையும், வசன இலக்கியங்களையும் அமோகமாகச் சிருஷ்டித்தார். இந்த இலக்கிய சிருஷ்டிகள், அதுவரையிலும் ஊர் பேர் தெரியாமல் ஓரிடத்தில் வளர்ச்சியின்றிக் கிடந்த ஜெர்மன் பாஷையை, ஐரோப்பாவின் தலை சிறந்த கலை ஞானத்தை வெளியிடத் தக்க ஆற்றல் சான்ற பாஷையாக்கி விட்டன. கத்தேக்கு முன்னால் ஜெர்மனியில் க்ளாப்ஸ்டாக் என்ற ஒரு காவிய கர்த்தா இருந்துள்ளார். அவருடைய காவியம் தேடுவாரற்று, காலத்துக்கு ஒவ்வாத சரக்காகத்தான் இருந்தது. கத்தேக்குப் பின்னால்தான் ஜெர்மன் இலக்கியம் முழுவதுமே தோன்றியது. கத்தே காலத்தில் இளைஞர்களாக இருந்த ஸ்கில்லர், ஹோல்டர்லின் முதல் இன்றைய தினம் வாழும் தாமஸ் மான், கவிஞர் ரில்கி வரை பலரும் இலக்கிய சிருஷ்டி செய்தது கத்தேக்குப் பிறகுதான். தாமஸ் மானும், ரில்கியும் கத்தேக்கு மிகமிகக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

இத்தாலியில் கத்தே. கத்தேயின் நெருங்கிய நண்பர் டிஷ்பீன் வரைந்த ஓவியம்

விஞ்ஞானம் அரசியல் சம்பந்தப் பட்ட பல துறைகளில் கத்தே ஈடு பட்டிருந்தபோதிலும், அத்துறைகளில் அவர் வெளியிட்ட தத்துவங்கள் இன்று காலத்துக்கு ஒவ்வாதனவாகப் போய் விட்டன. கத்தேயின் இலக்கியத்தில் காணப்படும் நாடகப் பண்பையும்கூட மற்றவர்கள் வென்றுவிட்டார்கள் என்று சொல்லிவிடலாம். கத்தேயின் காலத்தில் வாழ்ந்த ஸ்கில்லரே நாடகப் பண்பில் கத்தேயை வென்றுவிட்ட தாகக் கூறலாம். ஆனல், அவருடைய அசைக்க முடியாத மகா சாதனை என்ன? அந்த மகாகவி, ஜெர்மன் பாஷைக்கு இசையமைதி தந்தார். அதற்கு மென்மையும், அழகும். ஆத்மீக நுணுக்கங்களும் நல்கினுர். அந்த மொழியில் இத்தனை பெருமை களையும் பொதிந்து, அதை ஜெர்மன் மக்களிடம் உள்ள மகத்தான பண்பு களை எல்லாம் எடுத்துரைக்கும் கருவி யாகப் பயன்படுத்துவதற்காகப் பிற கவிஞர்களுக்கு வழங்கினுர் கத்தே.

கத்தே சமாதானத்தை உண்டு பண்ணும் மிகப் பெரிய மனிதர். அவ ருடைய ''பாஸ்ட் என்னும் இலக்கியம் ஐரோப்பிய மேதா விலாசத்தினுடைய ஆத்மீக வரலாருகும். அவருடைய சுயசரித்திரமோ, ஒரு இளைஞன் தன் னுள்ளே அடங்கியிருக்கும் சக்திகளைக் கண்டு அறிந்த வரலாறும் நாடகமும் ஆகும். இந்த நூல்களை அவசியம் படிக்கவேண்டும்.

ஐவான் துர்கனேவ் (1818—1883) முதல் முதலில் உலகப் புகழைச் சம்பாதித்த ருஷ்ய எழுத்தாளர். டால்ஸ்டாயை விடப் பத்து வயது மூத்தவர். இருவரும் நண்பர்கள். மாப்பஸான் கதைகளில் துர்கனேவுக்கு ஈடுபாடு அதிகம். விவசாயிகளைப் பற்றி சிறந்த இலக்கியங்களைச் சிருஷ்டித்துள்ளார். இவர் எழுதியபின், விவசாயிகளைப் பற்றி எழுத எந்த விஷயமும் மிஞ்சவில்லை என்று கூட கோன்சரேவ் என்னும் அறிஞர் கருதினார். 1878-ல் எழுதப்பட்ட கவிதைகளில் சில வற்றின் வசன உருவமே இந்தச் சாகாவரம் பெற்ற குட்டிக் கதைகள்.

குட்டிக் கதைகள்

★

ஐவான் துர்கனேவ்

சந்திக்காதவர்கள்

முன்னொரு காலத்தில், கடவுள் தம்முடைய ஆகாய—நீல மாளிகையில் ஒரு பிரமாதமான விருந்து ஏற்பாடு செய்தார். விருந்துக்கு எல்லா நற்குணங்களும் விருந்தினர்களாக அழைக்கப்பட்டிருந்தன. நற்குணங்கள் மட்டுமே அழைக்கப்பட்டிருந்ததால் ஆண்கள் அழைக்கப்படவில்லை என்பதும், பெண்கள் மட்டுமே அழைக்கப் பட்டிருந்தார்கள் என்பதும் தெளிவு.

பெரியவர்களும் சிறியவர்களுமாக ஏராளமான பெண்கள் வந்து கூடியிருந்தனர். சிறிய நற்குணங்கள் பெரிய நற்குணங்களைவிட அதிக மிருது பாவத்துடனும், ஒத்துப் போகும் மனப் பான்மையுடனும் விளங்கின. ஆனால், பொதுவாக எல்லா நற்குணங்களுமே மனத் திருப்தியுடன் இருந்தன; தம்முள் நெருங்கிய உறவினர்களைப் போலவும் நண்பர்களைப் போலவும் சுமுகமாகப் பேசிக் கொண்டிருந்தன.

ஆனால் அங்கே இரண்டே இரண்டு பெண்கள் மாத்திரம் முன்பின் பரிச்சயம் இன்றி இருந்தனர்; பரஸ்பரம் ஒருவரை ஒருவர் யார் என்று அறியாமல் இருந்தனர். இதைக் கடவுள் கவனித்துக் கொண்டார். உடனே அவர் பக்கத்தில் வந்து ஒரு பெண்ணைக் கையைப்பிடித்து மற்றொரு பெண்ணிடம் அழைத்துச் சென்று, "இவள் தான் 'தான தர்மம்' என்பவள்" என்று அறிமுகப்படுத்தினார். பிறகு, அந்த மற்றொரு பெண்ணை முதல் பெண்ணுக்கு அறிமுகப்படுத்தும் போது, "இவளுடைய பெயர் 'நன்றி' என்பதாகும்." என்றார்.

இரண்டு பெண்களுக்கும் ஒரே ஆச்சரியம்! உலக ஆரம்பத்திலிருந்து—அப்படி என்றால் எவ்வளவோ காலமாக—அந்த இருவரும் ஒருவரை ஒருவர் சந்தித்ததே கிடையாது.

உப்பு வீணாகலாமா ?

ஒரு விதவையம்மாளுடைய ஏக புத்திரன் செத்துப் போய்விட்டான். சாகும்போது அவனுக்கு இருபது வயது. நல்ல வாலிபன்; அந்த

ஊரிலே நல்ல உழைப்பாளியாக இருந்தவன்.

அவனைச் சவ அடக்கம் செய்யும் தினம். விதவையம்மாளின் துயரத்தைக் கேள்விப்பட்ட அந்த ஊர் பண்ணையார் வீட்டு அம்மாள் துக்கம் விசாரிப்பதற்காக வந்தாள். அவள் வரும்போது விதவையம்மாள் வீட்டிலே தான் இருந்தாள். குடிசையின் நடுவிலே கிடக்கும் மேஜையோரத்தில் நின்று, வலது கையினால் ஒரு கரண்டியில் கூழை * எடுத்து நிதானமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். இடதுகை, சவுக்கைப் போலத் தொங்கிக் கொண்டிருந்தது. அந்த ஏழை உணவை ஒவ்வொரு கரண்டியாக புகை பிடித்த சட்டியிலிருந்து சுரண்டி வழித்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

விதவையம்மாளின் முகம் வாடி வெளுத்துப் போயிருந்தது; கண்கள் வீங்கி, செக்கச் செவேர் என்றிருந்தன...ஆனாலும் மாதாகோவிலில் நிற்பவளைப் போல, அந்தஸ்துடன் நிமிர்ந்து நின்று கொண்டிருந்தாள். இதைப் பார்த்த பண்ணையார் வீட்டு அம்மாள், 'அ— தெய்வமே! இந்த நேரத்தில் இவளால் சாப்பிடவும் முடிகிறதா?...இந்த ஜனங்களின் உணர்ச்சி எப்படி மரத்துப் போயிருக்கிறது?'' என்று மனதுக்குள்ளேயே அங்கலாய்த்தாள்.

பண்ணை வீட்டு அம்மாளுக்கு, சில வருஷங்களுக்கு முன்னால் தன்னுடைய ஒன்பது மாதப் பெண் குழந்தை இறந்ததும், அப்போது துக்கமேலீட்டால் பீட்டர்ஸ்பர்க் நகரத்துக்குப் பக்கமாக அழகான நாட்டுப்புற வீடு ஒன்றை வாடகைக்குப் பிடித்து வந்து வசிக்க மறுத்து, கோடை காலம் முழுவதையும் நகரத்திலேயே தான் கழித்ததும் ஞாபகத்துக்கு வந்தது. ஆனால் இந்த குடியானவ ஸ்திரீயோ கொஞ்சம்கூட துக்க விசாரமின்றி கூழை அள்ளிக் குடித்துக் கொண்டிருக்கிறாளே என்று ஆச்சரியப்பட்டாள், துக்கம் விசாரிக்க வந்த அம்மாள். இதைக் காண அவளுக்கு சகிக்கவில்லை. உடனே உரத்த குரலில் கேட்டுவிட்டாள்:

''தாய்யானு! எனக்கு திடுக்கிட்டு விட்டதே! உன் மகன் மேல் உனக்குப் பிரியம் கிடையாதா? உனக்கு இப்பொழுது பசியும் எடுக்கிறதா! நீ எப்படித்தான் உன்னால் கூழை சாப்பிட முடிகிறது!''

குடியானவ ஸ்திரீயின் கன்னங்களில் மறுபடியும் வேதனை மிக்க கண்ணீர் வழிந்தோடியது. அப்போது அவள் அமைதியாகப் பதில் சொன்னாள்:

''என் வாஸ்லியா செத்துப்போய் விட்டான். ஆகவே, எனக்கும் முடிவு காலம் வந்துவிட்டது. நான் உயிரோடு இருக்கும்போதே என் தலை வெட்டப்பட்டுவிட்டது. ஆனால், அதற்காக இந்தக் கூழை என் வீணாக்க வேண்டும்? இதில் உப்புப் போட்டிருக்கிறது.''

பண்ணை வீட்டம்மாள் தோளை ஒரு குலுக்குக் குலுக்கிக் கொண்டு, பேசாமல் போய்விட்டாள். அவளுக்கு உப்பு என்பது மிக மிக அற்பமான பொருள்.

குருவியும் குஞ்சும்

ஒரு சமயம் நான் வேட்டைக்குப் போய்விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தேன். ஒரு தோட்டத்தின் வழியாக வரும்போது, என்னுடைய நாய் எதையோ மோப்பம் பிடித்துக் கொண்டுவிட்டது. அதனால் சாவதானமாக நடக்கத் தொடங்கியது. நான்

---

* மூலக் கதையில் கூழ் என்று குறிப்பிடப் படவில்லை; கீரைக் குழம்பு என்று தான் கூறப்பட்டிருக்கிறது. தமிழில் 'கூழ்' என்று கூறினால் தான் மூல ஆசிரியர் நினைத்த கருத்து நன்கு புலப்படும் என்னும் நோக்கத்துடன் இவ்விதம் தமிழ்ப் படுத்தப்பட்டுள்ளது. (மொ. பெ.)

சுற்று முற்றும் பார்த்தேன. குருவிக் குஞ்சு ஒன்று கீழே கிடந்தது. அதனுடைய அலகுப் பக்கம் மஞ்சள் நிறமாக இருந்தது. அப்போது முரட்டுக் காற்று அடித்தபடியால், அந்தக் குஞ்சு மரத்திலுள்ள கூட்டிலிருந்து கீழே விழுந்து விட்டது. நாதியற்ற நிலேயில், அந்த சிறு குஞ்சு ஆடாமல் அசையாமல் இருந்தது.

என்னுடைய நாய் குருவிக் குஞ்சின் பக்கம் கொஞ்சம் கொஞ்சமாக நெருங்கிச் சென்று கொண்டிருந்தது. அப்போது மரக்கிளேயிலிருந்து ஒரு குருவி கல்லேப்போலக் கீழே விழுந்தது. அதன் மார்பகத்துத் தூவி கறுப்பாக இருந்தது. கீழே விழுந்ததும், அதன் தூவியைச் சிலிர்த்துக் கொண்டு நாயின் திறந்த வாயை நோக்கி இரண்டு தடவை குதித்தது. பிறகு, தன்னுடைய குஞ்சை, தன் சின்னஞ் சிறிய சரீரத்தினல் மறைத்துப் பாது காத்தது. பயத்தினல் அதன் உடம்பெல்லாம் நடுங்கியது. அதனுடைய சிறு குரல் முரட்டுத்தனமாகவும், காட்டுத்தனமாகவும் மாறிவிட்டது. பயபீதியில் ஆழ்ந்திருந்தபோதிலும், அந்தத் தாய்க் குருவி தன்னைத் தியாகம் செய்து கொண்டிருந்தது!

நாய், அதன் கண்களுக்கு எவ்வளவு பெரிய பூதமாகத் தோன்றியிருக்கும்! ஆனல், தன்னுயிரை நினைத்து அது மரக்கிளேயிலேயே உட்கார்ந்து விடவில்லே. ஒரு சக்தி, அதன் மனே சக்தியைவிடப் பலம் பொருந்திய ஒரு சக்தி, அதை உந்தித் தள்ளிவிட்டது.

என்னுடைய நாயும் ஒன்றும் செய்யாமல் பின்வாங்கிவிட்டது ... அந்த சக்தியை நாயும்கூட ஒப்புக் கொண்டு விட்டது! நாயை அழைத்துக் கொண்டு, மிகுந்த பக்தியுடன் அப்பால் சென்று விட்டேன்.

பக்தி என்று சொல்வதைக் கண்டு சிரிக்காதீர்கள். அந்தச் சிறு பறவையிடமும், அதன் பேரன்பினிடமும் எனக்குப் பக்தி ஏற்பட்டது. அப்பொழுது நினைத்தேன் : அன்பு மரணத்தையும் விட, மரண பயத்தையும் விட வலிமை பொருந்தியது. அன்பு, வாழ்க்கையின் ஊன்றுகோல் ; வழி காட்டி.

இரண்டு பணக்காரர்கள்

மிகப் பெரிய கோடீஸ்வரரான ரோத்ஸ் சைல்டு, சிறுவர்களின் கல்விக்காகவும், நோயாளிகள் வயோதிகர்கள் முதலியவர்களின் உதவிக்காகவும் ஆயிரக் கணக்கில் அள்ளிக் கொடுப்பதைப் பாராட்டி அவரைப் புகழும் போதெல்லாம் நானும் அவரைப் பாராட்டுவேன் ; அவருடைய கொடையைக் கண்டு மனம் பரவசம் அடைவேன். அவரைப் புகழும்போது கூட எனக்கு ஒரு ஏழைக் குடியானவக் குடும்பத்தின் ஞாபகம் வராமல் போகாது. அந்தப் பரம தரித்திரனை குடியானவன் தன் இடிந்து சரியும் குடிசைக்கு, அனதையாகத் தவிக்கும் தன் தங்கையின் மகளே அழைத்து வந்தான். உடனே அவனுடைய வீட்டுக்காரி—அந்த வயது முதிர்ந்த ஸ்திரீ— சொன்னுள் : "காத்யாவை நம் வீட்டுக்கு அழைத்து வந்து விட்டால், அவள் பொருட்டு நம்மிடம் இருக்கும் இாண்டொரு காசுகளேயும் செலவு செய்ய வேண்டிவரும். அப்புறம், நம் தினசரிச் சாப்பாட்டுக்காக உப்பு வாங்குவதற்கு நம்மிடம் காசு இல்லாமல் போய்விடும்."

குடியானவனே, "நல்லது. அப்படியானல் நாம் உப்புப் போடாமலே சாப்பிடுவோம்" என்முன்.

இந்தக் குடியானவனுக்குக் கீழே எத்தனேயோ படிகளுக்கு அப்பால் இருக்கிருர் ரோத்ஸ் சைல்டு!

கிறிஸ்து நாதர்

ஒரு நாள் ஒரு கனவு கண்டேன் : ஒரு நாட்டுப்புற மாதாகோவில். அதில் ஒரு வாலிபன் ; ஏறக்குறைய பையனேப் போன்ற தோற்றம். கோவி

வில் சந்நியாசிகளின் சித்திரங்களுக்கு முன்பாக சிறு மெழுகுவத்திகள் செம்புள்ளிகளைப் போல மினுங்கிக் கொண்டிருந்தன. அங்கே இருள் மண்டியிருந்தது. எனக்கு முன்னால் பலர் நின்று கொண்டிருப்பதைப் பார்த்தேன். எல்லோருடைய தலைகளும் விவசாயிகளின் தலைகள்தான். கோடைக் காற்று மெதுவாக வீசும் போது, முதிர்ந்த தானியக் கதிர்கள் அமிழ்ந்து எழுவது போல, தலைகள் இங்கும் அங்கும் அசைந்து கொண்டிருந்தன.

நான் அந்த வாலிபனை நோக்கித் திரும்பவில்லை. ஆனால் அவன்தான் கிறிஸ்துநாதர் என்பதை உணர்ந்து கொண்டேன். உணர்ச்சி வசப்பட்டும், அதிசயத்தினாலும், பயத்தினாலும் நான் தன்னை மறந்துவிட்டேன். இருந்தாலும் சமாளித்துக் கொண்டு அருகில் நிற்கும் அந்த வாலிபனைப் பார்த்தேன். அவனுடைய முகம் எல்லோருடைய முகங்களைப் போலவே, சாதாரண மனிதனுடைய முகத்தைப் போலவே இருந்தது. கண்கள் ஆழ்ந்த கவனத்துடன் மேல் நோக்கிப் பார்த்தன. உதடுகள் மூடியிருந்தன. தாடியோ நீளமாக இல்லாமல், குட்டையாகவும் இரண்டாகப் பிரிந்தும் இருந்தன. அவருடைய உடைகளும் மற்றவர்களுடைய உடைகளைப் போலத்தான்.

"ஆச்சரியமான கிறிஸ்துதான்! இவ்வளவு சாதாரணமான ஆளா கிறிஸ்து! இது கிறிஸ்துவாக இருக்க முடியாது!" என்று எண்ணினேன்.

மறுபக்கம் திரும்பினேன். திரும்பியதும், அந்த வாலிபன் நிச்சயமாகக் கிறிஸ்துதான் என்று எனக்குத் தோன்றியது.

மறுபடியும் திரும்பிப் பார்த்தேன்... பழையபடியும் அதே முகம்! மற்ற மனிதர்களுடைய முகங்களைப் போன்ற முகம்!

ஆச்சரியத்தினால் ஸ்தம்பித்து விட்டேன்—உறக்கம் கலைந்து விழித்து எழுந்தேன். பிறகுதான், இப்படிப் பட்ட முகம்தான், மற்ற மனித ஜீவன்களின் முகத்தைப் போன்ற முகம்தான், நிச்சயமாகக் கிறிஸ்து நாதரின் முகமும் ஆகும் என்ற உண்மையை உணர்ந்தேன்.

பிச்சைக்காரன்

ஒரு நாள் நான் சாலையைத் தாண்டிப் போய்க்கொண்டிருந்தேன். அப்போது கட்டுக்குலைந்த கிழட்டுப் பிச்சைக்காரன் ஒருவன் என் வழியை மறித்தான். அவனுடைய கண்கள் பஞ்சடைந்து, சிவந்துபோய் இருந்தன; உதடுகளில் நீலம் பூத்திருந்தது. கந்தல் துணிகளைத் தரித்துக்கொண்டு, உடம்பெல்லாம் ஆறாத புண்களுடன் வந்து நின்றான். பரிதாபகரமான இந்த ஜீவனை வறுமை எப்படி உருக்குலைத்துக் கோரமாக்கிவிட்டது!

தன் ஆபாசமான வீங்கிய கையை ஏந்தினான். கை சிவந்திருந்தது. அவனுடைய முனகும் குரல் பிச்சை கேட்டது. நான் என் சட்டைப் பைகளைத் துழாவினேன்...பணப் பை இல்லை; கடிகாரம், கைக்குட்டை ஆகியவையும்கூட பைகளில் இல்லை...என்னிடம் எதுவும் இல்லாமல் இருந்தது.

பிச்சைக்காரனோ எதிர்பார்த்த வண்ணம் கையேந்திக்கொண்டு நின்றான். அவனுடைய கை நடுங்கியது.

எனக்கு வெட்கமாகவும் குழப்பமாகவும் இருந்தது. அந்த ஆபாசமான, நடுங்கும் கையைப் பற்றி, அழுத்திப் பிடித்துக்கொண்டேன். "சகோதரனே! தப்பாக நினைத்துக் கொள்ளாதே. உனக்குக் கொடுக்க என்னிடம் எதுவுமில்லை, சகோதரா!"

சிவந்த கண்களால் என்னை உற்றுப் பார்த்தான் பிச்சைக்கான். நீலம் பூத்த அவன் உதடுகள் புன்னகை செய்தன—பதிலுக்கு என் குளிர்ந்த விரல்களைப் பிடித்து அழுத்தினான்.

கனத்த குரலில், "சகோதரா! இதற்காகவும் உனக்கு நன்றி செலுத்துகிறேன். இதுவும் தானதர்மம்தான்" என்று முனகினான் பிச்சைக்காரன்.

நானும்கூட என் சகோதரனிடம் தானம் வாங்கினேன் என்பதை உணர்ந்தேன்.

கடைசிச் சந்திப்பு

ஒரு காலத்தில் நாங்கள் நெருக்கமான, அந்யோன்யமான நண்பர்களாக இருந்தோம். பிறகு துரதிர்ஷ்டமான ஒரு காலம் வந்தது. நாங்கள் விரோதிகளைப்போலப் பிரிந்துவிட்டோம்.

பல வருஷங்கள் சென்று விட்டன. ஒரு நாள் அவன் வசித்து வந்த நகருக்கு நான் போயிருந்த போது, அவன் கவலைக் கிடம்தரும் முறையில் உடல் நலமின்றி படுத்திருக்கிறான் என்றும், என்னைப் பார்க்க விரும்புகிறான் என்றும் கேள்விப் பட்டேன்.

அவன் வீட்டுக்குப் போனேன்; அவன் படுத்திருக்கும் அறையில் நுழைந்தேன்...எங்கள் கண்கள் சந்தித்தன.

அவனை அடையாளம் கண்டு கொள்ளக் கூட முடியவில்லை. தெய்வமே! நோய் அவனை எப்படி வருத்திக் குலைத்திருக்கிறது! மஞ்சள் பூத்து, உடம்பில் சுருக்கல் விழுந்து போயிருந்தான். தலை மயிரெல்லாம் உதிர்ந்து வழுக்கையாகி விட்டது. தாடியில் இரண்டொரு ரோமங்களே இருந்தன. தன் இரவு—உடையில் அவன் உட்கார்ந்திருந்தான். அந்த உடையும் கூட வேண்டு மென்றே கிழித்து விடப் பட்டிருந்தது. ஏனென்றால், இந்த நிலையில் அவனுக்குக் கொஞ்சம் இறுக்கமாக இருந்தாலும் தாங்க முடியவில்லை. அவனுடைய கை மெலிந்து வெறும் எலும்புச் சட்டமாகவே இருந்தது. என்னை நோக்கித் தன் தள்ளாடும் கையை நீட்டினான். மிகவும் சிரமப்பட்டு, அதிகப் பிரயத்தனத்தின் பேரில் இரண்டொரு வார்த்தைகளைப் பேசினான். அவை இன்ன வார்த்தைகள் என்று கூடக் கண்டு கொள்ளுவதற்கு இயலவில்லை. அதனால், அவை என்னை வரவேற்கும் வார்த்தைகளா அல்லது தூஷிக்கும் வார்த்தைகளா என்றும் கண்டு கொள்ள முடிய வில்லை.

அவனுடைய மெலிந்து போன மார்புக் கூடு விம்மியது. வேதனைக் கண்ணீரின் இரு திவலைகள் சொருகிப் போன விழிகளில் பொங்கி உருண்டன.

என் உள்ளம் இடிந்து விட்டது. அவன் பக்கத்தில் நாற்காலியில் உட்கார்ந்தேன். என்னை யறியாமல் என் கண்கள் அந்தப் பயங்கரமான, நோய் பீடித்த சித்திரத்தின் முன் கவிழ்ந்தன. நானும் என் கையை நீட்டினேன்.

என்னுடைய கையைப் பற்றியது அவனுடைய கரம் அல்ல என்ற உணர்ச்சி எனக்கு ஏற்பட்டது. உயரமான, அமைதி நிறைந்த, வெளுத்துப் போன ஒரு ஸ்திரீ உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை ஒரு நீளமான சவப் போர்வையைப் போர்த்திக் கொண்டு எங்கள் இருவருக்கும் நடுவில் உட்கார்ந்திருப்பது போல் தோன்றியது. ஆழமான, வெளுத்துப்போன கண்களால் அவள் வெறும் வெளியைப் பார்த்தாள்; இறுக மூடியிருந்த அவளுடைய வெளுத்த உதடுகள் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை...அந்த ஸ்திரீ எங்கள் இருவருடைய கைகளையும் ஒன்று சேர்த்தாள்...நிரந்தரமாக எங்களிடையே ராஜி செய்து வைத்தாள்.

ஆம்...மரணம் எங்களை ராஜி செய்து வைதததது.

ரேடியோவைத் திருப்பியதும் தலைவலி வருகிறது என்று சிலர் சொல்வார்கள். இங்கு கூறப்படுவது ரேடியோவினால் தலைவலி மட்டுமல்ல, திருகுவலியும் குணமாகிவிடும் என்ற உண்மைதான். ஆச்சரியமாயிருக்கிறதா? படித்துப் பாருங்கள். 'கிளாஸ்கோ ஈவ்னிங் டைம்ஸ்'ஸில் வெளிவந்ததன் சாரம்.

ரேடியோவும் தலைவலியும்

டேவில் லி. ராய்

ரேடியோவும் டெலிவிஷனும் இன்றைய விஞ்ஞான உலகில் வைத்தியர்களின் சிறந்த சாதனங்களாகப் பயன்படுகின்றன. ரேடியோ ஒலியலை ஆராய்ச்சிகள் மூலம், மனித உடம்பும், அதன் அங்கங்களும் கூட சில குறிப்பிட்ட நிலைகளில் குறிப்பிட்ட அலை நீளங்களைப் பிரதிபலிக்கின்றன என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டிருக்கிறார்கள். அதுபோலவே சில நோய்க் கிருமிகளும் சில சந்தர்ப்பங்களில் ரேடியோ அலைகளை வாங்கிப் பிரதிபலிக்கின்றன என்றும் கண்டிருக்கிறார்கள்.



எனவே கிருமிகளின் அலை நீளத்தையும், மனித அங்கங்களின் அலை நீளத்தையும் ஒத்துப்பார்ப்பதன் மூலம், உடம்பில் நோயிருக்கிறதா அல்லது நலிவுக்கு என்ன காரணம் என்பதை லகுவாக அறிய முடியும். மனித உடம்பை ஒரு அலை பரப்பி (Transmitter) யோடு பிணைத்து, பல விஞ்ஞான முறைகளால் அலை பாய்ச்சுகிறார்கள். அலைவாங்கியின் பதிவான அலை நீளம், ஒரு கிருமியின் அலை நீளமாக இருந்தால் உடம்பில் நோயிருக்கிறது என்று உணர்கிறார்கள். எப்படி நோயை

ரேடியோ அலைகளால் கண்டு பிடிக்கிறார்களோ அப்படியே நோயாளிக்குக் கெடுதல் வரா மல் கிருமிகளைக் கொல்வதற்கும் ரேடியோ அலைகளைப் பயன் படுத்த ஆராய்ச்சிகள் நடை பெற்று வருகின்றன.

ரண சிகிச்சை முறைகளிலும் ரேடியோ பயன் படுகிறது. முதல் உலக யுத்தத்தில், உடம் பில் பாய்ந்த குண்டுகளையும், உலோகச் சிலும்பல்களையும் மின்சாரக் காந்தத்தின் உதவி கொண்டு கண்டுபிடித்தார்கள். ஆனால், இதனால் பெரிய சங்கட மிருந்தது. காந்தத்தினால் ஆட ஆரம்பிக்கும் உலோகத்துண்டு வசப்பிசகாய் மாட்டிக்கொள் ளக்கூடும். எனவே அதை ஆடாமல் கண்டுபிடிக்கவேண் டிய அவசியம் ஏற்பட்டது. அந்த ஆராய்ச்சியின் பயனால் இரண்டாவது உலக யுத்தத்தில் ரேடியோவே பயன்படுத்தப் பட்டது. மனித உடம்பின் ரேடியோ அலை நீளத்தைத்தான் இதற்கும் பயன்படுத்தி உலோ கத்துண்டு இருக்குமிடத்தைக் கண்டுபிடிக்கபபட்டது.

மேலும், ஆங்கில நாட்டு ரேடியோ விஞ்ஞானிகள் ரேடியோ அலைகளின் உதவி யினால், மனித உடம்பின் உணர்ச்சி நரம்புகளின் துடிப் பையும் பதிவு செய்ய முடியும் என்று கண்டுபிடித்திருக்கிறார் கள். இதனால், மூளையின் சல னங்களைக்கூட பதிவு பண்ண முடிகிறது. நோயாளியின் மன நிலையைக் கணிப்பதற்கு இது ஒரு சாதனம்.

எலெக்ட்ரோ — கார்டியோ கிராப் என்னும் விஞ்ஞான வித்தையால், இருதய வியாதி களையும் நீக்க முடிகிறது. டெலி விஷன் முறையை ஆதாரமாகக் கொண்ட இந்த வித்தை 15 வருஷங்களுக்கு முன்னர் பிர யோகிக்கப்பட்டது. இதனால் பல சங்கடங்கள் இருந்தாலும், இன்றைய நிலையில் இருதய வியாதிகளைப் பற்றி சகல விவ ரங்களையும் தெரிவிக்கிறது கார் டியோ கிராப்.

இப்போது சொல்லுங்கள். ரேடியோவினால் தலைவலியைப் போக்கமுடியுமா, இல்லையா?

*

நிபுணர்கள் தீர்ப்பு

ஒரு நோயாளி தனக்கு வைத்தியம் செய்ய பல வைத்திய நிபுணர்களை ஒரே சமயத்தில் வரவழைத்தான். நிபுணர்கள் வந்து பார்த்துவிட்டு, தனி அறைக்குப் போய், நோயாளிக்கு என்ன நோய் பிடித்திருக்கிறது என்பதை ஆராய முற்பட்டார் கள். அவர்கள் பேசுவதை நன்றாகக் கேட்டுவிட்டு வந்து சொல்லும்படி தன் மகனை அனுப்பிவைத்தான் நோயாளி. பையன் அப்படியே செய்தான்.

திரும்பிவந்த பையனிடம் நோயாளி கேட்டான்: "என்ன பேசிக் கொண்டார்கள்?"

பையன்: "ஒரு வைத்தியர் சொன்னதுதான் எனக்கு நன்றாக புரிந்தது. அவர், 'பரவாயில்லை ஸார், பிரேத பரிசோதனையில் என்ன நோய் என்பதைக் கண்டுபிடித்து விடலாம்!' என்று சொன்னார்."

—காஸ்மாபாலிட்டன்

உலக இலக்கியத்தில் ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் மதிப்பிடற்கரிய போக்கிஷங்கள். 'கவிதை நடையை இவரைப்போல் பேராற்றலுடன் பிரயோகித்த கவிஞர்களும் உண்டா?' என்றும் கேட்கத் தோன்றும். ஒவ்வொரு நாட்டிலும் பிறந்த தலைசிறந்த இலக்கிய மேதையை ஷேக்ஸ்பியருடன் ஒப்பிடுவது வழக்கம். பால்ஸாக், மேட்டர்லிங், டாஸ்டாவ்ஸ்கி முதலிய இலக்கிய கர்த்தர்களைப் பல அம்சங்களில் ஷேக்ஸ்பியருக்கு இணை சொல்லுவார்கள். நம் நாட்டவர்கள் சிலரும் காளிதாசனை இந்தியாவின் ஷேக்ஸ்பியர் என்று சொல்லிக் கொள்கிறார்கள். இப்படிப்பட்ட மகா கவியைப் பற்றிய ஒரு தகராறு நீண்ட காலமாக இருந்து வருகிறது. அதைப்பற்றிய முழு விவரங்களையும் கட்டுரை எடுத்துக் கூறுகிறது.

ஷேக்ஸ்பியரா ? பேக்கனா?

★

பிராங்க் ஸ்டூவர்ட்

சில இலக்கிய விமர்சகர்கள் ஷேக்ஸ்பியரை, 'ஸ்ட்ராட்போர்டு என்னும் ஊரில் பிறந்த படிப்பு வாசனையற்ற கோமாளி" என்று கூறியிருக்கிறார்கள். அவருக்கு அச்சிட்டதைப்பார்த்துப் படிக்கவே தெரியாது என்றும் தம் கையெழுத்தைக் கூட சரியாய்ப் போடத் தெரியாது என்றும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

ஷேக்ஸ்பியருடைய நாடகங்கள் என்று சொல்லப்படுவன வற்றின் ஆரம்பத்தில், ரகசிய பரிபாஷை ஒன்றில் பின்கண்டவாறு எழுதப்பட்டுள்ளது என்று பெரிய ரகசிய பாஷை நிபுணர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள் :

ஷேக்ஸ்பியர்

"பிரான்சிஸ் பேக்கன் என்னும் நான், எலிஸபெத் மகாராணியின் சோரபுத்திரன்..... நான் அரண்மனை ரகசியங்களைஎல்லாம் அறிந்தவன். அவற்றைப் பின் சந்ததிகளுக்குத் தெரிவிக்க நான் விரும்பினேன். ஆனால், மகாராணியின் கொடுமைக்கு ஆளானதால், பற்பல மாற்றுப் பெயர்களில் என்லட்சியத்தை வெளியிட நேர்ந்தது. குறிப்பாக, வில்லியம் ஷேக்ஸ்பியர் என்ற 'ஊர் பேர் தெரியாத'

சாதாரண நடிகனுடைய பெயரை நான் உபயோகிக்கத் தீர்மானித்தேன். இந்த ஸ்வீகாரப் பெயரிலேயே, என் எழுத்துக்கள் பலவற்றை வெளியிட்டேன். இவற்றின் உண்மை ஆசிரியன் நானே. இந்த எழுத்துக்களின் ஊடே ரகசிய பரிபாஷையில் அந்தப் பயங்கரமான ரகசியத்தையும் எழுதிச் சேர்த்திருக்கிறேன்......''

வில்லியம் ஷேக்ஸ்பியர் ஸ்ட்ராட்போர்ட் - ஆன் - ஆவன் என்னும் ஊரில் 1564, எப்ரல் 26-ம் தேதி யன்று ஞான ஸ்நானம் செய்விக்கப் பட்டார். அவர் பிறந்த தேதி தெரியவில்லை. 18-ம் வயதில், தம்மை விட எட்டு வயது மூத்த ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டார். கல்யாணத்தின் போது அந்தப் பெண்ணுக்கு ஒரு குழந்தையும் உண்டு. அவர் சுமார் 20 வயதில் அடுத்தவனுடைய தோட்டத்தில் அத்துமீறி நுழைந்ததன் காரணமாக ஒரு தகராறு ஏற்படவே, ஊரை விட்டுக்கிளம்ப வேண்டியதாயிற்று. ஆனல், மனைவி சொந்த ஊரிலேயே தங்கியிருந்தாள். அதன் பிறகு அவர் விஷயத்தில் உடனடியாக நடந்தது என்ன என்பதை நாம் அறியோம். ஆனல் 1590-ல் ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் மிகவும் பிராபல்யம் அடைந்து விட்டன. 1610-ல் இந்த நாடகாசிரியர் ஸ்ட்ராட்போர்டு கிராமத்துக்கு வந்தார். ஒரு பெரிய வீட்டில் ஒய்வு பெற்று வசித்து வந்தார். ஆறு

பேக்கன்

வருஷங்களுக்குப்பின் அவரது 58-ம் வயதில் காலமானர்.

ஷேக்ஸ்பியர் தம் கைப்பட எழுதியது என்று சொல்லத் தக்க கடிதமோ, வேறு எந்த எழுத்தோ ஒன்று இருப்பதாக நிரூபிக்க இயலாது. கிடைத்திருப்பவை எல்லாம் அவர் போட்ட கையெழுத்துக்கள் மூன்றுதான். ஒரு கையெழுத்து ஒரு வழக்கின் வாக்குமூல எட்டிலும், மற்ற இரண்டு விலைக்கு வாங்கிய வீட்டுக் கிரயப்பத்திரங்கள் இரண்டிலும் உள்ளன. கையினல் எழுதிய எழுத்துக்களைப் பரிசோதிப்பதில் நிபுணர்களாக உள்ளவர்கள், அவை ஷேக்ஸ்பியர்போட்ட கையெழுத்துக்கள் அல்லவென்றும் அவருக்காக அவருடைய வக்கீல்கள் போட்டவைதான் என்றும் கூறுகிருர்கள்.

இங்கேதான் மர்மக் கதை ஆரம்பிக்கிறது. விஷயக் கோப்பு உருவாகிறது. 1599-ல் 'உணர்ச்சி வெறிமிக்க யாத்ரீகர்கள்'' என்னும் ஒரு கவிதை நூல், ஷேக்ஸ்பியர் எழுதியது என்று வெளியிடப்பட்டது. ஆனல் இப்பொழுது அந்த நூலில் கண்ட கவிதைகளில் சில மார்லோ, ஸர் வால்டர் ராலே, பார்ன்பீல்டு முதலிய பலரின் சிருஷ்டிகள் என்று தெள்ளத் தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது. அல்லது ஒரு வேளை அவை எல்லாம் பேக்கனே மாறு பெயரில் எழுதியவையோ?

சரித்திரம் சொல்லுகிறது: பிரான்ஸிஸ் பேக்கன் 1561-ல்

லண்டன் நகரத்தில் ஸர் நிக்கலஸ் பேக்கன் என்பவரின் மகனுகப் பிறந்தார். ஸஸெக்ஸ் பிரபுவின் அந்தரங்க ஆலோசகராக இருந்தார்; எலிஸபெத் மகாராணியின் பிரியத்தைச் சம்பாதித்தார். பிறகு லார்ட் சான்ஸலராகவும் இருந்தார். லஞ்சம் வாங்கிக் கொண்டு சில வழக்குகளில் தீர்ப்புச் சொல்லியதாக பேக்கன் குற்றம் சாட்டப்பட்டார். அதனுல்,அவருடைய உத்தியோகம் பறிபோய் விட்டது அவமானத்துக்காளானுர். ராஜ தர்பாரிலிருந்தும் விரட்டப்பட்டார். அவர் சில பிரமாதமான தத்துவ நூல்களை எழுதியிருக்கிருர். செத்துப்போன கோழி ஒன்றைக்கொண்டு சில சாஸ்திர ஆராய்ச்சிகள் செய்து கொண்டிருக்கும் போது கபம் பீடிக்கப்பட்டு இறந்து போனுர்.

1796–ல் ஹெர்பர்ட் லாரன்ஸ் ஷேக்ஸ்பியர் விவகாரத்தில் ஒரு பெரிய குண்டைத் தூக்கி எறிந்தார். மிக நன்ருகவும் நுணுக்கமாகவும் ஆராய்ந்து, ஷேக்ஸ்பியருடைய நாடகங்களை எழுதியது பேக்கன்தான் என்றும், ஆனுல் ஷேக்ஸ்பியரின் பெயரால் வெளிவர பேக்கன் அனுமதித்தார் என்றும் அவர் கூறினுர். இதன் பிறகு ஒருவருக்குப்பின் ஒருவராக விமர்சகர்கள் பலர் நன்ருகக் கண்ணைத் துடைத்துக் கொண்டு, ஷேக்ஸ்பியரின் நாடகங்களையும் பேக்கனின் நூல்களையும் துருவித் துருவி ஆராய்ந்து, பேக்கன்தான் உண்மையில் இங்கிலாந்தின் தலை சிறந்த இலக்கியத்தை (ஷேக்ஸ்பியர் நாடகங்களை) சிருஷ்டித்தவர் என்று முடிவு கட்டினுர்கள்.

ஷேக்ஸ்பியர் இங்கிலாந்தை விட்டு வெளியே பிரயாணம் செய்ததாகவே தெரியவில்லை. ஆனுல் பிரான்ஸ், இத்தாலி ஆகிய நாடுகளின் வாழ்க்கையைப்பற்றிய மிக மிக நுட்பமான விபரங்கள் அவர் நாடகங்களில்உள்ளன. அவற்றைநேரில் கண்டு எழுதியிருப்பது போலவே தோன்றுகிறது. மேலும், அக்காலத்திய நிலையைப் பார்க்கும்போது ஷேக்ஸ்பியர் போன்ற சர்வ சாதாரணமான குடும்பத்தில் பிறந்த ஒரு மனிதன், அரண்மனை நடவடிக்கையைப்பற்றிய லளிதமான விபரங்களை எல்லாம் அறிந்திருப்பது அசாத்தியம். அப்படியிருக்க ஷேக்ஸ்பியர் நாடகங்களில் அவை ஏராளமாகப் பொதிந்துள்ளன. அதே சமயததில் பேக்கனே, ராஜ சிம்மாசனத்துடன் நெருங்கிப் பழகியவராக இருந்திருக்கிருர்.

ஷேக்ஸ்பியர் நாடகங்களைப் பார்த்தால், குதிரைச் சவாரி செய்யும் கலை, ஆயுதங்களை மேன்மக்கள் உபயோகப் படுத்தும் முறை, நடைமுறையில் உள்ள ராஜதந்திரம் சட்டம் போன்றவற்றில் விரிந்த ஞானம் முதலியவை பற்றி நாடகாசிரியர் மிக நன்ருக அறிந்திருப்பதாகத் தெரிகிறது. ஆனுல் (ஷேக்ஸ்பியர் போன்ற) ஒரு சாதாரண நடிகனுக்கு இவ்வளவும் தெரிந்திருக்க முடியாது.

சிலர், ஆக்ஸ்போர்டின் 17-ம் பிரபு எட்வர்டு டி வியர் சில நாடகங்களை எழுதியதாகவும், அவற்றை நாடக மேடையில் நடிக்க, நடிகராகவும் மானேஜராகவும் லண்டனில் தொழில் நடத்திய ஷேக்ஸ்பியர் அனுமதிக்கப்பட்டதாகவும் கூறுகிருர்கள். ஆக்ஸ்போர்டு பிரபு, பேக்கனைப் போன்ற ஒரு

பேரறிஞர், "ஹாம்லெட்" நாடகத்தையும் ஆக்ஸ்போர்டு பிரபு எழுதியதாக சாப்மன் சொல்லுகிறார். மேலும் ஷேக்ஸ்பியர், ஸ்ட்ராட்போர்டு கிராமத்தில் சிறுவனாக இருந்த போது "ஹாம்லெட்" நாடகம் இருந்ததாகவும், அதே சமயத்தில் ஆக்ஸ்போர்டு பிரபு பிரசித்தி பெற்ற எழுத்தாளராகிவிட்டார் என்றும் கூறப்படுகிறது.

சமீபத்தில் சில நிபுணர்கள் ஷேக்ஸ்பியரின் படத்தைப் பரிசோதித்துப் பார்த்தனர். அந்தப் படம் ஆக்ஸ்போர்டு பிரபுவின் முகச்சாடையோடு இருக்கிறது. படத்தில் தர்பார் உடையுடனும், ராஜரீக உடைவாளுடனும் 'ஷேக்ஸ்பியர்' காட்சியளிக்கிறார். பிரபுக்குடும்பத்தில் பிறக்காத, சாதாரண மனிதனாகிய ஷேக்ஸ்பியர் மேற்கண்ட ஆடையாபரணாதிகளை அணிய அனுமதிக்கப் பட்டிருக்க முடியுமா? முடியாது.

1888-ல் ஐ. டோனல்லி, "நாடக நூலில் அந்தரங்க பரிபாஷை மூலம் பேக்கன் தாமே அந்த நாடகங்களை எழுதியிருப்பதாகக் கூறியிருக்கிறார்" என்பதைத் தெரிவித்தார். பேக்கனும் தம் "கல்வியின் முன்னேற்றம்" என்ற நூலில் தம்முடைய அந்தரங்க பரிபாஷையின் ரகசியத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். இந்த விளக்கத்தை வைத்துக் கொண்டு ஆராய்ந்தால், ஷேக்ஸ்பியர் நாடகங்களில், பரிபாஷையில் எழுதப்பட்டுள்ள துக்கமயமான செய்திபுலனாகும். அந்தச்செய்தியின் முதல் பகுதியே கட்டுரையின் ஆரம்பத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. எலிஸபெத் மகாராணி அந்தரங்கமாக ராபர்ட் டட்லி பிரபுவைக் கல்யாணம் செய்து, அதன் மூலம் பிரான்ஸிஸ் பேக்கனையும், ராபர்ட் டெவெருவையும் பெற்றெடுத்ததாகவும், ராபர்ட் டெவெரு கலகம் செய்ததற்காக மரணதண்டனை விதிக்கப்பட்டதாகவும் மரண தண்டனைக்கு அஞ்சியே தாம் (எலிஸபெத் மகாராணியின் ஜேஷ்ட புத்திரன் என்பதையும்) வேல்ஸ் இளவரசர் பதவிக்குத் தாம் உரியவர் என்பதையும் வெளிப்படுத்த வில்லை என்றும் மேற்படி செய்தி கூறுகிறது. அதற்குப் பதிலாக ஷேக்ஸ்பியரின் பெயரில் தம் நாடகங்களை வெளியிட்டு, அதில் பரிபாஷை மூலம் இந்த ரகசியச் செய்தியை பேக்கன் வெளியிட்டாராம்.

ஆகவே, உண்மையில் ஷேக்ஸ்பியர் நாடகங்களை எழுதியது யார்? அந்தரங்க பரிபாஷை சொல்லும் கதை உண்மைதானா? அல்லது சிலர் சொல்லுவது போல, இதே பரிபாஷை ஏதோ ஒன்றுக்கு யாரோ ஒருவரை ஆசிரியராகக் கூறப்போகிறதா?

"என்னுடைய ரகசியத்தின் ஆணி வேரை நீ பிடுங்கி விடுவாய்!" என்று கத்துகிறான் ஹாம்லெட். நம்மால் அப்படிப் பிடுங்க முடிந்தால்......!

*

அடிக்கடி கிடையாது

நகரத்து ரோடுகளில் நடந்து செல்லுபவர்கள் இப்போது அடிக்கடி விபத்துக்காளாவதில்லை; ஒரே தடவையில்தான் விபத்துக்காளாகிறார்கள்.

—எம். காக்ஸ்

இயற்கைக் காட்சியிலே ஒரு காதல் காட்சி. அதில் ஒரு தகராறு. பிறகு, தகராறு நீங்கி சாந்தி பிறக்கிறது. 'கோபம் குறைந்ததோ?' என்று கேட்கிறான் காதலன்.

சூறைக் காற்று

நா. சீ. வரதராஜன்

வெண்மதி விண்ணிலே யேறியே—சாந்தி
 மேவும் நிலாவொளி வீசவே
பண்ணொலி செய்திடும் தென்றலாம்—பெண்ணும்
 பாடி மகிழ்ச்சி கொண்டாடவே
எண்ணி நடந்தனள் வானிலே—நின்று
 இன்னொளி வீசிடும் நாதனைக்
கண்ணினா லள்ளி விழுங்கியே—உள்ளக்
 காதல் தணித்திட எண்ணினள்

காதலி வந்தது கண்டனன்!—மதி
 கட்டித் தழுவ விரைந்தனன்!
சோதனை போலவே கார்முகில்—எனும்
 சூழுங் கரிய நிறத்தினாள்
காதினைத் தாக்கிடக் கூவியே—பெருங்
 கைகளை நீட்டி மறைத்தனள்!
வேதனை செய்குது காமமே!—என்னை
 மேவி மருவுவாய் என்றனள்!

தென்றல் தவித்தனள்! சந்திரன்—வழி
 தேடித்திரிந்தனன்! மேகமும்
சென்று மறைத்தன ளெங்கணும்!—தீயைச்
 சிந்தி விழித்தனள்! சீறினள்!
கொன்றிடுவே னெனக் கூறினள்!—கண்ணீர்
 கொட்டி வருந்தினள்! ஏங்கினள்!
சென்றிடு! வீணிலேன் நோகிறாய்—எனச்
 செப்பினள் மென்மொழி தென்றலே!

கார்முகிலேக மறுத்தனள்!—சினம்
காய்ந்து படர்ந்தது தென்றலை!
போரெனக் கூவினள்! சூறையாய்—மாறிப்
பூண்டனள் பேருரு கோரமாய்!
பாரை நடுங்கிடச் செய்தனள்!—மரம்
பற்றிச் சுழற்றியே ஆடினள்!
கார்முகில் தன்னைத் துரத்தியே—சாடிக்
கர்ஜனை செய்தனள்! ஆர்த்தனள்!

ஓடியொளிந்தனள் மேகமும்!—சினம்
ஓய்ந்து குளிர்ந்தனள் தென்றலே!
கூடி மகிழ்ந்திடு வோமினி!—காதற்
கூத்தில் திளைத்திடுவோமெனச்
சாடிப் பறந்தனள் வானிலே—குளிர்
சந்திரன் கையினை நோக்கியே!
"வாடியுன் கோபம் குறைந்ததோ?"—என
வாரியணைத்தனன் வெண்மதி!

தொழிலாளர் விடுதி



ஏசிசி சிமெண்ட்

நீடித்த, சிக்கனமான, நெருப்பினுல் பாதிக்கப்படாத, சுத்தமான தொழிலாளர் விடுதிகள் கட்ட உதவுகின்றது. நல்ல தோற்றம், சுகாதார முறை உடைய வாசஸ்தலம், ஆனந்தமான சுற்றுவட்டாரம் இவை தொழிலாளிகளின் சுகாதாரத்தையும், சாமர்த்தியத்தையும், உயர்த்துகிறது-அதன் மூலம் உற்பத்தியை அதிகப்படுத்துகிறது. பந்தோஸ்த்திற்கு சிமெண்டின் இந்த பிரசித்தமான பிராண்டுகளில் ஏதாவது ஒன்றைக் குறிப்பிடுங்கள்.
'ஏ.சி.சி.' 'நீலகிரி' 'சார்மினுர்'

ஏசிசி சிமெண்ட்

இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் 14 பாக்டரிகள் இருக்கின்றன.

தி சிமெண்ட் மார்கெட்டிங் கம். ஆப் இந்தியா லிட்.
ஏ. சி. சி. சிமெண்டின் விற்பனை மானேஜர்கள்.

ADTS CMI 974 TAMIL

எல்லாவற்றிலும் வெற்றியளிக்கும்

ஓர் சிறு ரகசியம்

இந்த ரகசியத்தை உணர்ந்த புத்திமான்கள் சந்தோஷமாக வாழ்கிறார்கள். புறக்கணித்த பல மேதாவிகள் கஷ்டப்படுகிறார்கள்.

ஞாபகத்திற்கெட்டாத காலம் முதல், கடல் போன்ற துரதிர்ஷ்டங்களை போக்கி அமோகமான சம்பத்தளிக்கும் ஓர் சக்தி நிலவுகிறது. ஆயிரக்கணக்கான மனிதர்கள் அனுபவித்துணர்ந்த நவரோஸி வழிதான் இன்பமளிப்பது.

85,000 பேர்களுக்குமேல் நவரோஸியால் லாபமடைந்திருக்கிறார்கள்.

பல முனிவர்களால் காப்பாற்றப்பட்டு, 1870-ல் என்னுடைய முன்னோருக்கு இந்த "நவரோஸி சக்தி" அளிக்கப்பட்டது. அது முதல் நம்பினோரைக் காப்பாற்றும் பொருட்டு பூஜை பிரார்த்தனைகளால் காப்பாற்றப்பட்டது. மார்ச் 21 தேதி அயண புண்ணிய காலத்தில் கியாதி வாய்ந்த "நவரோஸி தாயத்துகள்" விமரிசையாக பூஜிக்கப்பட்டன.

நவரோஸி வெற்றியின் திறவுகோல். இது வீண் சித்தாந்தங்களை ஆதாரமாகக் கொள்ளாமல், எக்காலத்தும் தோல்வி அடையாதது என்று நிரூபிக்கப்பட்ட வாழ்க்கை நியதிகளின் ஆதாரத்தில் தயாரிக்கப்பட்டது. அதி அற்புத வெற்றிகள் பெற்ற மாந்த்ரீகர்கள் ஜெபித்து தெய்வீகமாகத் தயார் செய்யப்பட்டது. எவ்விதமான இடையூறுகளையும் அதி விரைவில் ஜெயித்துவிடலாம். பின் ஏன் நீங்கள் துர் தசைகளுக்கு அடிமையாக இருக்கவேண்டும்? நவரோஸி உங்களைக் காப்பாற்றும். உங்களுக்கு என்ன கஷ்டமானாலும் சரி, உங்களுக்கு உதவி புரிய சகாயமான விலையில் ஓர் தாயத்திருக்கிறது.

இனம்

நீங்கள் எழுதினால் அத்தாக்ஷி பத்திரங்கள் அடங்கிய படங்களுடன் கூடிய புத்தகம் இனமாக அனுப்பப்படும்.

HABIBULLAH SAHEB

BANDRA :: BOMBAY

DHARAMSEYS'

புத்தகப் பிரசுரத் தொழில் மேலை நாடுகளில் ஒரு கலையாகவே இருந்து வருகிறது. இந்தக் கலையைப் பற்றிய சில முக்கியமான விவரங்களை சக்தி அதிபர் இங்கு தெரிவிக்கிறார். இது சென்னை அகில இந்திய ரேடியோ நிலையத்தில் 13-12-'49-ல் பேசியதாகும்.

பிரசுரத் தொழில்

வை. கோவிந்தன்

"என்ன சார், இப்பொழுது இந்தப் புத்தகங்களுக்கு ஏராளமான விலை வைத்து விடுகிறார்கள். இந்தப் பிரசுரக்காரர்கள் முழுக் கொள்ளை அடிக்கிறார்கள். மேலும் தாங்கள் சேவை செய்வதாக வேறு சொல்லுகிறார்கள். நல்ல சேவை செய்கிறார்கள். ஒரே கொள்ளை" என்று பலர் சொல்ல நான் கேட்டிருக்கிறேன். இப்படிச் சொல்வது தமிழ் நாட்டில் மட்டுமல்ல; உலகம் பூராவிலும் இப்படியே தான் சொல்கிறார்கள். அதற்குப் பிரசுரகர்த்தர்கள், "ஐயா, எங்களைக் குறை கூறுவதில் பயனில்லை. யுத்த காலத்திலும் யுத்தத்திற்குப் பிறகும் நாங்கள் மிகவும் குறைவான விலைதான் புத்தகத்திற்கு வைக்கிறோம். யுத்த காலத்திற்கு முன் இருந்ததைக் காட்டிலும் காகிதம் நான்கு மடங்கு விலை அதிகமாகியிருக்கிறது. அச்சுக்கூலி மூன்றுமடங்கு அதிகமாகியிருக்கிறது. முன்னெல்லாம் ஆசிரியர்களுக்கு மொத்தமாக ஒரு தொகை கொடுத்து விடுவோம். இப்பொழுதோ மற்ற பெரிய நாடுகளில் கொடுப்பது போல 10 முதல் 20 பர்ஸெண்ட் (சதவீதம்) வரை ராயல்டி (சன்மானப் பணம்) கொடுக்கவேண்டியதாயிருக்கிறது. எல்லாமாகச் சேர்ந்து புத்தகத்தின் அடக்க விலை அதிகமாகிவிடுகிறது. முன்னெல்லாம் இரண்டணா அடக்கமாகும் புத்தகத்திற்கு எட்டணா விலை வைப்பது வழக்கம். இப்பொழுதோ அந்த இரண்டணா அடக்கமாகும் புத்தகம் எட்டணா அடக்கமாகிறது. எட்டணா அடக்கமாகும் புத்தகத்தை நாங்கள் ஒரு ரூபாய் விலை தான் வைக்கிறோம். தமிழ் நாட்டின் ஜனத்தொகையில் நூற்றுக்கு பத்துப்பேரே படித்திருப்பதால் ஒரு ரூபாய் விலையுடைய நல்ல புத்தகம் வெளியிட்டால் குறைந்தது இரண்டு வருடங்கள் ஆகின்றது, அவைகளை முழுதும் விற்பனை செய்வதற்கு. புத்தகங்கள் விற்பனை செய்யும் வியாபாரிக்கு குறைந்தது 25 பர்ஸெண்ட் கமிஷன் கொடுக்க வேண்டும். ஒரு ரூபாய் விலையுடைய புத்தகத்தில் நாலணா வியாபாரிக்குப் போய் விடுகிறது. நாலணாத்தான் எங்களுக்கு. அந்த நாலணாவும் எங்களுக்குக் கிடைப்பதில்லை. அந்த நாலணாவில் தான் பத்திரிகை

களில் விளம்பரம் செய்யவேண்டும்; வியாபாரிகளுக்கு துண்டு பிரசுரங்கள் அனுப்பவேண்டும். எங்கள் காரியாலய குமாஸ்தாக்களுக்குச் சம்பளம், காரியாலய வாடகை, எலெக்ட்ரிக் சார்ஜ், டெலிபோன் வாடகை இவ்வளவும் கொடுக்கவேண்டும். இப்படி இருந்தால் எங்கள் கதி என்னவாகும்?'' என்று சொல்கிறார்கள்.

''புத்தகப் பிரசுர விஷயம் இப்படியானால் புத்தகத் தொழில் வளருமா?'' என்று கேட்கிறீர்கள். புத்தகத் தொழில் வளரும். நிச்சயமாக வளரும். நமது அரசாங்கம் இப்பொழுது கல்வி அபிவிருத்தியில் பெரிதும் கவனம் செலுத்துகிறார்கள். ஆதலால் வரவர அறிவு வளர்ச்சிக்கான புத்தகங்களைப் படிக்க மக்கள் பெரிதும் விரும்புகிறார்கள். அது மட்டுமல்ல, இன்றைய குழந்தைகளுக்கு படிப்பதில் உள்ள ஆசை சொல்லி முடியாது. குழந்தைகளுக்காக அழகழகான புத்தகங்கள் இப்பொழுது ரொம்ப ரொம்ப தேவைப் படுகிறது. இவைகளை எல்லாம் பார்க்க பிரசுரத் தொழிலுக்கு ஒரு நல்ல காலம் வருகிறதென்று நிச்சயமாக கருதலாம். உணவில் உப்பு சேர வேண்டியது எவ்வளவு அவசிய மாகிறதோ அவ்வளவு அவசியமாகி விடும் மனித வாழ்க்கையில் புத்தகமும். ஆதலால் இனி பிரசுரகர்த்தர்கள் கொஞ்சங் கூடப் பயப்பட வேண்டிய தில்லை. ஒன்று மட்டும் சொல்ல விரும்புகிறேன்: புத்தக வெளியீட்டில் கோடிகோடியாகச் சம்பாதிக்க நினைப்பவர்களும், வியாபாரங்களில் உடனே பணக்காரர் ஆவது போல் புத்தக வியாபாரத்திலும் ஆக வேண்டுமென்று நினைப்பவர்களும் இந்தப் புத்தக வியாபாரத்தில் ஏமாற வேண்டியது தான்.

இனி புத்தக வெளியீட்டைப் பற்றி சிறிது சொல்லி என்னுடைய விஷயத்திற்கு வருகிறேன்:

இன்றைய நிலையில் தொழில் நுட்பம், சயன்ஸ் படிக்கத்தான் ரொம்பவும் ஆசைப் படுகிறார்கள் தமிழ் மக்கள். அடுத்ததாக முறையே நாவல், சிறுகதை, சரித்திரம், வரலாறு இவைகளைத் தான் படிக்க விரும்புகிறார்கள். இவ்வகையான புத்தகங்களைப் பிரசுரகர்த்தர்கள் வெளியிடலாம்.

எப்படி புத்தகத்தை உருவாக்குவது?

இது ஒரு பெரிய வேலை தான். சிலருக்குச் சுலபமாக இருக்கலாம். முதலாவதாக ஆசிரியர் தரும் கையெழுத்துப் பிரதியை ஒழுங்கு படுத்த வேண்டும்.

கையெழுத்துப் பிரதிகளில் ஒரு இடத்தில் ரொம்ப என்றும் மற்றோர் இடத்தில் ரொம்ப என்றும் ஒரு இடத்தில் இரகசியம் என்றும், மற்றொரு இடத்தில் ரகசியம் என்றும் இந்த மாதிரிப் பிசகுகள் மலிந்திருக்கும். இது மட்டுமல்ல. ஒரு விஷயமே இரண்டு மூன்று இடங்களில் காட்சி அளிக்கும். அத்தியாய எண் 21-க்கு அடுத்த அத்தியாயம் 23 ஆக இருக்கும். இந்த மாதிரிப் பிழைகளைநீக்க விஷயம் தெரிந்த ஒருவரைக் கொண்டு கையெழுத்துப் பிரதியைச் செப்பனிட வேண்டும். செப்பனிட்ட பிறகு அப்படியே அச்சகத்தில் கையெழுத்துப் பிரதி

யைக் கொடுத்து விடலாமா? அச்சகத்தார் கையெழுத்துப் பிரதியைச் சில சமயங்களில் அச்சகக் குப்பைக் காகிதங்களுடன் சேர்த்து விடுவார்கள். பிறகு பிரசுரகர்த்தரிடம் கையெழுத்துப் பிரதி தொலைந்து விட்டது என்று கைவிரிப்பார்கள். இது வழக்கமாக நடந்து வருகிறது. ஆதலால் செப்பனிட்ட கையெழுத்துப்பிரதியை நன்ருக எழுதுபவரைக் கொண்டு மூன்று பிரதிகள் எழுதச் செய்ய வேண்டும். இப்பொழுது தமிழ் டைப்ரைட்டிங் மெஷின் தாராளமாகப் பழக்கத்திலிருக்கிறது. டைப் அடிக்கச் செய்யலாம். ஒரே அளவுக் காகிதத்தில் வார்த்தைக்கு வார்த்தை இடம் விட்டு டைப் செய்யவோ எழுதவோ வேண்டும். அப்படிச் செய்தால் தான் பிரசுரகர்த்தர்களுக்கும், அச்சகத்தாருக்கும் கையெழுத்துப் பிரதி அச்சில் எத்தனை பக்கம் வரும் என்று சுமாராகக் கணக்கிட முடியும். மூன்று பிரதிகள் வேண்டும் என்று ஏன் சொன்னேன் தெரியுமா? ஒன்று ஆசிரியருக்கு; இரண்டாவது பதிப்பகத்தாருக்கு; மூன்ருவது அச்சகத்தாருக்கு. மூன்று பேரும் சேர்ந்து கையெழுத்துப் பிரதிகளைத் தொலைக்க முடியாதல்லவா? முதல் பக்கத்திலே புத்தகத்தின் பெயர், ஆசிரியர் பெயர், பதிப்பகத்தாரின் பெயரும், இரண்டாவது பக்கத்தில் புத்தகம் வெளியிட்ட தேதி, எத்தனை பிரதிகள், பதிப்புரிமை பற்றிய அறிவிப்பு, விலை, அச்சிட்ட அச்சகத்தாரின் பெயரும், மூன்ருவது பக்கத்தில் பதிப்பகத்தாரின் பதிப்புரையும் இருக்க வேண்டும். அதற்கு அடுத்த பக்கங்களில் பொருளடக்கம், அறிமுகம், ஆசிரியர் முன்னுரை ஆகியவைகளையும் எழுதியோ, டைப் அடித்தோ செப்பனிட்ட கையெழுத்துப் பிரதியின் முகப்பில் சேர்க்க வேண்டும் இப்பொழுது கையெழுத்துப் பிரதி தயாராகி விட்டது. இனி அச்சுக்குக் கொடுக்க வேண்டியதுதான். அச்சுக்குக் கொடுக்கும் முன் புத்தகம் எந்த அளவில் இருக்க வேண்டும், எந்த வகை காகிதத்தில் அச்சிட வேண்டும், அச்சு எழுத்து எந்த பாயிண்டில் இருக்கவேண்டும், புத்தகத்தில் படங்கள் சேர்க்கவேண்டும் என்ருல் எந்த மாதிரி பிளாக் செய்யவேண்டும், சரி, அச்சிட்ட பிறகு புத்தகத்தை எப்படிப் பைண்டு செய்யவேண்டும், கலிகோ பைண்டு செய்ய வேண்டுமா, சாதா பைண்டு செய்ய வேண்டுமா என்று தீர்மானித்துக்கொள்ளவேண்டும்.

இப்பொழுது சாதாரணமாக கிரவுன் 1/8 அளவில்தான் புத்தகங்களை அச்சிடுகிருர்கள் நாவல், சிறுகதை போன்ற புத்தகங்களுக்கு கிரவுன் 1/8 அளவுதான் நல்லது. கையடக்கமாகவும், படிக்க வசதியாகவும் இருக்கும். கிரவுன் 1/8 அளவு 16 பக்கங்களுக்கு அச்சுக்கூலியாக 22 ரூபாய் முதல் 28 ரூபாய் வரைக்கும் அச்சகத்தார் கேட்கிருர்கள். பை அடக்கமாகவும் புத்தகம் அச்சிடலாம். பையடக்க புத்தக அளவு பூல்ஸ் கேப் 1/8 என்று சொல்லப்படுகிறது. தோத்திரப் புத்தகங்கள் போன்ற புத்தகங்களை இந்த அளவில் அச்சிடலாம். டெம்மி 1/8 அளவில்தான் பழங்காலப்

புத்தகங்களை அச்சிட்டு வந்திருக்கிறார்கள். வீட்டிலே வைத்துப் படிப்பதற்கு ஏற்ற அளவு இது தான். சரித்திரம், வரலாறு, பக்கம் அதிகம் உடைய புத்தகங்களையும் டெம்மி 1/8 அளவில் அச்சிடலாம். கவர்ன்மெண்டுப் புத்தகங்களை ராயல் 1/8 அளவில் தான் அச்சிடுகிறார்கள். 1000 பக்கம் வரை வரக்கூடிய புத்தகங்களை ராயல் 1/8 அளவிலும் கிரவுன் 1/4 அளவிலும் அச்சிடலாம். கிரவுன் 1/4 அளவில் குழந்தைகள் புத்தகம் வெளியிடலாம். எந்த வகைக் காகிதம் உபயோகிக்கலாம்? இப்பொழுது ஆண்டிக் காகிதம், பெதர் வெயிட் காகிதம், கிளேஸ் காகிதம், நியூஸ் பிரிண்ட் காகிதங்களையேதான் உபயோகித்து வருகிறோம். மலிவான விலையில் நிறையப் புத்தகத்தை விற்க விரும்புபவர்கள் நியூஸ் பிரிண்ட் காகிதத்தில் அச்சிடலாம். நியூஸ்பிரிண்ட்தான் இன்றைய நிலையில் விலை குறைவாக விற்கிறது. பவுண்டு ஒன்றுக்கு எழுணவாக இருக்கிறது. நல்ல புத்தகங்களைக் கௌரவமான முறையில் வெளியிட விரும்புபவர்கள் கிளேஸ் காகிதத்திலாவது, ஆண்டிக் பெதர்வெயிட் காகிதத்திலாவதுதான் அச்சிடுவது நல்லது. காகிதம் வாங்குவதற்கு முன் புத்தகங்கள் அச்சிடும் அச்சகத்தாரிடம் இருக்கும் மெஷின் எந்த அளவுள்ள காகிதத்தை அச்சிடும் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். அவர்களிடம் கிரவுன் அளவு அச்சிடும் மெஷின் இருக்கலாம், டபிள் கிரவுன் மெஷின், குவாட் கிரவுன் மெஷின் இருக்கலாம். உங்களுக்குக் கிரவுன் 1/8 அளவுள்ள புத்தகம் அச்சிடுவதற்கு இருப்பதாக வைத்துக்கொள்வோம். 128 பக்கம் அச்சில் அந்தப் புத்தகம் வரலாம். ஆயிரம் புத்தகம் அச்சிடவேண்டும். கிரவுன் அளவு காகிதத்தில் கிரவுன் அளவு, மெஷினில் அச்சிட 1000 பிரதிகளுக்கு 128 பக்கங்களுக்கு 16,000 முறை அச்சிட வேண்டும். அதே 128 பக்கங்களை குவாட் கிரவுன் மெஷினில் 4000 முறை அச்சிட்டால் போதும். குவாட் கிரவுன் மெஷின் உங்கள் அச்சகத்தாரிடம் இருக்குமானால் குவாட் கிரவுன் அளவுள்ள காகிதத்தையேதான் வாங்கிக்கொடுக்க வேண்டும். அப்படிச் செய்வதால் அச்சிடும் கூலி குறையுமல்லமா?

புத்தகத்திற்கு எந்த எழுத்து வேண்டும்?

நாவல், சிறுகதை முதலிய புத்தகங்களுக்கு 10, 11, 12 பாயிண்டு டைப்புகளை உபயோகிக்கச் செய்யலாம். சரித்திரம் வரலாறு சயன்ஸ் புத்தகங்களுக்கு 11, 12 பாயிண்டு டைப்புகளை உபயோகிக்கலாம்.

உள்ளே வரும் படங்களுக்கு எந்த ஸ்கிரீன் உள்ள பிளாக் போடலாம்? உள்ளே உள்ள படங்களை ஆர்ட் பேப்பரில் அச்சிடுவதானால் 100 முதல் 150 வரை ஸ்கிரீன் உள்ள ஆப்டோன் பிளாக்குகள் செய்யலாம். கிளேஸ் காகிதத்தில் அச்சிடுவதானால் 85 ஸ்கிரீன் உள்ள ஆப்டோன் பிளாக்குகள் செய்யலாம். நியூஸ் பிரிண்ட் காகிதமானால் 65 ஸ்கிரீன் உள்ள பிளாக்குகள் செய்யலாம். குழந்தைகளுக்கு வெளியிடும்

புத்தகங்களில் படம் கலரானாலும், கருப்பு வெள்ளையானாலும் லைன்டிராயிங்தான் நன்றாக இருக்கும். குழந்தைகளுக்கும் பிடிக்கும். ஆதலால் லைன் பிளாக்தான் குழந்தைப் புத்தகங்களுக்கு ஏற்றது.

புத்தகம் அச்சிட்டு முடிந்துவிட்டது இனி பைண்ட் செய்ய வேண்டாமா? நல்ல புத்தகங்கள், நீண்ட நாளைக்கு இருக்கவேண்டிய புத்தகங்களை காலிகோ பைண்ட் செய்ய வேண்டும். காலிகோ பைண்ட் செய்வதற்கு காலிகோ, பைண்டிங் கூலி, அட்டை எல்லாமாக 500 பக்கம் உள்ள புத்தகம் ஒன்றுக்கு ஒரு ரூபாய் விலையாகும். பைண்டிங் மட்டும், புத்தகம் ஒன்றுக்கு அடக்க விலை ஒரு ரூபாயானால் புத்தகவிலையை இரண்டு மடங்காக ஆக்கும் போது புத்தக விலையுடன் இரண்டு ரூபா அதிகமாகி விடுகிறது. நீண்ட நாளைக்குப் புத்தகத்தைப் பத்திரமாக வைத்துக்கொள்ள விரும்புபவர்களும் லைப்ரரிகளும் காலிகோ பைண்ட் புத்தகத்தைத்தான் விரும்புகிறார்கள். காலிகோ பைண்ட் புத்தகங்கள்தான் புத்தகம் போலத் தோன்றுகிறது. விலை மலிவாக வைக்க வேண்டுமென்று விரும்புபவர்கள் புத்தகத்தைக் கோர்த்துத் தைத்து மேலே ஒரு சுமாரான கனமுள்ள அட்டை போடலாம். சிலர் புத்தகங்களைக் குத்தித் தைக்கிறார்கள். குத்தித் தைப்பதால் புத்தகத்தை விரித்துப் படிக்க முடியாது. புத்தகம் பைண்ட் செய்தாகிவிட்டது.

புத்தகத்தை அழகு செய்ய மேலட்டை வேண்டும். அந்த அட்டைதான் புத்தகத்தை விற்கச் செய்கிறது என்று கூடச் சொல்லலாம். நாவல் போன்ற புத்தகங்களை பகட்டானவர்ணங்களில் அட்டை போட்டால் தான் இப்பொழுது விற்கமுடிகிறது. இந்த அட்டைகளுக்கு முன்காலத்தில் டஸ்ட் ஜாக்கட் (Dust Jacket) என்று சொல்வது வழக்கம். புத்தகத்தில் அழுக்கு படியாமல் இருப்பதற்காகத்தான் அட்டை போட்டிருக்கிறார்கள். இப்பொழுது அது ஜாக்கட் (Jacket) என்றுதான் அழைக்கப்படுகிறது. ஜாக்கட் எவ்வளவு அழகாய் இருக்க வேண்டுமென்பதை நான் சொல்லவேண்டுவதில்லை. இந்த மாதிரி அழகான ஜாக்கட் போடுவதற்கு ஆர்ட்டிஸ்டு சார்ஜ் பிளாக் சார்ஜ், அச்சுக்கூலி, ஆர்ட் பேப்பருக்கும் 1000 புத்தகங்கள் அச்சிட்டால் புத்தகம் ஒன்றுக்கு மூன்றணுவுக்கு மேல் ஆகிறது. நாவல், சிறுகதை போன்ற புத்தகங்களைத் தவிர மற்ற புத்தகங்களுக்கு சாதாரணமாக கவர்பேப்பரில் அட்டை போடலாம். வர்ண ஜாலங்கள் வேண்டாம். படிப்பவர்களும் மற்ற வகையான புத்தகங்களுக்கு வர்ண ஜால அட்டைகளை விரும்புவதில்லை.

அழகான புத்தகம் தயாராகி விட்டது. இனி விற்பனை ஆரம்பிக்கலாம்.

❀

பெண்ணையும் பெண்ணையும் இணைப்பது ஊர்வம்பு. — எஸ். பி.

ஆங்கிலம் கற்றவர்களும், ஹிந்தி பயின்ற வர்களும் ராகுல சாங்கிருத்தியாயனைப் பற்றி அறிந்திருக்கக்கூடும். இந்தியாவின் குறிப்பிடத்தகுந்த சில அறிஞர்களில் ஒரு வர். ஹிந்தியில் பெரிய நூலாசிரியர். இவ ருடைய நூல்கள் இரண்டை ஏற்கெனவே மொழிபெயர்த்துள்ளவரே இக்கட்டுரையை யும் எழுதியிருக்கிறார்.

ராகுல சாங்கிருத்தி யாயன்

கண. முத்தையா

1932-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் "டெய்லி மெயில்" "டெய்லி ஹெரால்டு" போன்ற லண்டன் பத்திரிகைகளில், "இந்தியாவிலிருந்து வந்துள்ள தெய்விக சக்தி வாய்ந்த சன்யாசி யின் திபேத்திய யாத்திரை"யைப் பற்றிக் கொட்டை எழுத்துக்களில் செய்திகள் வெளியாயின. பொய் யும் புளுகும் நிறைந்த அச் செய்தி களைப் பார்த்து அந்த சன்யாசி மிகவும் மனம் வருந்தினார். "தெய் வீக சக்தி"களையும், "அற்புத நிகழ்ச்சி"களையும் மறுத்து அவர் எழுதிய கடிதங்கள் வெளியிடப் படவே இல்லை. திடுக்கிடும் செய்தி களையும் அற்புத நிகழ்ச்சிகளையுமே மக்கள் விரும்பிப் படிக்கிறார்களென் பதை நன்குணர்ந்த பத்திரிகாசிரி யர்கள் உண்மைச் செய்திகளை வெளியிட்டுத் தமது பத்திரிகையின் விற்பனையை ஏன் குறைத்துக் கொள்ளப் போகிறார்கள்? அந்தப் பௌத்த சன்யாசிதான் உலகப் புகழ் பெற்ற இந்திய மேதை பேராசிரியர் ராகுல சாங்கிருத்தி யாயன்.

ராகுல்ஜி ஐக்கிய மாகாணத்தில் அஜம்கட் ஜில்லாவைச் சேர்ந்த கனைலா என்ற சிறிய கிராமத்தில் ஒரு மத்தியதரப் பிராமணக் குடும் பத்தில் பிறந்தவர். "எங்கள் குடும் பத்தின் ஏழு தலைமுறைகளில் சரஸ்வதியின் முகத்தைப் பார்த்த வன் நான்தான்." என்று அவரே கூறுகிறார். பட்டாளத்தில் சேவை செய்துவிட்டு ஓய்வெடுத்துக் கொண்டிருந்த பாட்டனாருக்குத் தம் பேரன் ஆங்கிலத் துரைமார்களைப் போல ஒரு ஆபீஸராக வேண்டு மென்று ஆசை. ஆகவே நான்கு மைல் தூரத்திலிருந்த பள்ளியில் ராகுல்ஜி சேர்க்கப்பட்டார். பள்ளிப் படிப்பும் பெரிய கிராமத்தின் சூழ் நிலையும் ராகுல்ஜியின் அறிவுத் தாகத்தை அதிகப்படுத்தின. படிக்க வேண்டும், வெளி உலகைச் சுற்றிப் பார்க்கவேண்டும் என்ற ஆசை சிறு வயதிலே அவரைப் பலமாகப் பிடித்துக் கொண்டது. ஒருவித மாகப் பள்ளிப் படிப்பை முடித்துக் கொண்டு காசி நகரிலே சமஸ்கிருதக் கல்வி பயிலத் தொடங்கினார். அப் போது அவருக்கு ஹிந்து மதத்தி லும் சமஸ்கிருதக் கலையிலும் அபார நம்பிக்கை.

காசி நகரில் வசித்த காலத்தில் ஆரிய சமாஜத்தின் தாராளக் கொள்கையும், தர்க்க விவாதங் களும் அவர் மனதைக் கவர்ந்தன. பழைய ஹிந்து தர்மத்தின் குறுகிய நோக்கங்களைவிட்டு ஆரிய சமாஜத்

தின் தாராளக் கொள்கைகளைப் பின்பற்றினர். ஆனால், ஆரிய சமாஜத்தினாலும் அந்த மேதையைத் தன்னுள் கட்டுப்படுத்தி வைத்திருக்க முடியவில்லை. அவருடைய அறிவுத் தாகம் மிக அதிகமானது. தேசத்திலே நடந்த விடுதலைப் போரும் அவரைத் தன்பால் இழுத்தது. ஒத்துழையாமை இயக்க காலத்தில் ஜில்லா காங்கிரஸ் காரிய தரிசியாகிச் சிறைவாசத்தையும் ஏற்றார். கட்டுக்கடங்காத அவருடைய அறிவுப் பசியும், சுற்றுப் பிரயாண ஆவலும் அவரை ஒரே வேலையில், ஒரே இடத்தில் தங்கவிடவில்லை. பல மொழிகளையும் கற்றுப் பல மதங்களையும்பற்றி ஆராய்ச்சி செய்தார்.

வைஷ்ணவ சம்பிரதாயத்தைப் பற்றி ஆராய்ந்த காலத்தில் தமிழில் மட்டும் கிடைக்கக்கூடிய சில பிரபந்தங்களைப் படித்துப் புரிந்து கொள்வதற்காக அவர் தமிழ் மொழியையும் கற்றார் என்பதையறியும்போது வாசகர்கள் ஆச்சரியப்படக்கூடும். சென்னைக்குப் பக்கத்திலுள்ள திருமழிசை என்ற ஊரில் பல வருடங்கள் தங்கித் தமிழும் சமஸ்கிருதமும் பயின்றார். மீமாம்ஸ சிரோமணி டி. வெங்கடாச்சாரியார் அவருடைய தோழ–மாணவர்.

பல மதங்களையும் ஆராய்ந்ததன் பயனாக பௌதீகத் தன்மை வாய்ந்ததும் அன்பை அடிப்படையாகக் கொண்டதுமான பௌத்த மதம் அவரைக் கவர்ந்தது. பௌத்த சன்யாசியானார். திபேத்திய மொழியிலும் சிங்கள மொழியிலும் பாலி பாஷையிலுமுள்ள பௌத்த நூல்கள் பலவற்றையும் ஆராய்ந்திருக்கிறார். திபேத்திய ஆராய்ச்சிக்குப் பின் பௌத்த தர்மத்தைப்பற்றி அவர் எழுதியுள்ள நூல்கள் மிகப் பிரசித்தமானவை. அதன் மூலம் இந்தியாவுக்கும் பௌத்த தர்மத்திற்கும் மிகப் பெரிய சேவை செய்திருக்கிறார். பௌத்தமதத்திலும் அவர் நீண்டகாலம் கட்டுப்பட்டுக் கிடக்கவில்லை. ஐரோப்பிய சுற்றுப்பிரயாணமும், ஓயாத படிப்பும் அவருக்கு மதத்தின் மீது இருந்த நம்பிக்கையை அடியோடு போக்கிவிட்டன. ''மதங்கள் யாவும் பொய்'' என்ற முடிவுக்கே வந்தார்.

விஞ்ஞானம், சரித்திரம், மொழி ஆராய்ச்சிகளில் அதிகக் கவனம் செலுத்தினர். விஞ்ஞான, சரித்திர அறிவின் பயனாக மார்க்கஸீய கம்யூனிஸ்ட்டாக மாறினர். லெனின்கிராடு சர்வ கலாசாலையில் கீழ்நாட்டுக் கலைகளின் பேராசிரியராகவும் வேலை பார்த்தார். இன்று அவர் கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினரல்லவென்றாலும் ஒரு சிறந்த மார்க்கஸீய வாதியே.

ராகுல்ஜி இந்திய மொழிகளில் பெரும்பாலானவற்றைக் கற்றுத் தேர்ந்திருப்பதோடு. திபேத், சிங்களம், ஆங்கிலம், பிரெஞ்சு, ருஷ்யன் முதலிய அந்நியநாட்டு மொழிகள் பலவற்றிலும் தேர்ச்சிபெற்றவர். சமஸ்கிருத மொழியிலே மகா பண்டிதர். வியாஸ மகாபாரதத்தை சமஸ்கிருதமூலத்திலிருந்து ருஷ்ய மொழியில் மொழிபெயர்த்திருக்கிறார். இறந்தொழிந்த லத்தீன், கிரீக், ஹீப்ரு மொழிகளிலும் வல்லவர். அவருடைய ஹீப்ரு மொழியாராய்ச்சியின் பயனாகத் தோன்றிய ''நினைவின் ஆழத்திலே'' என்ற நாவல் நீலநதிக்கரையில் ஓங்கி வளர்ந்திருந்த ஹீப்ரு நாகரீகத்தின் மேன்மையைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

ராகுல்ஜி சிறந்த சிந்தனையாளர். தெளிவான கருத்துக்களும், கூரிய அம்புபோன்ற சொல்லாட்சியும் உடையவர். அவருடைய முடிவுகளை ஒப்புக்கொள்ளாதவர்கள்கூட அவருடைய அறிவுப் பெருக்கையும், மேதையையும் பாராட்டுகின்றனர். ஐம்பதுக்கு அதிகமான புத்தகங்கள் எழுதியிருக்கிறார். அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதத்தில் உபயோககரமானது. ''வால்காவிலிருந்து கங்கை வரை''* என்ற நூல் பல பாஷைகளிலும் மொழி

பெயர்க்கப்பெற்று உலகப் புகழ் பெற்றது. "மானிட சமுதாயம்", "விஞ்ஞான பௌதிகவாதம்", "உலகத்தின் உருவத்தோற்றம்" என்ற மூன்று நூல்களும் அவருடைய விஞ்ஞான அறிவுக்கு எடுத்துக் காட்டுகள். அவருடைய அரசியல் நூல்களில் "பொது உடமை தான் என்ன?"* "ஓடாதே உலகத்தை மாற்று" "மூளை அடிமைத் தனம்" முதலியன மிகப் பிரசித்தி பெற்றவை. ராகுல்ஜி பல நாவல்கள் எழுதியிருக்கிறார். அவை எந்த இந்திய நாவலாசிரியரின் நாவலுடனும் போட்டி போடக்கூடியவை. "சிம்ம சேனாதிபதி" "சைத்தானின் கண்" "நினைவின் ஆழத்திலே" என்ற நாவல்கள் உலக நாவல்களுடன் சேர்க்கத்தக்கவை. மிகப் பெரிய மேதை; முக்கியமான பல விஷயங்களைப் பற்றியும் எழுதியிருக்கிறார் என்றாலும், யாவும் சாதாரண மக்களுக்குப் புரிய வேண்டுமென்ற நோக்கத்துடனேயே எழுதியிருக்கிறார். முதன் முதலில் அவர் "இருபத்திரண்டாம் நூற்றாண்டு" என்ற நூலை எழுதிய போது சமஸ்கிருத மொழியிலேயே எழுதினார். முழுவதும் எழுதி முடிந்ததும் தமது சமஸ்கிருத அறிவைப் பிரகடனப் படுத்துவதைவிட மக்களுக்குப் புரியும்படியாக எழுதுவதே மேல் என்று கருதி அதைக் கிழித்துவிட்டு மறுபடியும் ஹிந்தியிலேயே அந்த நூலை எழுதி வெளியிட்டார். "ஓடாதே உலகத்தை மாற்று" என்ற 340 பக்கங்கள் கொண்ட நூலில் முழுக்க முழுக்கக் கிராமிய பாஷையில், மிகச் சிக்கலான பொருளாதார — அரசியல் விஷயங்களை விளக்கியிருக்கிறார்.

ராகுல்ஜிக்கு இப்போது வயது ஐம்பத்தேழு. அவருக்கு விவாகமாகி மூன்று குழந்தைகளிருக்கின்றன. அவர் மனைவி ஒரு ருஷ்யப் பெண். இப்போது ராகுல்ஜி அலகாபாத்தில் வசித்து வருகிறார். இவர் தாய் மொழிப்பற்று மிகுதியாக உள்ளவர். தமது பன்மொழி யறிவாலும், சிறந்த ஆராய்ச்சியினாலும் தாய் மொழிக்குச் செழுமையும் பெருமையும் தேடித் தந்திருக்கிறார். அவருடைய நூல்களைக்கொண்டு ஹிந்தி பேசும் உலகம் மிகப் பெருமையடைகிறது.

* இக்குறியிட்ட இரண்டு நூல்களும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்திருக்கின்றன.

❋

ஹாலிவுட் வளமை?

"உங்கள் மகன் ஹாலிவுட் சினிமா ஸ்டுடியோவில் வேலை செய்கிறானே?"

"ஆமாம். சௌகரியமாக இருக்கிறான். நல்ல வருமானம். கல்யாணமாகியிருக்கிறது."

"அடிக்கடி உங்களைப் பார்க்க வருகிறானா?"

"வருகிறான். ஒவ்வொரு வருஷமும் கோடையில் இங்கே வந்து போவான். இப்படியே ஐந்து வருஷகாலமாக வந்துகொண்டிருக்கிறான்."

"வரும்பொழுது மனைவியையும் அழைத்துக்கொண்டு வருகிறானா?"

"வராமல் என்ன? இதுவரையிலும் வந்த அவனுடைய மனைவிமார் ஐந்துபேரும் நல்ல அழகான பெண்கள்தான்."

—பி. டி. வ்யூ

பருத்தி நூல்களுக்கு பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி லிமிடெட்

மதுரை—தூத்துக்குடி—அம்பாசமுத்திரம்

எங்களுடைய விசேஷமான நூல்கள்:

5,00,000 நூற்கும் கதிர்கள்	ஒத்தை நூல், இரட்டை நூல் பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக் கேற்றிய நூல்:	நம்பர் 80 வரை நூல்கள்

○

நாங்கள் சப்ளை செய்வது:

கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக் கேற்ற வார்ப்பு நூல்கள், கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக்கேற்ற மிருதுவான சன்ன நூல்கள்.

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப்போல் எல்லா வகையிலும் கீர்த்திபெற்றது.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை

○

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

மானேஜர்கள்

பிரிய சகோதரிகளே!

நான் ஓர் நர்ஸ் அல்ல, டாக்டரும் அல்ல. எனக்கும் வைத்தியமும் தெரியாது. நானே உங்களைப்போல் ஓர் குடித்தனப் பெண். எனது கல்யாணமான ஒரு வருடத்திற்குப் பின் துர்ப்பாக்கியத்தினால் விகோரியாவும் (வெட்டை) சூதக வியாதியும் ஏற்பட்டுவிட்டது. மாதவிடாய் நின்றுவிட்டது. அவ்வாறு ஏற்பட்டாலும் மிகுந்த வேதனையுடன் சொற்பமாகவே வெளி வந்தது. வெள்ளை நீர் (ஶ்வேதப்ரதர்) அதிகம் வெளி வருவதால் தினம் தினம் மிகவும் பலவீனம் அதிகரித்துக்கொண்டு வந்தது. முகம் வெளுத்துவிட்டது. வீட்டு வேலை செய்யவும் முடியவில்லை. எப்பொழுதும் தலை கிறுகிறுப்பு இருந்து வந்தது. இடுப்பு வலியும் ஏற்பட என் சரீரமே கெட்டு விட்டது. என் கணவர் நூற்றுக்கணக்கான ரூபாய் செலவு செய்து மருந்து வாங்கிக் கொடுத்தும் பலன் இல்லை. இரண்டு ஆண்டுகள் மிகுந்த துக்கத்துடன் ஓடி மறைந்தன. நல்லகாலமாக ஒரு ஓர் சந்நியாசி பிச்சைக்காக என் வீட்டு வாசலில் நின்றுகொண்டிருந்தார். நான் பிச்சை போட வெளியில் வந்ததும் அவர் என் முகத்தைப் பார்த்து, "அம்மா, உனக்கு என்ன வியாதி? இந்த வயதிலே உன் முகம் பஞ்சு போன்றிருக்கிறதே?" என்றார். நான் முழு விருத்தாந்தங்களையும் கூறினேன். அவர் என் கணவரைக் கூப்பிட்டு ஓர் மருந்து சொன்னார். அம் மருந்தை 15 தினங்கள் சாப்பிட்டதும் என் முழு வியாதியும் தீர்ந்துவிட்டது. ஆண்டவன் அருளால் இப்பொழுது நான் பல குழந்தைகளுக்குத் தாயாக இருந்து வருகிறேன். இம் மருந்தினால் நூற்றுக்கணக்கான பெண்களுக்கு நன்மை செய்து வருகின்றேன். இந்த அற்புத மருந்தை இக்கொடிய ரோகத்தினால் வாடும் என் சகோதரிகளின் நன்மைக்காகவே அசல் விலைக்குக் கொடுத்து வருகிறேன். ஆண்டவன் எனக்குப் போதிய செல்வம் அளித்திருக்கிறார். அதன் மூலம் நான் லாபம் சம்பாதிக்க விரும்பவில்லை. ஒரு பெண்ணிற்கு 15 தின மருந்தின் அசல் விலை ரூ. 2—14—0 [ரூபாய் இரண்டு அணா பதினான்கு] தபால் செலவு தனி.

இத்துஷ்ட ரோகத்தினால் பீடிக்கப்பட்டவர்கள் உடனே எழுதுங்கள். என் கையால் மருந்து தயாரிக்கப்பட்டு வி. பி. பி மூலம் அனுப்புகிறேன். தர்மத்தின் பொருட்டு அசல் விலைக்கே மருந்து கொடுக்கப்படுகிறது. அவசியம் கவனிக்க : இந்த ரோகத்திற்குத்தான் என்னிடம் மருந்து உண்டு. மற்ற வியாதியைப் பற்றிய மருந்திற்கு எழுதற்க.

SHRIMATI CHARAN PIARI

(S.T.M.) Sant Nagar, JULLUNDUR City.

சந்தேகம் விதை விழுந்து முளைத்தது. ஆனால், அதன் பலன் சந்தானத்தைத் தாக்கியது. நிரபராதியான சந்தானம் தன் சத்தியத்தை நிலை நாட்டினானா? அவனுக்குப் பாடம் கற்றுத் தந்த பிரின்ஸிபால், அவனிடமிருந்து தான் பாடம் கற்றாரா? நாடகத்தைப் படியுங்கள். இது சென்னை அகில இந்திய ரேடியோ நிலையத்தில் ஒலிபரப்பப் பெற்றது.

படிப்பினை

சிதம்பர ரகுநாதன்

பாத்திரங்கள்

சந்தானம்
நடராஜன்
ரகுபதி
சோமையா
} ஹாஸ்டல் மாணவர்கள்

பிரின்ஸிபால்
பியூன்
வேதநாயகம்—சந்தானத்தின் தந்தை

1

[கல்லூரி ஆரம்பமாவதற்கு அறிகுறியான மணியோசை. தொடர்ந்து நடராஜன் சீட்டியடித்து வரும் சப்தம் நெருங்குகிறது. பிறகு சீட்டி நிற்கிறது. கதவு தட்டும் ஓசை.]

நடராஜன்: ரகுபதி! ரகுபதி!

ரகுபதி: யாரது?

நட: நான் தான் நடராஜன். கதவைத் திறப்பா.

ரகு: சும்மா தான் சாத்தியிருக்கேன். கொஞ்சம் பலமாத் தள்ளு.

நட: ஏண்டா ரகு, இதென்ன இது. இன்னம் புறப்படாமெ, தலையைக் கூட வாரிக்காமே? மணியடிச்சது காதிலெ விழலியா? காது மந்தமாப் போச்சா?

ரகு: காது ஒண்ணும் மந்தமில்லெ. புத்தி தான்...

நட: உன் புத்திக்கென்ன கேடு வந்தது? பரீட்சை நெருங்குகிறதென்ற பயமா?

ரகு: பரீட்சை கிடக்கு. எனக்கே சந்தேகம். ஞாபக மறதி தான் அதிகமாப் போச்சா, இல்லே, நான் தான் தொலைத்து விட்டேனா?

நட: எதையடா தொலைத்து விட்டாய்? பணமா?

ரகு: பணமென்றால் தான் கவலை கிடையாதே. அப்பாவுக்கு எழுதினால் தானே வரது!

நட : பின் என்னத்தையடா போக் கடித்தாய் ?

ரகு : ஸாகார்’ஸ் மாடர்ன் பிசிக்ஸ் புத்தகத்தைத் தான்.

நட : ஏகப்பட்ட விலையாச்சே. நீ எப்போது வாங்கினாய் ? மார்க் கெட்டில் கூட அவுட் ஆப் பிரிண்ட் ஆச்சே !

ரகு : எப்படியோ வாங்கினேன். அதைச் சொல்லி என்ன பயன் ?

நட : ஹாஸ்டலில் வேறு யாரிட மும் அந்தப் புத்தகம் கிடையாது. வேண்டுமென்றால் லைப்ரரியில் தான் எடுத்துப் படிப்பார்கள். சரி, அதையா தொலைத்து விட்டாய் ?

ரகு : ஆமாம்.

நட : எப்படியடா தொலையும் ? அதென்ன சின்னப் புத்தகமா ? தலையணை மாதிரி இருக்குமே. அதை எப்படி...

ரகு : நானும் அதைத்தான் யோசிக் கிறேன். அந்தப் புத்தகம் எங்கே போயிற்றென்பது தான் தெரியவில்லை.

நட : கைத்தவறாக எங்காவது வைத்து விட்டாயா ?

ரகு : புத்திக்கு எட்டின மட்டும் புலப்படக் காணோம். ரூம் பூராவும் அலசிப் பார்த்தாச்சு. யானை பார்க்க வெள்ளெழுத்தா ?

நட : காலேஜில் எங்காவது ?

ரகு : காலேஜுக்கே கொண்டு போகவில்லையே.

நட : அப்படியானால் யாராவது...

ரகு : அது தான் நானும் நினைத் தேன். அந்தப் புத்தகம் நிச்சயம் தொலைய முடியாது. யாராவது தான் எடுத்திருக்க வேண்டும்.

நட : வீணாக யார் மீதும் சந்தேகப் படாதே. ஒருவேளை நீயே யாருக் காவது இரவல் கொடுத்து விட்டு...

ரகு : இரவலா ? புத்தகத்தை இரவல் கொடுக்கும் வழக்கமே என் னிடம் கிடையாதே. யாராவது தான்...

நட : அப்படியானால், உன் ரூமுக்கு யார் தான் வருகிறார்கள் ?

ரகு : எல்லாரும் தான் வருவார்கள் நீயும் தான் வருகிறாய்.

நட : ஏது, என்னையே சந்தேகிக் கிறாயா ?

ரகு : இல்லை, சொன்னேன். வருகிறவர் எல்லோருமே நண்பர்கள். யாரைச் சந்தேகிப்பது ?

நட : அது தான் நானும் சொல் கிறேன். எதற்கும் நீ வார்டனிடம் சொல்லி புத்தகம் காணாமற் போன விவரத்துக்கு புல்லட்டின் போர்டில் போடச் சொல்லு. தப்பித் தவறி இரவல் கொடுத்திருந்தால் கூட வந்து விடக்கூடும்.

ரகு : அதுவும் நல்ல யோசனைதான். இருந்தாலும், பலன் கிடைக்க வேண்டுமே.

நட : கிடைக்கும், கிடைக்கவில்லை. அதைப்பற்றி இப்போதென்ன கவலை ? போட்டு வை. சரி, நீ காலேஜுக்கு வரவில்லையா? ஸெகண்ட் பெல் அடிப் பதற்குக் கூட நேரமாகி விட்டதே.

ரகு : இல்லை, எனக்கு மனசே சரியில்லை. நீ போ. முடிந்தால் மத்தியானம் வருகிறேன்.

[கல்லூரியில் இரண்டாவது மணி அடிக்கும் ஓசை.]

நட : சரி சரி, மணி அடித்து விட்டது. நான் வருகிறேன். வீணா மனசை அலட்டிக்காதே.

2

சோமையா : ஏண்டா, ரகு, உன் புஸ்தகத்தைக் காணோமென்று நோட்டீஸ் போர்டிலே போட்டிருக்கே.

ரகு : ஆமாம், சோமு.

சோமை : முந்தா நாள் கூட, நீ அதை வைத்துப் படிப்பதை நான் பார்த்தேனடா ? நேற்று ‘சண்டே.’ இன்றோ நீ காலேஜுக்கே வரவில்லை. பின் புத்தகம் எங்கேடா போய்விடும் ?

ரகு : அதுதான் எனக்கும் தெரிய வில்லை.

சோமை : இறக்கை முளைச்சிப் பறந்தா போய்விடும் ? எவனோ

மெல்லக் கை வைத்துவிட்டான். அவ்வளவு தான்.

ரகு : யார் எடுப்பார்கள்? நமக்குள்ளேயே திருடுவார்களா?

சோமை : இந்தக் காலத்தில் யாரை நம்புறது? பார்த்தால் பசுத்தான். பாய்ந்தாலோ...? அது சரி, நீ கடைசியாகப் புத்தகத்தை எப்போது பார்த்தாய்?

ரகு : நேற்றுக் காலையில் பாத்ரூமுக்குப் போனபோது.

சோமை : அப்போது உன் ரூமிலே யார் இருந்தார்கள்?

ரகு : சந்தானந்தான் வந்தான்; இருந்தான்.

சோமை : குளித்துவிட்டு வரும் வரையிலா?

ரகு : வரும்போது அவனில்லே. எதிரே போனான்.

சோமை : அவன் கையில் புத்தகம் இருந்ததா?

ரகு : என்ன, சோமு, இருந்திருந்து சந்தானம் மீதா பழி சுமத்தப் பார்க்கிறாய்?

சோமை : எனக்கு யார் மீதும் பழி சுமத்த விருப்பம் கிடையாது, தம்பி. ஆனால் உண்மை வெளியாக வேண்டுமே. சந்தானம் உன் ரூமுக்கு வந்துவிட்டுப் போகும்போது பத்து மணி இருக்குமா?

ரகு : இருக்கும். பஸ்ட் பெல் அடித்தவுடன் தான் நான் குளிக்கப் போனேன்.

சோமை : எதற்காகக் கேட்டேன், தெரியுமா? பத்து மணி சுமாருக்கு சந்தானம் என் ரூம் முன்னால் கூடிச் சென்றான். அப்போது அவன் கையில் ஒரு புத்தகம் இருந்தது.

ரகு : என் புத்தகமா?

சோமை : யார் புத்தகமோ? புத்தகம் இருந்தது. அவ்வளவுதான்.

ரகு : ஒரு வேளை அவன் கையில் கொண்டு வந்த புத்தகமாயிருந்தால்?

சோமை : கையில் கொண்டு வந்ததை நீ பார்த்தாயா?

ரகு : ஞாபகமில்லே.

சோமை : பின்னே! எதற்கும் நீ சந்தானத்தைக் கேட்டுப் பாரேன்.

ரகு : எப்படிக் கேட்பது? நோட்டீஸ் போர்டில் போட்ட பிறகா? அவன் என்ன நினைத்துக் கொள்வான்?

சோமை : கேட்டால் என்ன நஷ்டம்? எனக்கென்னவோ அவன் தான் எடுத்திருக்கலாம் என்று சந்தேகம். பிறகு உன் இஷ்டம். இழக்கப் போவது நானா?

ரகு : நீ என்னதான் செய்யச் சொல்கிறாய்?

சோமை : வாயுள்ள பிள்ளைதான் பிழைக்கும். கேட்டுப் பார். இல்லேன்னா பிரின்ஸிபாலுக்கு ஒரு ரிப்போர்ட் பண்ணு. ஆசாமி தானா வழிக்கு வந்திடுவான்.

ரகு : காரணமில்லாமெ சந்தேகப் பட்டு, பிரென்ட்ஷிப்பை முறிச்சிடக் கூடாது, அப்பா.

சோமை : உனக்கு வேண்டியது பிரென்ட்ஷிப்பா, இல்லே, புத்தகமா?

ரகு : சந்தானம்......

சோமை : நான் சொன்னால் நீ எங்கே நம்பப் போகிறாய்? உனக்கு வெளுத்ததெல்லாம் பால். பிறகு உன் பாடு, அவன் பாடு. எனக்கென்ன வந்தது? நான் வருகிறேன்.

3

நட : என்னடா, சந்தானம். ஏது தனியா வந்து உட்கார்ந்திருக்கே? ஏதாவது நிஷ்டையா, இல்லே, கவி கிவி பாடி எங்களைப் பயமுறுத்தப் போறியா?

சந்தானம் : (மௌனம்)

நட : என்னடாது, பேசக்கூட மாட்டியா? மௌன விரதமா?

சந்தா : நடராஜ், கேலி போதும். எனக்கு மனசே சரியில்லே. சரி, இப்படி உட்காரு.

நட : என், என்ன விஷயம்? ஊரிலேருந்து ஏதாவது கடிதம் வந்ததா?

சந்தா : ஒன்றுமில்லே.

நட : என்னடா மென்று விழுங்குகிறாய்? என், என்ன நடந்துவிட்டது?

சந்தா : நீயும் என் நண்பன் தான். உன்னிடம் சொல்லக்கூட எனக்கு வெட்கமாயிருக்கிறது.

நட : அப்படி என்ன காரியம் செய்தாய்?

சந்தா : ஒன்றும் செய்யாதபோதே என்னைப் பற்றி இப்படிப் பேசினால்?

நட : யார் பேசினார்கள்? விஷயத்தைச் சொல்லடா.

சந்தா : ரகுபதியின் புத்தகத்தைக் காணோமாம்...

நட : அதுதான் நோட்டீஸ் போர்டில் போட்டிருக்கானே.

சந்தா : நானும்தான் பார்த்தேன். ஆனால், எனக்கு...நடராஜ்...எனக்குத் திருட்டுப் பட்டம் சூட்டுகிறான், நடராஜ்.

நட : என்னது, நீ திருடினாயா? அவன் உன்னிடம் கேட்டானா?

சந்தா : கேட்டிருந்தால் மனசு ஆறிப் போயிருக்கும், நடராஜ். உண்மையை சகஜமாய்ச் சொல்லியிருப்பேன். ஆனால்......

நட : சந்தானம், அவன் புத்தகத்தைத் தொலைத்துவிட்டான் என்று என்னிடமும் சொன்னான். ஆனால் நீ எடுத்ததாக அவன் சந்தேகம்கூடப் படவில்லையே. வேறு யாராவது தூண்டி விட்டிருப்பானோ?

சந்தா : நடராஜ், என்னை உனக்குத் தெரியாதா? எனக்கா திருட்டுப் பட்டம் கிடைக்க வேண்டும்?

நட : கவலைப்படாதே. உன் மீது திருட்டுப் பட்டம் சூட்டுகிறான் என்று உனக்கு எப்படித் தெரிந்தது?

சந்தா : நானே என் காதால் கேட்டேன். என்னிடம் நேரில் கேட்டால் தானா தெரியும்? ஜாடைமாடையாகப் பேசினால் தெரியாதா?

நட : யார் பேசினார்கள்?

சந்தா : இன்று ரகுபதி ரூமுக்குப் போனேன். அங்கு சோமு, ரகுபதி எல்லோரும் இருந்தார்கள். ஏதோ ரொம்ப குஷியாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். என்னைக் கண்டதும், கப்சிப்பென்று பேச்சை நிறுத்தினார்கள்.

நட : உனக்குத் தெரிய வேண்டாத விஷயத்தைப் பற்றி அவர்கள் பேசி இருக்கலாமல்லவா?

சந்தா : அவர்களுக்குள் ஆயிரம் ரகசியம் இருக்கட்டும். அதைப் பற்றிக் கவலையில்லை. ஆனால், வந்து உட்கார்ந்தவனைக் கொஞ்சங்கூடப் பொருட்படுத்தாமல், அவர்கள் பாட்டுக்கு ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார்கள்.

நட : அவர்கள் இண்டிபரெண்டாய் நடந்தால், நீ ஏன் அங்கு செல்ல வேண்டும்?

சந்தா : நேற்று வரை இல்லாத இண்டிபிரென்ஸ் இன்று எங்கிருந்து வந்தது? ஆனால், அவர்கள் பேச்சைக் கவனித்தேன், என்னைத்தான் ஜாடையாக பேசுகிறார்கள் என்று தெரிந்து கொண்டேன்.

நட : நீ திருடினாய் என்று சுட்டிக் காட்டினார்களா?

சந்தா : நல்ல மாட்டுக்கு ஒரு சூடு. அவ்வளவுக்கு எனக்கு விவேகமில்லையா? மனசு குமைந்தது. ஹாஸ்டலில் திருட்டு அதிகமாய்ப் போச்சாம். உண்ட வீட்டிலே கெண்டி தூக்குகிறார்களாம். எதைத்தான் பேசுவதென்றில்லை. நடுத்தெருவில் சண்டை போடுபவன்கூட கொஞ்சம் நாசூக்காய்ப் பேசுவான். இவர்கள்......?

நட : இவர்கள் படித்த முட்டாள்கள். அவர்களைப் பற்றி நீ ஏன் கவலைப் படுகிறாய்?

சந்தா : நடராஜ், அந்தப் பேச்சைச் சகிக்க முடியாமல் நான் எழுந்துவந்த போது, அவர்கள் சிரித்த அந்நையாண்டிச் சிரிப்பு......

நட : சிரித்தார்களா?

சந்தா : ஆம், அந்தச் சிரிப்பு என் நெஞ்சையே பிளக்கிறது, நடராஜ். எனக்கு வந்த வேகத்தில் திரும்பிச் சென்று "நான் திருடவில்லை" என்று சொல்லிவிடலாமா என்று நினைத்தேன்.

நட : நல்ல வேளை, நீ சொல்லாமல் வந்தது. இல்லையென்றால், குற்றமுள்ள

நெஞ்சு குறுகுறுக்கப் போய்த்தான் நீ இல்லை எனச் சொல்கிறாய் என்று அவர்கள் நினைக்கலாம்.

சந்தா : நீ சொல்வது வாஸ்தவம். ஆனால், அப்படிச் சொல்லியிருந்தால் கூட, என் மனசு ஆறியிருக்கும். ஆனால், அவர்கள் மறைமுகமாகப் பேசுவதைக் கேட்டுவிட்டும், அந்தக் குற்றச்சாட்டை நெஞ்சுக்குள்ளேயே போட்டு வைக்க முடியுமா? என் நெஞ்சு வேகிறது, நடராஜ்.

நட : சந்தானம், பதறாதே. உண்மை வெளிப்படும் போது அவர்கள் தானே வெட்கப்படுவார்கள். அதற்குள், நீயாக முந்திக் கொண்டு அவர்கள் சந்தேகத்தைப் பலப்படுத்துவானேன்?

சந்தா : உண்மை வெளிப்படும் வரை, நான் வேதனைப்பட வேண்டுமா, நடராஜ்? யாரோ செய்த தவறுக்கு, நானா துன்பப்பட வேண்டும்? நண்பர்களுக்கே நம்பிக்கை இல்லையென்றால், யாரைத்தான் குறை கூறுவது? நீயே சொல், நடராஜ்.

நட : கவலையை விடு. எல்லாம் சரியாய்ப் போகும்.

சந்தா: கறைபட்ட மனசில் கவலை நீங்குமா? எனக்கு நம்பிக்கை இல்லை.

நட: சரி சரி. அதையே நினைத்துக் கொண்டு உயிரை விடாதே. வா போய் ஒரு கப் காப்பி சாப்பிடலாம்.

சந்தா: இல்லை, நடராஜ்.

நட: அட சரிதாம்ப்பா. வா, என்றால்...

4

சோமு: என்டா ரகு, இன்டர் காலேஜியேட் டோர்னமெண்ட்டுக்கு நாள் நெருங்குகிறதே, இன்னும் நீ ப்ளேயர்ஸ் குறித்தனுப்பவில்லையா?

ரகு: குறிப்பதென்ன? நமது 'லெவன்ஸ்' இருக்கவே இருக்கிறது. அனுப்பவேண்டியது தானே?

சோமு: என்ன, காப்டன் சார். எனக்கு இடமுண்டு அல்லவா?

ரகு: என்னடா சோமு, உனக்கில்லாமலா? உன்னைத்தான் 'ஆப் பேக்' ஆகப் போட்டிருக்கிறேன்.

சோமு: சரி, வேறு யார் யாரெல்லாம்?

ரகு: பொறப்பா. நீ ஒண்ணு, நான் ஒண்ணு, ரத்தினசாமி, நடராஜன்...

நட: என்னப்பா, நான் இல்லாத வேளையிலே என்னைப்பற்றி என்ன பேசுறீங்க?

ரகு: நடராஜனா? வாப்பா, வா. உன்னைப்பற்றி என்ன பேசறது? இல்லாத வேளையிலே ஏதாவது பேசறதுக்கு நீ என்ன, சந்தானத்தைப் போல திருட்டுக் குந்தாணியா?

நட: ரகுபதி, சந்தானத்தை உனக்குத் தெரியாது. அவன் திருட மாட்டான்.

சோமு: திருடமாட்டான். என்ன நடராஜா, நீயும் ரகுபதியைப்போல என்றைக்காவது பறிகொடுத்தா தெரியும்.

நட: இதோ பாரு, சோமு, சந்தானமே என்னிடம் சொன்னான். நீங்கள் ஜாடையாய்ப் பேசினதை...

சோமு: அதைக் கேட்டு அவன் நெஞ்சு குறுகுறுத்ததாக்கும். அவன் முழிக்கிற முழியே தெரியுதே. அவன் வந்ததும் போனதும், அவன் எடுத்திருக்கா விட்டால், என்னமோ, இப்போதுதான் பெரிய கோபக்காரன் மாதிரி எழுந்திருந்து போவானேன்?

ரகு: சோமு, அந்தப் பேச்சை விட்டுத் தள்ளு. எல்லாம் ப்ரின்ஸ்பால்டெ ரிப்போர்ட் பண்ணியிருக்கேன்லெ. கூப்பிட்டு விசாரித்தா சாயம் வெளுத்துப் போகுது.

நட: பிரின்ஸ்பாலிடம் ரிப்போர்ட் பண்ணிவிட்டாயா?

ரகு: அதெல்லாம் பண்ணி நாலு நாளாச்சப்பா. சரி சரி, கிண்டின குப்பையை இன்னும் கிளறாதே. அவன் பேச்சை விடு.

சோமு: ரகு, அது சரி, மாச் விஷயத்தையே மறந்துட்டையே. வேறு யாரெல்லாம்...

ரகு: நடராஜன் ஒண்ணு, பிறகு ராமலிங்கம், பிறகு...

நட: என்ன, ரகு, சந்தானத்தைப் போடலையா?

ரகு: இல்லே.

நட: அவன்தானே நமது 'பெஸ்ட் புல்பாக்.' அவனில்லாமல் என்ன விளையாட்டு?

ரகு: அவனை ஸப்ஸ்டிட்யூட்டாகப் போட்டிருக்கிறேன்.

நட: ரகுபதி, உன் சொந்த விரோதம் ஆயிரம் இருக்கலாம். அதற்காக காலேஜ் டோர்னமெண்டில் ஒரு சிறந்த ப்ளேயரை ஒதுக்கித் தள்ளலாமா? ஒதுக்கித் தள்ளியிருந்தால் கூடப் பரவாயில்லே. ஆனால், அவனைப் போன்ற ஒரு ஸ்போர்ட்ஸ்மெனை ஸப்ஸ்டிட்யூட்டாகப் போடுவது அவனை அவமானப்படுத்துவதாகும்.

சோமு: பெரிய மானி. திருடும் போது மட்டும் மானமும் வெட்கமும் இல்லேயோ? பெரிய ஸ்போர்ட்ஸ் மேனும். திருட்டில்தான் ஸ்போர்ட்ஸ் மென்.

நட: சோமு, நீ பேசுவது சரியில்லே. அவன்தான் திருடினன் என்பதை நிச்சயம் பண்ணுவதற்குள் அவனைப் பற்றி நிந்திப்பது சரியல்ல.

ரகு: இதோ பாரு, நடராஜ். அவன் புத்தகத்தை எடுத்துச் சென்றதை சோமு தன் கண்ணுலே பார்த்திருக்கிறான்.

நட: அப்படியா சோமு?

சோமு: ஆம், நான் பார்த்தேன்.

நட: சோமு, இனி உன்னுடன் நான் பேசுவதில் பயனில்லே. தெய்வம் தான் இனி சந்தானத்துக்கு சாட்சி கூறவேண்டும்.

சோமு: திருடனுக்கு எந்த தெய்வமும் சாட்சி கூறுது, நடராஜ், இது 1950. வன்னியையும் கிணற்றையும் சாட்சிக்கு அழைக்கக்கூடிய திருவிளையாடல் காலமல்ல. தெரியுமா?

நட: ரகு, நான் வருகிறேன். இனியும் நான் பேசினல் வார்த்தைதான் தடிக்கும்.

சோமு: போய்விட்டானு? அவனுக்கு இவன் சிபாரிசு. பார்த்தாயா, ரகுபதி?

ரகு: சோமு, புத்தகம் கிடைத்தாலும் சரி, கிடைக்காவிட்டாலும் சரி, நான் சந்தானத்தின் மானத்தை வாங்காமல் விடப்போவதில்லே. ஸப்ஸ்டிட்யூட்டாய்த்தான் அவனைப் போடுவேன். அது காப்டன் இஷ்டம்!

5

நட: சந்தானம், இதற்கெல்லாம் வருத்தப்படலாமா? நீ இஷ்டப்பட்டால் விளையாடப் போகிறாய். இல்லேயென்றால்...

சந்தா: இல்லே, நடராஜ். வேண்டுமென்றே அவர்கள் என்னை ஐஸொலேட் பண்ணுவதை நீயும்தானே பார்த்திருக்கிறாய்?

நட: நானதான் நேரிலேயே கேட்டேனே. குரோதம் உண்டாவதற்கு காரண காரியமிருக்கிறதா?

சந்தா: ஆனல் எனக்கு அவர்கள் மீது எந்தக் குரோதமும் ஏற்படவில்லேயே.

நட: அது உன் குணம்.

சந்தா: நீ உணர்ந்த அந்த குணத்தை அவர்களும் ஏன் உணரவில்லே, நடராஜ்? அவர்களும் எனக்கு நண்பர்கள்தானே? என்னிடம் பேசாமல் அவர்கள் ஒதுங்குவதைக் கண்டு வருந்தவில்லே. ஆனல் என்னை ஒரு ப்ளேயராகக் கூட மதிக்கவில்லே என்றால்...

நட: அவர்கள் மதிக்கவில்லேயென்றால் நீ ப்ளேயரில்லாமல் போய் விடுவாயா? காலேஜ் முழுவதுக்குமே உன் திறமை தெரியுமே.

சந்தா: நான் விளையாடவில்லேயென்றால், காலேஜ் மட்டுமல்ல, மற்ற காலேஜ் மாணவர்களும் ஏன் என்று நினைக்கமாட்டார்களா?

நட: வாஸ்தவம்.

சந்தா: அப்படி நினைத்தால், நான் விளையாடாததற்குக் காரணம் இந்தத் திருட்டுப் பட்டம்தான் என்று அவர்

களுக்குத் தெரிந்துவிட்டால்...எனக்கு வேறு அவமானமே தேவையில்லை நடராஜ். ஸப்ஸ்டிட்யூட்டாகப் போவதைவிட, விளையாடப் போகாததே மேல். விளையாடாமல் இருப்பதைவிட, சாவதே மேல் நடராஜ்.

நட: அசட்டுத் தனமாய்ப் பேசாதே. எப்படியும் பிரின்ஸிபால் உன்னைக் கூப்பிட்டு விசாரிக்கவே செய்வார், அப்போது நீ உண்மையைச் சொல்லிவிட்டால் போச்சு.

சந்தா: சொன்னால் மட்டும் அவமானம் போய்விடுமா?

நட: வருவதற்கு முன்பே வந்ததாய் ஏன் கவலைப்படுகிறாய்?

சந்தா: இன்னும் என்ன பாக்கி? போதும் போதும், எனக்கு ஒன்றுமே ஓடவில்லை. மனசு எரிகிறது.

[பியூன் வருகிறான்—கதவு தட்டும் ஓசை.]

சந்தா: யாரது?

ப்யூன்: நான் தான் சாமி, ப்யூன்.

சந்தா: ஓ, வேலுசாமியா? எங்கே வந்தே?

ப்யூன்: உங்களை பிரின்ஸிபால் கூட்டியாரச் சொன்னாரு.

சந்தா: சரி, நீ போ. நான் வருகிறேன்.

ப்யூன்: இல்லீங்க. கையோடெ கூட்டியாரச் சொன்னாரு.

நட: எதிர்பார்த்தது வந்தே விட்டது. சந்தானம், போ... தைரியமாப் போ.

சந்தா: சரி வா, வேலு.

6

சந்தா: குட் மார்னிங், ஸார்.

பிரின்ஸிபால்: குட் மார்னிங். வா இப்படி. உட்காரு.

சந்தா: அப்பா. நீங்கள் எப்படி?

வேதநாயகம்: திருட்டுப் பயலே. அப்பா என்று அழைக்காதே. ஆமாம்.

சந்தா: இதென்ன அப்பா, நீங்களும்...

வேத: என் என்னை இங்கு பார்ப்பது ஆச்சரியமாயிருக்கிறதோ உனக்கு? இங்கே படிக்கத்தானேடா உன்னை அனுப்பி வச்சேன். இல்லே, அடுத்தவன் சாமானைத் திருடப் படிக்க வந்தியா?

சந்தா: அப்பா, நீங்களுமா என்னை...

வேத: அப்பாவாவது அம்மாவாவது. கேட்டதுக்கு பதில் சொல்லுடா.

சந்தா: அப்பா, நான் திருடினேன் என்று நீங்களும் நினைக்கிறீர்களா?

வேத: இல்லை, நீ பரம யோக்கியன். நீ திருடியதுக்கு சாட்சி இருக்கிற போது......

சந்தா: சாட்சியா, இது அநியாயம். அபாண்டம்!

வேத: இனிமேல் உன்னிடம் சாட்சியைக் கொண்டு வந்து நேரில் ருசுப்படுத்த வேண்டுமோ? கொஞ்சமாவது மானம் ஈனம் ஏதாவது இருந்தால் தானே? நீ எடுக்காமலாடா இவ்வளவு பெரிய ரிப்போர்ட்?

சந்தா: அப்பா, அந்தப் புத்தகத்தை நான் கண்ணால்கூடப் பார்த்ததில்லை.

வேத: கையினால் எடுத்தாய் போலிருக்கிறது!

சந்தா: இப்படியெல்லாம் கேட்டு என்னை வதைக்க வேண்டாம். எல்லோரும் சேர்ந்து கொண்டு என்மேல் அபாண்டப் பழி சுமத்தினால்......

வேத: அதெப்படி, அவ்வளவு மாணவர்களும் வீணாக உன்மீது பழி சுமத்துவார்கள், இது நிஜமில்லையானால்!...

சந்தா: அப்பா, இல்லவே இல்லை. வீணாக என் மானத்தைக் குலைக்கிறார்கள்.

வேத: என் மானத்தையல்லவா நீ குலைத்துவிட்டாய்? நெருப்பில்லாமே புகை எப்படிடா வரும்? காரணமில்லாமல்......

சந்தா: காரணமிருந்தால் மட்டும் பொய் உண்மையாகிவிடுமா?

வேத: உன்னிடம் வாதாட நான் இப்பொழுது வேலைகளை எல்லாம் போட்டுவிட்டு இங்கே ஓடி வரவில்லை. நீதானேடா எடுத்தாய்?

சந்தா : இல்லே, அப்பா இல்லே.

வேத : சரி, உன்னிடம் பேசிப் பிரயோசனமில்லே. உடனே புறப்படு.

சந்தா : எங்கே, அப்பா ?

வேத : எங்கேயா? ஊருக்குத்தான். உன்னேக் கையோட அழைத்துக் கொண்டு போறதுக்குத்தான் வந்திருக் கேன். இதுநான் படிச்ச காலேஜுன்னு உன்னே இங்கே எவ்வளவு சிரமப்பட்டு சேர்த்தேன், தெரியுமா ? எனக்கு பெருமையை சம்பாதித்துத் தந்து விட்டாய்.

சந்தா : அப்பா, அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வரக்கூடாது. நான் குற்ற வாளியல்ல. நான் நிரபராதி என்று எல்லாரும் தெரிந்து கொள்ளப் போகிறுர்கள், பாருங்கள்.

வேத : பரம யோக்கியன் இவன். பிரின்ஸிபால் பெரிய மனசு பண்ணி யிருக்கிறுர். உன்மேல் ஒழுங்கு நட வடிக்கை எடுத்து உன்னே டிஸ்மிஸ் பண்ண வேண்டியதிருக்க, இரக்கப் பட்டு டிரான்ஸ்பர் சர்டிபிகேட் தந்தி ருக்கிறுர்.

சந்தா: டிரான்ஸ்பர் சர்டிபிகேட்டா? அப்பா, ஒரு நாளும் முடியாது. என் மேல் ஒழுங்கு நடவடிக்கையும் எடுக்க முடியாது. என்னேக் காலேஜை விட்டும் அனுப்ப முடியாது.

வேத : என்னடா சட்டம் படிக் கிருய்? பெரிய அரிச்சந்திரன். வா, வேறே காலேஜிலே சேர்க்கப் பார்க் கிறேன். இடம் கிடைச்சால் சரி, கிடைக்காவிட்டால் உன் தலேவிதி.

சந்தா : அப்பா, இந்தக் காலேஜை விட்டு அசைவேன் என்று மட்டும் நினேக்காதீர்கள். என் படிப்பைப் பற்றி எனக்கு அக்கரையே இல்லே. ஆனுல் நான் குற்றவாளி அல்ல என்பது நிரூபணம் ஆகும்வரை நான் வரப் போவதில்லே.

வேத : செய்வதையும் செய்துவிட்டு முரண்டு பண்ணுதேடா, முட்டாள். எனக்கும் உனக்கும் அவமானச் சின்ன மாக நடமாடித் திரியவேண்டாமடா இங்கே.

சந்தா: அவமானச் சின்னம் இல்லே, அப்பா. இப்படிப்பட்ட காரியத்தை நான் செய்திருக்க முடியாது என்று என் சிநேகிதர்கள் அறியும்வரை நான் இங்கிருந்து விலகிப் போவது என் மனச்சாட்சிக்கு விரோதம் அப்பா.

வேத: மனச்சாட்சியாவது, மண்ணுங் கட்டியாவது?

சந்தா: எனக்கு ஏற்பட்ட அவ மானத்தைக் கழுவாமல் நான் வர முடியாது அப்பா. என் நண்பர்களே இந்தக் கெடுதியைச் செய்தார்கள். அவர்கள் அதை உணரும் வரை நான் வரமாட்டேன். என்மீது சுமத்தப் பட்ட குற்றத்தை ஒப்புக்கொண்டு நான் வரமாட்டேன், வரமாட்டேன். இது நிச்சயம்.

வேத: வீசி விளாசிமட்டும் பேசத் தெரிகிறது.

சந்தா: அப்பா, உங்கள் பிள்ளே திருடன் அல்ல, திருடன் அல்ல! இதை நம்புங்கள், அப்பா, நம்புங்கள்.

வேத: வெறும் மாய்மாலக் கண்ணீர்.

பிரின்ஸி : மிஸ்டர் வேதநாயகம், பொறுங்கள். சந்தானம், நீ கிளாசுக்கு போ.

வேத: இல்லே சார்.

பிரின்ஸி: பொறுங்கள், மிஸ்டர் வேதநாயகம், குற்றவாளியாக இருந் தால் அவன் இவ்வளவு தூரம் வாதாடி இருக்கமாட்டான். அவன் அதைத் தொடவில்லே என்பதற்கு இதுவே சரியான நிரூபணம். சரி, கிளாசுக்குப் போ, சந்தானம்.

வேத: ஒரு பாடம் அவனுக்குக் கற்பித்தால்தான் சரி.

பிரின்ஸி: இல்லே, உங்கள் மகன் திருடவில்லே. இல்லாவிட்டால் இப்படி மனங் கொதித்துப் பேசியிருக்க மாட் டான். நாம் அவனுக்கு ஒரு பாடமும் கற்பிக்கவேண்டாம். அவனிடமிருந்து தான் நாம் கற்றுக் கொள்ளவேண்டும்.

❁

சங்கீத உலகில் இன்று உலவும் ஒரு அற்புதத்தைப் பற்றிய கட்டுரை இது. இந்தக் கட்டுரை நாயகர் அநேக கலைத் திறமைகளில் தமக்கு ஈடு இணையற்றுப் பிரகாசிக்கிறார். 'சங்கீத கலா நிதிகளுக்குக் கலா நிதியாக விளங்கத்தக்க' இந்த மகா வித்வானைப் பற்றிப் படியுங்கள்.

விளாத்திகுளம் சாமி

ஜி. செல்லையா

தோடி ராகத்தை நினைத்தவுடன் திருவாவடுதுறை நாதஸ்வர மேதை ராஜரத்தினம்பிள்ளை ஞாபகத்திற்கு வருவதுபோல, கரஹரப்பிரியா ராகத்தை நினைத்தவுடன் மற்றொரு மேதை என் ஞாபகத்துக்கு வருவது வழக்கம். கரஹரப்பிரியா ராகத்தை அவர் கட்டுக் குத்தகைக்கு எடுத்து விட்டார் என்று கூட என் நண்பர்கள் சொல்லுவது வழக்கம். அந்த ராகம் அவருக்குப் பிதிரார்ஜித சொத்தைப் போலவே ஆகிவிட்டது. அருமந்த புத்திரனை சீராட்டிப் பாராட்டி வளர்ப்பது போல அவ்வளவு உறவு முறையுடன் சொந்தம் பாராட்டி கரஹரப்பிரியா ராகத்தைப் பேணி வளர்க்கும் அந்த சங்கீத மேதை தான் விளாத்திகுளம் சாமி.

விளாத்திகுளம் சாமியின் பெயர் நல்லப்பசாமி பாண்டியன் என்பதாகும். இவருடைய சொந்த ஊர் எட்டயபுரத்துக்கு சுமார் பத்து மைல் கிழக்கே இருக்கும் விளாத்திகுளம். 'இவர் மாதிரி மிகவும் இனிமையுடன் யாரால் ராக விஸ்தாரம் செய்ய முடியும்?' என்று கேட்கிறார் இசைச் செல்வர் டி. லக்ஷ்மணபிள்ளை. நம்முடைய (சங்கீத) கலாநிதிகளுக்கு இவர் குருவாக விளங்கக் கூடியவர் என்கிறார் அறிஞர் ஜி. வெங்கடாசலம். இவரை அறிந்த சங்கீத வித்வான்கள் யாவரும் ஒருமுகமாக, "அவர் ஒப்புயர்வில்லாத மேதாவி அல்லவா?" என்று கூறுகிறார்கள். தமிழ் நாட்டில் மட்டு மல்லாமல், வட நாட்டிலும் கூட சிலருடைய பாராட்டுகளைச் சம்பாதித்திருக்கிறார் நல்லப்பசாமி பாண்டியன். பம்பாயைச் சேர்ந்த சில சங்கீத அறிஞர்கள், சென்னையில் நல்லப்பசாமி பாண்டியனுடைய பாட்டைக் கேட்டு விட்டு, "இவர் எங்கள் இசை ஞானி ஓங்கார நாத தாகூரை ஞாபகப் படுத்துகிறார்" என்றார்களாம்.

விளாத்திகுளம் சாமி என்னும் நல்லப்பசாமி பாண்டியனுக்கு இன்று சுமார் அறுபது வயதிருக்கும். சியாமள வர்ண மேனியும், நரைத்த மீசையும், கம்பீரமான தோற்றமும், திடமான உடற்கட்டும் உடைய இந்தப் பெரியார் தமிழகத்தின் பழைய கவிச் செல்வர்களை ஞாபகப் படுத்துகிறார். அர்த்தமற்ற, சம்பிரதாயமான சங்கதிகள் எவற்றையும் இவரிடத்தில் காண முடியாது. உடுப்பது நான்கு முழக் கதர் வேஷ்டி. அதே போல சரீரத்தில் நான்கு முழக் கதர்த்துண்டு. மடியில் ஒரு விபூதிப்பை. நெற்றி நிறைய திருநீறு. இவ்வளவோடு தான் எந்த இடத்திலும் நல்லப்பசாமி பாண்டியன் காட்சி அளிக்கிறார். இந்தத் தோற்றத்தையும், பொதுமக்கள் 'சாமி' என்று அழைப்பதையும் பார்த்து, இவரை

'சாமியார்' என்றே சிலர் நினைப்பது உண்டு. அது தவறு. 'விளாத்திகுளம் நல்லப்பசாமி பாண்டியன்'என்பதுதான் சுருக்கமாக 'விளாத்திகுளம் சாமி' என்று வழங்கப்படுகிறது.

ஆங்கிலப் படைகளை எதிர்த்துப் போரிட்ட பாஞ்சாலங் குறிஞ்சி கட்ட பொம்மு நாயக்கரின் வீர மரபைச் சேர்ந்தவர் விளாத்திகுளம் சாமி. இவர் பாஞ்சாலங்குறிச்சிக்கு உதவியாக இருந்த காடல்குடி ஜமீன்தார் மரபில் உதித்தவர் என்றும் பிறர் மூலம் கேள்விப்பட்டிருக்கிறேன்.

விளாத்திகுளம் சாமி சுதேச அபிமானம் மிகுதியும் உடையவர். மேலும் கவியரசர் சி. சுப்பிரமணிய பாரதியாருக்கு இவர் நண்பரும் கூட.

தஞ்சை ஜில்லாவில் திகழ்ந்த சின்னப்பக்கிரி நாதஸ்வரக்காரரின் தொடர்பினால் விளாத்திகுளம் சாமியின் இசை ஞானம் வளர்ந்து வந்தது. சின்னப் பக்கிரியைப் பற்றிப் பேசும் போதெல்லாம் விளாத்திகுளம் சாமி தம்மை மறந்து வாயாரப் புகழ்வதுண்டு. சுமார் முப்பது வருஷங்களுக்கு முன்னமேயே, 'விளாத்திகுளம் சாமியைப் போல ராக ஆலாபனம் செய்வது அபூர்வம்' என்று வித்வான்களிடையே பேச்சு பிறந்து விட்டது. அப்போது பெரிய வித்வானாக இருந்த கோனேரிராஜபுரம் வைத்தியநாத ஐயர் தாம் கச்சேரி செய்யும் இடங்களில் விளாத்திகுளம் சாமியைப் பார்த்து விட்டால், தம் கச்சேரி முடிந்ததும் சாமியையும் பாடச் சொல்லுவாராம். இவருடைய மேதையைப் பொதுமக்கள் உணர வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் வைத்தியநாத ஐயர் அப்போது இளைஞராக இருந்த சாமியைப் பாடச் சொல்லுவதாம்.

பிறகு, ஒரு சமயம் திருவனந்தபுரத்தில் இவருடைய கச்சேரி நடந்த சமயத்தில் இசைச் செல்வர் டி. லக்ஷ்மணபிள்ளை, சாமியைப் பாராட்டி பின்வரும் வெண்பாவை இயற்றினாராம் :

நல்லப்பசாமி
நளின குரல் பாண்டியனின்
வெல்லப்பண் யாரே
விரித்திடுவார்—(சொல்லில்)
மயிலுக் கீடில்லை
வடிவழகு ; (மாநிலத்தில்)
குயிலுக் கீடில்லை
குறல். †

மயிலுக்கு ஒப்பான அழகும், குயிலுக்கு ஒப்பான குரலும் இல்லாதது போல, விளாத்திகுளம் சாமிக்கு ஒப்பாக பண் இசைப்பவர்கள் இல்லை என்று பாராட்டும் இசைச் செல்வர் டி. லக்ஷ்மணபிள்ளை தம் புத்தகங்களை விளாத்திகுளம் சாமிக்கு அன்பளிப்பாகக் கொடுக்கும் போது புத்தகங்களில், சங்கீத மகா வித்வான் என்ற அடை மொழியுடன்தான் விளாத்திகுளம் சாமியின் பெயரை எழுதிக் கொடுப்பது வழக்கம்.

* * *

விளாத்திகுளம் சாமியிடம் உள்ள தனித் திறமை, அவர் ராக ஆலாபனம் செய்வதாகும். சாரீர சம்பத்தும் அதற்கேற்ப அவரிடத்தில் பரிபூரணமாக உள்ளது. சிறு வயதில் அசுர சாதகம் செய்து, தம் குரலை நன்கு பண்படுத்திக் கொண்டிருக்கிறார்.

† ஞாபகத்திலிருந்து இந்தப் பாட்டை இங்கே எழுதியிருக்கிறேன். பிராக்கெட்டுகளுக்குள் உள்ள, 'சொல்லில்,' 'மாநிலத்தில்' என்ற இரண்டு சொற்களும் பாட்டில் உள்ளவையா அல்லது அவ்விடங்களில் வேறு சொற்கள் இருந்தனவா என்பது சந்தேகமாக இருக்கிறது.

—ஜி. சேல்லையா

இவர் எப்படிப் பட்ட அபூர்வ ராகத்தையும் மணிக் கணக்கில் யாதொரு சிரமமும் இன்றி சுலபமாகக் கையாளக் கூடியவர். ஒரு முறை போட்ட சங்கதிகள் மறுமுறை ராகத்தில் பேசாது. அது மட்டுமல்ல, இவரிடம் ஒரு ராகத்தை ஒரு தடவை கேட்ட மாதிரியில், பிறகு எந்தக் காலத்திலும் கேட்க முடியாது. ஒவ்வொரு தடவையும், எண்ணற்ற புதிய சங்கதிகள் பேசும்; ராகத்தின் உருவமும், அழகும் புதிய சோபையுடன் திகழும். அவ்வளவு விரிந்த கற்பனையும், மனோதர்மமும், சிருஷ்டி சக்தியும் ஒருங்கே வாய்க்கப் பெற்றவர். இந்த விசேஷத் திறமை தமிழ் நாட்டில் எத்தனை வித்வான்களிடம் இருக்கிறது? மிகமிகப் பெரிய பாகவதர்கள் என்று சொல்லப்படுகிறவர்களும் கூட ஒரு ராகத்தைப் பாட ஆரம்பித்து விட்டால், இவர் இன்ன இடத்தில் இந்த சங்கதி போடுவார் என்று அவருடைய கச்சேரியைப் பல முறையும் கேட்டவர்கள் முன் கூட்டியே சொல்லிவிடுகிறார்கள். கிராமபோன் இசைத் தட்டு போல சொல்லியதையே சொல்லிக்கொண்டிருப்பது பல பெரிய வித்வான்களின் வளமையாக ஆகிவிட்டது. இன்னும் சில பாடக, பாடகிகளின் நிலை இதைவிடப் பரிதாபகரமாக இருக்கிறது. அவர்கள் திருப்பித் திருப்பி ஒரே மாதிரியான சங்கதிகளைப்போட்டு கேட்பவர்களைச் சலிப்படையச் செய்வதுடன் நிற்காமல், ஏற்கெனவே பல முறை பாடிய ஒரு சில ராகங்களையும், ஒரு சில உருப்படிகளையும்தான் பாடுவார்கள். இதற்கெல்லாம் என்ன அர்த்தம்? ஆனானப்பட்டவர்கள் என்று புகழப்படும் இந்த வித்வ சிகாமணிகளிடம் கலைஞனிடம் இருக்க வேண்டிய மனோ தர்மமோ, கற்பனையோ துளிக்கூட இல்லை என்றுதானே அர்த்தம்! நானறிந்த மட்டில் இந்தக் குறைக்கு ஆளாகாமல், விதிவிலக்காக இருப்பவர்கள் ஒரு சிலரே. அந்த ஒரு சிலரிலும், நாதஸ்வர வித்வான்களும், வாத்திய நிபுணர்களும் தான் அதிகம். இப்படிப்பட்ட இன்றைய சங்கீத உலகில் விளாத்திகுளம் சாமி ஓர் அற்புதமாகவே விளங்குகிறார்.

கரஹரப்பிரியா, தோடி, பைரவி, ஷண்முகப்பிரியா, ஹிந்தோளம், சங்கராபரணம், சாருகேசி முதலிய பல ராகங்களுடன் தள்ளுபடியான மேள கர்த்தாக்கள் என்று சொல்லப்படும் கனகாங்கி, ரத்னாங்கி, வாகதீச்வரி, சூலினி, யாகப்பிரியா முதலிய பல ராகங்களையும் இவர் பாடக் கேட்டிருக்கிறேன். 72 கர்த்தாக்களையும் இப்படி லாகவமாகக் கையாளும் ஆற்றலை சாதாரணமாக எல்லா வித்வான்களிடமும் எதிர்பார்ப்பதற்கில்லை. ஏதோ ஒரு சிலர் பாடினாலும், மனோ தர்மம், அழகு, சுகம் என்ற விஷயங்களில் விளாத்திகுளம் சாமியின் அருகில் அவர்களால் வர முடியுமா என்பது சந்தேகமே.

கரஹரப்பிரியாவில் நவ ரசங்களும் பிறக்கும்படி பாடவேண்டு மென்பார் சாமி; பாடியும் காட்டுவார். ஜி. வெங்கடாசலம் "மைசிந்தியா" பத்திரிகையில் 8—5—49 இதழில் இவரைப் பற்றிப் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:

"வட இந்தியாவிலும், தென் இந்தியாவிலும் பல பிரசித்தி பெற்ற பாடகர்கள் பாட நான் கேட்டிருக்கிறேன். இந்தப் பாடகர் (சாமி) ராகங்களில் மட்டு மல்லாமல் ஸ்வரங்களிலும் நவ ரசங்களைக் காட்டுகிறார். இந்த விஷயத்தில், இன்று இவருக்கு இணையானவர்கள் ஒருவருமே இல்லை. சுருக்கமாகச் சொன்னால் இன்றையப் பாடகர்களில் இவரை மிஞ்சக் கூடியவர் எவருமில்லை; இவருக்கு இணையானவர்களும் ஒரு சிலரே."

ராகத்தைப் பாடும் முறைபற்றி இவர் சொல்லுவது மிகவும் ரசமாக இருக்கும். 'ராகம் பாடும்போதே அங்கங்கே கொடுக்கல் வாங்கல், பற்று வரவு முதலியன ஒழுங்காக நடக்க

வேண்டும். கொஞ்சதூரம் வேகமாகப் போக வேண்டும்; பிறகு படுத்து, கொஞ்சம் களைப்பாறிக் கொள்ள வேண்டும்; அதன் பிறகு எழுந்து நடக்க வேண்டும்; பாடுகிறவர் பாடாமல் பாட வேண்டும்; கேட்பவர் கேட்காமல் கேட்க வேண்டும்...' இவ்விதமாக இவர் சொல்லுவார். சங்கராபரணம், ஹிந்தோளம். முதலிய ராகங்களை முழுக்க முழுக்க ஆங்கில சங்கீதம் போல சிறிது நேரம் பாடிக் காட்டு வார். ஆங்கில சங்கீதம் நம் சங்கரா பரணத்துக்கு மிகவும் நெருக்கமானது என்று கூட ஒரு முறை இவர் தெரி வித்தார். இவர் பாடுவது சில சமயங் களில், வீணை வாசிப்பதைப் போலவும், நாதஸ்வரம் வாசிப்பதைப் போலவும், ஜயபேரிகை கொட்டுவதைப் போலவும் இருக்கும். வாய்ப் பாட்டில் இவரைப் போல அழகான, வேகமான, பிர்க்காக் கள் போடுகிறவர்கள் வேறு எவருமே கிடையாது. பக்கிரி நாதஸ்வரக்காரர் இதைவிட வேகமாக பிர்க்காக்களுடன் வாசிப்பது உண்டென்று இவர் சொல்லுவார். இன்று ராஜரத்தினம் பிள்ளையும் வேகமான பிர்க்காக்களால் எல்லோரையும் பிரமிக்க வைத்து விடுகிறார்.

எல்லாவற்றையும்விட ஒரு அதிசயம்: ஹார்மோனியத்தை எல்லோரும் பார்த்திருப்பார்கள். அதில் இடது கோடியில் உள்ள வெள்ளைக் கட்டையை அழுத்தினால் மிகவும் கனமாக 'ச' என்ற ஸ்வரம் பேசும். வலது கோடியில் உள்ள வெள்ளைக் கட்டையை அழுத்தினால் மிகவும் மெல்லிய கீச்சுக் குரலில் 'ச' என்ற ஸ்வரம் பேசும். இந்த இரண்டு துருவங் களையும் தீண்டும்படியாக வாய்ப் பாட்டில் ராக சஞ்சாரம் செய்வது நினைக்கவும் முடியாத சிரமமான காரியம். பெரும்பாலும் 'கீழ் பஞ்சம'த் திலிருந்து 'மேல் பஞ்சமம்' வரை யிலும் தான் சஞ்சரிப்பார்கள். ஆனால் விளாத்திகுளம் சாமி மேற்சொன்ன இரண்டு துருவங்களையும் அனுபாச மாகத் தொடுவது மட்டுமல்லாமல், அவ்விடங்களில் நின்று சஞ்சாரம் செய்வதும், ஒரு துருவத்திலிருந்து மறு துருவம் வரை அதி வேகமாக பிர்க்காக்கள் உருளுவதும், அத்துடன் நிற்காமல் இரண்டு துருவங்களையும் தாண்டி சில ஸ்வரங்கள்வரை அப்பால் போய் சஞ்சரிப்பதும் உண்டு. இந்த மகா அற்புதத்தை இந்த வயோதிக காலத்திலும் இவர் செய்கிறார். இதைக் கொண்டு பார்த்தால் இவருடைய சாரீர வளமும், நிர்ணயமும், சாதுரி யமும், போராற்றலும் புலப்படும். இந்த அற்புதத்தை இவரைத் தவிர வேறு யாரும் எந்தக் காலத்திலும் செய்த தாகப் பிரஸ்தாபம் இல்லை என்று பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

* * *

காசைக் கணக்குப் பண்ணி இசையைப் பேரம் பேசுவது இவருக்குப் பிடிக்காது. ரசிகத்தன்மை உள்ளவர்கள் விரும்பிக் கேட்கும் ராகங்களை எல்லாம் அன்பு மேலீட் டால் கைம்மாறு கருதாமல் இவர் பெருந்தன்மையுடன் பாடியிருக்கிறார். அன்பளிப்பும் சன்மானமும் அவரவர் சக்திக்கேற்ப இருக்கும். ஆனல் அவர்களுக்கும் பரிபூரணமாகச் சங்கீத விருந்தை அளிப்பார்.

சுருதி என்றால் இவருக்கு உயிர். சுருதியை வாத்தியங்களில் மட்டுமின்றி பிற இடங்களிலும் காண்பவர் விளாத்திகுளம் சாமி. ரயில் வந்து நின்றதும் எஞ்சினில் நீராவியின் காரணமாக எழும் இரைச்சலைக் கேட்டிருப்பீர்கள். இது சுகமாக, ஒழுங்காக அமைந்து விட்டால் அதையே சுருதியாகக் கொண்டு ஒரு ராகத்தை முனகத் தொடங்கிவிடுவார். இதுபோல், ஆலைச் சங்கின் ஒலி, மின்சார ஸ்டேஷனில் கிளம்பும் ரீங்காரம், சேமக்கலத்தின் ஒலி, ஆகாய விமானத்தின் இரைச்சல்— இவையும் இவருக்கு சுருதிகளாகி

விடுவது உண்டு! குளிக்கும் தண்ணீர் நன்ருக இருந்துவிட்டால், 'தண்ணீர் சங்கீதமாக இருக்கிறது!' என்று பாராட்டுவார். சாப்பிடும்போது பதார்த்தங்கள் தக்க பக்குவத்துடன் இல்லை என்ருல், 'பக்க மேளம் பொருத்தமில்லை' என்றும் கூறுவார். இவருக்கு உலகமே சங்கீத மயமாகத் தான் காட்சியளிக்கும்.

உயர்தரமான சங்கீதத்தை ஐ. சி. எஸ். சங்கீதம் என்று தமாஷாகக் கூறுவார். அடக்கம், பவ்வியம், சாதாரணமானவர்களிடத்தில் காணப் படும் ஒரு சில திறமைகளையும் மனப் பூர்வமாகப் பாராட்டுதல் ஆகியவை இவருடைய விசேஷ குணங்களாகும். ஒரு முறை எங்கள் ஊருக்கு ஒரு சினிமாப் படம் வந்திருந்தது. அதில் ஒரு நடிகர் பாடும் பாட்டில் ஓரிடம் மிகவும் சுகமாக இருக்கிறது என்று விளத்திகுளம் சாமி கூறினர். அந்த நடிகர் சங்கீதத் திறமைக்காகப் பாராட்டப்படும் நடிகர் அல்ல என்ருலும், அந்த ஒரு பாட்டின் ஓரிடத்திற்காக அந்தப் படத்தைப் பல முறையும் சாமி பார்த்திருக்கிருர். அவருடன் நானும் நண்பர் குழாத் துடன் ஒரு தடவை போனேன். அந்தப் பாட்டு முடிந்ததும் எல்லோரும் வீட்டுக்கு வந்து விட்டோம். உண்மை யான கலை, ரயில் எஞ்சினில் எதிரொலித்தாலும், சாதாரண சினிமா நடிகரிடம் எதிரொலித்தாலும் அதைப் பாராட்டி அனுபவிக்கும் இவருடைய விரிந்த மனப்பான்மையை எவ்வளவு பாராட்டினுலும் தகும். கலைஞனுக் குரிய பண்பும் இதுதானே?

இவரும் பாரதியாரும் நெருங்கிப் பழகியவர்கள். "உன் பாட்டு, பாஞ் சாலங் குறிச்சி கட்ட பொம்மனுடைய வீரப் போராட்டத்தின் கம்பீரத்தைக் கொண்டிருக்கிறது" என்று சாமியிடம் பாரதியார் ஒரு முறை கூறினராம். திருச்சியில் சாமியின் கச்சேரியைக் கேட்ட, காலம் சென்ற ஸ்ரீ. வ. வெ. சு. ஐயர், "ஐரோப்பாவில் இப்படிப் பட்ட சங்கீதத் திறமையை அடை வதற்கு இப்போதுதான் அடிப்படை முயற்சிகள் நடை பெறுகின்றன" என்று உரைத்தாராம்.

இன்றைய பிரபல சங்கீத மேதாவி கள் எல்லோரும் இவரை நன்கு அறிவர். இவருடைய கானத்தை நன்கு அனுபவிக்கின்றனர். இவரை வாயார மனமார நன்கு புகழ்கின்றனர். இவர் தற்போது திருநெல்வேலி ஜில்லாவில் சங்கரன் கோவில் தாலுகாவைச் சேர்ந்த கரிவலம் வந்த நல்லூருக்கு அருகில் உள்ள எட்டுசேரி என்னும் கிராமத்தில் வசித்து வருவதாகத் தெரிகிறது. சென்ற தலை முறையில் எட்டயபுரம் சீமை, கவிஞர் சி. சுப்பிர மணிய பாரதியார், சைத்ரீகர் காசி மகாராஜா, வீரர் வ. உ. சிதம்பரம் பிள்ளை, இசைஞானி விளாத்திகுளம் சாமி ஆகிய நால்வரைப் பெற்றெடுத் தது. இந்த நால்வரும் தத்தம் துறையில் தமக்கு மிஞ்சியவர்கள் இல்லை என்ற கீர்த்தியுடன் இலங்குகிறவர்கள். இவர் களில் முதல் மூவரும் காலமாகிவிட் டார்கள். விளாத்திகுளம் சாமி இன்று நம்மிடையே வாழ்கிருர். இவருடைய திறமையைத் தமிழ் உலகம் நன்கு அறியவில்லை; நன்கு பயன்படுத்தவும் இல்லை. தமிழ் உலகத்துக்கு அதிர்ஷ்டம் பிறக்கும் என்ருல், விளாத்திகுளம் சாமியின் கலைப் பொக்கிஷத்தை எல்லோரும் அனுபவிக்கும் நாள் அவசியம் வந்தே தீரும். அந்த அதிர்ஷ்டம் என்று வருமோ?

பாதி அங்கே?

உலகத்தில் வாழும் நூறு வயது நிரம்பிய பேர்வழிகளில் பாதிப் பேர் பல்கேரியா தேசத்தில்தான் வசிக்கிருர்கள்.

—ஜார்ஜ் எடிங்கர்

தேவையற்ற விவரங்கள்

★ யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை, எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற.

—திருவள்ளுவர்.

"ஜி. சி."

*1640-ம் வருஷத்தில் சென்னையில் மொத்தம் 400 குடும்பங்கள் தான் குடியிருந்தன. *1672-ல் திருவல்லிக்கேணி, வருஷத்திற்கு 50 வராகன் வாடகைக்கு வெள்ளையர்களிடம் விடப்பட்டது. *சென்ற டிஸம்பரில் கிறிஸ்துமஸ் விடுமுறையைக் கழிக்க வெளியிடங்களுக்குப் போயிருந்த அமெரிக்கர்களில் 556 பேர் வீடு திரும்பவில்லை; விபத்துக்களில் இறந்துபோனார்கள். *காப்பியை ஒரு பானமாக அருந்துவதற்கு முன், மருந்தாகப் பயன்படுத்தி யிருக்கிறார்கள். இன்று தென் அமெரிக்காவில் பிரேஸில் நாட்டின் வடபகுதியில் உள்ள பூர்வீக ஜாதியினர் காப்பிக் கொட்டையைத் தண்ணீரில் ஊறப் போட்டு அந்தத் தண்ணீரை எடுத்து கண்வலிக்காரர்களின் கண்களைக் கழுவுகிறார்கள். *மோட்டார்களில், டயர்களும், ட்யூப்களும் நீங்கலாக, சராசரி 50-லிருந்து 80 பவுண்டு ரப்பர் வரை இருக்கிறது. *அமெரிக்காவில் பெரிய தொழில்களில் ஏழாவது ஸ்தானத்தை வகிக்கிறது ஹோட்டல் நடத்தும் தொழில். *சுமார் 2100 வருஷங்களுக்கு முன் கட்டப்பட்ட சீனப் பெருஞ் சுவரின் நீளம் 1400 மைல்; உயரம் 18-லிருந்து 30 அடிவரை இருக்கிறது. மண்ணுலகத்தில் மனிதன் செய்த காரியங்களில் இந்தச் சுவர் ஒன்றுதான் சந்திரமண்டலத்திலிருந்து பார்த்தாலும் தெரியக் கூடியது. *அமெரிக்காவில் பிலடெல்பியா மாகாணத்தில் வாழ்ந்த ஒரு இளம் விதவைதான் தற்போதிருக்கும் மாதிரியில் அமெரிக்கக் கொடியை 174 வருஷங்களுக்கு முன் தயாரித்தாள். ஜார்ஜ் வாஷிங்டன் தம் யோசனைப்படி ஒரு கொடி தைக்கும்படி அந்தத் தையற்கார விதவையிடம் கூறியிருந்தார். அவளோ அப்படிச் செய்யாமல் தன் யோசனைப்படி தைத்துவிட்டாள். *1727-ல் (223 வருஷங்களுக்கு முன்) ஹெலன் மாரிஸன் என்ற ஒரு ஆங்கிலப் பெண், "மான்செஸ்டர் வீக்லி" என்ற பத்திரிகையில் தனக்கு மணமகன் தேவை என்று விளம்பரம் செய்திருந்தாள். இந்தமாதிரி விளம்பரங்களில் முதல் விளம்பரம் இது தான். அப்போது ஆங்கில மக்கள் இந்த 'அதிசய' விளம்பரத்தைப் பார்த்து சும்மா இருந்துவிடவில்லை. அந்தப் பெண்மீது இல்லாததும் பொல்லாததுமான புகார்களைச் சுமத்தினார்கள். பிறகு அவள் கைது செய்யப்பட்டு, பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு மூளைப் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டாள். *நிதானமான ஒரு புத்தகத்தில் உள்ள அச்சு எழுத்துக்களை எல்லாம் வரிசையாக வைத்தால் ஒரு மைல் நீளம் இருக்கும். *தினமும் நமது உடலின் நரம்புச் சக்தியில் கால் பாகம் நமது கண்களால் செலவழிக்கப்படுகிறது. *இந்தியாவில் உள்ள ஜனங்களில் நூற்றிலே ஒரு பங்கு பம்பாய், கல்கத்தா ஆகிய இரு பட்டணங்களில் வசிக்கிறார்கள். இந்தியா முழுவதும் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தில் சரிபாதி அந்தப் பட்டணங்களில் உபயோகம் ஆகிறது. *முதல் மகா யுத்தத்துக்கு முன் இங்கிலாந்தின் ராஜ குடும்பத்தினர் பகிரங்கமான இடங்களில் சிகரெட் பிடித்தது கிடையாது. *இங்கிலாந்தை ஆண்ட எலிசபெத் மகாராணி தேவையிருந்தாலும் இல்லாவிட்டாலும் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கட்டாயம் குளிப்பது உண்டாம். இதை அவளே ஒரு முறை சொன்னாளாம்.

சரித்திர காலத்துக்கு முற்பட்ட ஜீவராசிகளின் இயற்கை அமைப்பைப் பற்றிப் படித்தவர்கள் கூட, தம் தலையில் முளைத்துள்ள கூந்தலைப் பற்றி அறியாமல் இருக்கக் கூடும். தலை மயிரின் வாழ்க்கை ஒரு அற்புதமாகவே இருக்கிறது. படியுங்கள்.

உங்கள் கூந்தல்

ஜே. ஈ. கிப்ஸன்

நீங்கள் பிறப்பதற்கு ஆறு மாதங்களுக்கு முன் உங்கள் தலைமயிர் முளைக்க ஆரம்பிக்கிறது. உங்களுடைய கடைசி நாடித் துடிப்புடன்; தலைமயிரின் வளர்ச்சி நின்று விடுகிறது. மரணத்தினால் தசை நார்கள் சுருக்கம் அடைவதால், தலைமயிர் வெளியேநீட்டிக்கொண்டிருக்கும். இதைக்கண்டு சிலர், மனிதன் செத்த பிறகும் மயிர் வளர்ந்து கொண்டிருக்கும் என்று நம்புகிறார்கள். அது தப்பு. இது போல, சூரிய வெளிச்சத்தால் தலை மயிர் வளரும் என்று நம்புவதும், க்ஷவரம் செய்து கொள்ளுவதால் மயிர் வேகமாகவும், முரட்டு மயிராகவும் வளரும் என்று நம்புவதும் தப்பான நம்பிக்கைகளே. இவை விஞ்ஞான ரீதியாகப் பரிசோதனை செய்து முடிவு கட்டிய விஷயங்களாகும்.

உங்கள் தலைமயிர் கறுப்பாக இருப்பதன் காரணம் என்ன? தலை மயிருக்குக் கறுப்பு நிறத்தைக் கொடுப்பது 'மெலானின்' என்னும் வஸ்துதான். இந்த வஸ்துவை உங்கள் உடம்பு உற்பத்தி செய்து தலை மயிருக்கு அளிக்கிறது. கிழட்டு வயதில் தலை நரைப்பதற்குக் காரணம், இந்த மெலானின் உற்பத்தி போதுமான அளவில் நடைபெறாததுதான். கறுப்பாக இருந்த மயிர் நரைப்பது கிடையாது. அது உதிர்ந்த பிறகு அந்த இடத்தில் நரைமயிர் முளைக்கக் கூடும். அவ்வளவுதான்.

பிஞ்சில் பழுப்பதுபோல, சிலருக்கு அதி சீக்கிரத்தில் நரைத்து விடுகின்றன. அதற்குக் கீழ்க்கண்ட மூன்று விஷயங்களில் ஏதாவது ஒன்று காரணமாகலாம் :

(1) மெலானின் உற்பத்திக் குறைவு; இந்தக் குறைபாட்டை பெற்றோர்களிடமிருந்து பாரம்பரியமாகப் பெற்றிருப்பது.

(2) அதிகக் கவலை, அதிகத் தொல்லைகள் முதலியவற்றால் நரம்புக் கோளாறு மட்டுக்கு மீறி ஏற்பட்டிருப்பது.

(3) டைபாயிட், மலேரியா போன்ற நோய்கள் பீடிப்பது.

துரதிர்ஷ்ட வசமாக நரை மயிர் கருப்பதற்கு ஒரு வழியும் கண்டு பிடிக்கப்படவில்லை; அதாவது மெலானின் உற்பத்தியை அதிகப்படுத்தும் வழி தெரியவில்லை.

வலிப்பு போன்ற உணர்ச்சி விகாரங்களால் தலை மயிரின் நிறம் மாறி, பிறகு சுபாவ நிலையை அடைந்ததும் பழைய நிறத்தைப் பெறுவது உண்டு. இந்த மாறுதலைச் செய்வது தலை மயிருக்குள்ளே இருக்கும் காற்றுக் குமிழிகள் தான் என்று கருதுகிறார் டாக்டர் மக்கார்த்தி.

அதிர்ச்சியால் தலை மயிர் வெளுத்ததாகக் கதைகளில் படித்திருப்பீர்கள். தலை மயிரில் அதிவேகமாக சின்னஞ் சிறு காற்றுக் குமிழிகள் உற்பத்தி யாவதே இதற்குக் காரணம் எனக்

கூறப்படுகிறது. ஆனல் இதுபற்றிய பரிபூரணமான விபரம் இனிமேல்தான் வெளி வரவேண்டும்.

திடீரென்று பய பீதிக்கு ஆளானுலும், அதிகக் குளிரில் அகப்பட்டுக் கொண்டாலும் தலைமயிர் செங்குத்தாக சிலிர்த்துவிடும். தலைமயிரில் சின்னஞ் சிறு தசைப்பாகம் ரேகை போல அமைந்துள்ளது. பயத்தினுலோ, குளிரினுலோ இந்தத் தசை சுருங்குவதால், தலை மயிர் கிமிர்ந்துவிடுகிறது.

தலை மயிர் ஒன்றுக்கு கால் பவுண்டு எடையைத் தாங்கும் பலம் உண்டு. மேலும் தலை மயிருக்கு ரப்பரின் குணமும் உண்டு. அதன் நீளத்தில் ஐந்தில் ஒரு பங்கு நீளம் அதிகமாகும் படி செய்ய முடியும். மயிர் ஈரமாக இருந்தால் அதன் நீளத்தை மேலும் சுமார் முக்கால் பங்கு (70%) அதிகப் படுத்த முடியும் எனக் கண்டிருக்கிறுர் கள். நீராவியிலோ, கொதி நீரிலோ போட்ட தலை மயிரை இரண்டு பங்கு நீட்ட முடியும்.

மண்டை ஓட்டில் அரை அங்குல நீளத்தில் உள்ள மயிர்க் கால்களில் தலை மயிர் வளருகிறது. மயிர்க் காலின் அடிப் பாகத்தில் ஊசியான தசைக் குழாய் ஒன்று உண்டு. அந்தக் குழாயில் ரத்தக் குழாய்கள் ஓடுகின்றன. தலை மயிர் தன் வளர்ச் சிக்கு வேண்டிய ரத்தத்தை அங்கிருந்து தான் பெறுகிறது. மயிர்க் கால்களின் பகுதியில் ஆபத்து, அழிவு ஏற்படாம லும், தசைக் குழியின் ரதத ஓட்டத் திற்கு இடைஞ்சல் ஏற்படாமலும், இருந்தால், தலைமயிர் வளருவதற்கு தடை எதுவும் இல்லை.

மண்டை ஓட்டை விட்டு வெளியே தலை நீட்டி விட்டால் மயிர் மிகவும் வேகமாக வளரத் தொடங்கி வருகிறது. முதலில் மாதத்துக்கு முக்கால் அங்குலம் வீதம் வளரும். கொஞ்ச காலத்தில் வளர்ச்சியின் வேகம் குறையும். மயிரின் ஆயுளை ஆறு மாதத்திலிருந்து நான்கு வருஷம் வரையிலும் சொல்லலாம். ஆயுள் முடிந்ததும் மயிர் செத்து உதிர்ந்து விடுகிறது. தலை மயிரை வேரோடு பிடுங்கி விட்டால் அந்த இடத்தில் புதிய மயிர்க் கால் உற்பத்தி யாகி விடும். ஆனல், அந்த மயிர்க் கால் மண்டை யோட்டின் மேல் பரப்பு வரை வளருவதற்கு ஆறிலிருந்து பன்னிரண்டு வாரங்கள் வரை ஆகும்.

குளிர் காலத்தில் தலை மயிர் நீளமாகும்; கோடையில் குட்டையாகும்.

தலை மயிர்—சாஸ்திரத்திலே தலைசிறந்த சாதனை என்னவென்ருல், வழுக்கை விழுவதன் காரணத்தைக் கண்டு பிடித்ததுதான். தலையில் சுண்ணும்புச் சத்தாகிய கால்ஷியம் அதிகப்பட்டு, (எலும்பு ஒடு வளர்ச்சி பெற்று) தலையின் தோலுக்கு ரத்தம் போவதைத் தடுத்து விடுவதால் தலையில் வழுக்கை விழுந்து விடுகிறது. அப்போது மண்டை ஓட்டில் ரத்தக் குழாய்கள் எந்தத் துவாரங்களின் வழியாகச் செல்லுகின்றனவோ, அந்தத் துவாரங்கள் கொஞ்சமாகவோ, பரிபூரணமாகவோ மூடப்பட்டு விடுகின்றன. இம் மாதிரி மாறுதல் பெண்களைவிட ஆண்களிடமே அதிகம் நடைபெறுவதால், ஆண்களில் வழுக்கைத் தலைப் பேர்வழிகள் அதிகமாக இருக்கிருர்கள்.

தலையின் மேல் தோலில் நோய் உண்டானுலும், மலேரியா, டைபாயிட் போன்ற நோய்களாலும், தலையில் வாங்கிய பலத்த அடிகளாலும், தாங்க முடியாத அதிர்ச்சியாலும், நெடுநாளைய மனக் கவலையாலும் தலையில் வழுக்கை ஏற்படுவது உண்டு. தலைமயிர் காய்ந்து போய் வறண்டு வைக்கோலாகக் கிடந்தால், தலைமயிர் ஒடிந்து உதிர்ந்து விடும்.

வழுக்கையின் காரணம் தெரிந்து விட்டது. ஆனல் வழுக்கையைப் போக்கும் காரணம் தெரியவில்லை. உடம்பில் மயிர் வளர்ச்சிக்குரிய இயற்கையான சாதனங்கள் மறைந்து விட்டால், பிறகு என்ன செய்தும் தலை மயிரை முளைக்க வைக்க முடியாது.


எப்பொழுதும்
யாருக்காகவாவது
அல்லது எதற்காகவாவது சேமித்து
வைக்கத்தான் வேண்டும்.
நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்களில்
முதலிடுங்கள்
இவை தபாலாபிஸ்களிலும், அதிகாரம் பெற்ற ஏஜெண்டுகளிடமும் (நியமிக்கப்பட்டிருக்கும் இடங்களில்), ஸேவிங்ஸ் பீரோக்களிலும் கிடைக்கும்
புது டில்லி இந்திய ஸர்க்கார் நிதி மந்திரி இலாகாவால் வெளியிடப்பட்டது.
AC 74TM

லோத்ரா
Lodhra
UTERINE TONIC
கர்ப்பாசய ரோகங்
களை நிவர்த்திக்க வல்ல
சிறந்த ஔஷதம்.
ஸ்திரீகளுக்கு ஆரோக்
கியமும், சந்தோஷமும்
அளிப்பது.
-கேஸரி குடீரம் லிமிடெட், மதராஸ் 14.

MARGO SOAP
for
Healthy Skin
மார்கோ சோப்
அதி சிலாக்கியமான
வேப்பின் சத்தில் தயா
ரிக்கப்பட்டது. தோல்
சம்பந்தமான வியாத்
களைப் போக்கி ஆரோக்
கியத்தையும் அழகையும்
கொடுக்கிறது.
It has the properties of NEEM in it
MARGO SOAP
CONTAINS ACTIVE
TOILET & MEDICINAL
A
CALCUTTA CHEMICAL
Product

சாக்ரட்டீஸ் கி. மு. 5-ம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரிய ஞானி. அவருக்கு கிரேக்க அரசாங்கம் விஷம் கொடுத்துக் கொன்றது. 'கடவுளர்களை மறுத்தார்' என்பதும், 'இளைஞர்களைக் கெடுத்தார்' என்பதும்தான் குற்றச்சாட்டு. ஆனால் சாக்ரட்டீசை, பிளேட்டோ 'மனிதர்களுக்குள்ளேயே நீதியும் ஞானமும் படைத்த சிறந்த பிறவி.' என்று வர்ணிக்கிறார். இங்கு சாக்ரட்டீசின் கூடவே இருந்து சீடனாக வாழ்ந்த ஸெனபன்னின் குறிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

சாக்ரட்டீசின் அந்திமகாலம்

ஸெனபன்

சாக்ரட்டீசுக்கு மரண தண்டனை விதிக்கப் பட்டதைக் கண்டு, யாரேனும் அவர் ஒரு பொய்யர்தானென்றும், தமது கருமங்களில் நன்மை தீமையைச் சுட்டிக்காட்டி, தம்மை வழி நடத்திச்செல்ல ஒரு தெய்வ சக்தி இருப்பதாக அவர் சொல்வது பொய்தானென்றும் நம்பலாம். அப்படி நம்புபவர்கள் முதன் முதலாக ஒரு விஷயத்தைச் சிந்தித்துப்பார்க்கட்டும் அவர் இறந்த அந்த வயதில் அவர் இறக்காமலிருந்திருந்தால்,

சாக்ரட்டீஸ் விஷபானத்தை அருந்தும் சமயம் :
ஒரு இத்தாலிய ஓவியம்.

அந்த வயதுக்குப் பின்னரும் அவர் அதிக காலம் உயிர் வாழ்ந்திருக்க முடியாது. அவர் இறந்ததன் மூலம், வாழ்க்கையின் மிகவும் கஷ்டமான எதிர் காலத்திலிருந்து தப்பித்துக் கொண்டார் என்றே சொல்ல வேண்டும். அத்துடன் அந்தக் காரியத்தால், அவர் உலகுக்கு தமது ஆன்ம விகாசத்தின் மகத்துவத்தை வெளிப்படுத்தினர்; தமக்கும் சாகாத சிரஞ்சீவித்துவத்தை சம்பாதித்தார்; நீதிபதிகளின் முன் அவர் சொன்ன வாக்கு மூலத்தால், நேர்மையோடும், தைரியத்தோடும், ஆதாரத்தோடும் அதிசயப்படத்தக்கவாறு நடந்து கொண்ட தீரத்தால், தமக் களிக்கப்பட்ட தீர்ப்பை அமைதியோடு ஏற்று, தமது நிகரற்ற ஆத்மத்தீர்ப்பை உறுதியாக்கிய வெற்றியால், அவர் அழியாத பெரும் புகழைச் சம்பாதித்துக் கொண்டார்; ஆம், உலகில் எந்த மனிதனும் மரணவேதனையை சாக்ரட்டீசின் தீர்மானத்தோடு, தீர்க்கத்தோடு ஏற்க வில்லை என்று எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள்.

அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்ட பின் முப்பது நாள் காலம் வரை அவர் உயிருடனிருந்தார். ஏனெனில், அந்த மாசத்தில் டீலியன் விருந்துகள் நடக்கும். டீலாஸ் தீவுக்குச் செல்லும் புனிதக் கப்பல் ஏதென்ஸ் நகரத்துக்குத் திரும்பி வரும் வரையில் எந்த மனிதனையும் கொல்லக் கூடாது என்பது நாட்டின் சட்டம். இந்த இடைக்காலத்தில், அவரை அடிக்கடி சந்தித்து வந்த நண்பர்கள் அவரிடம் எந்த மாறுதலையும் காணவில்லை; அவர் தமது தெளிவான புத்தியையும், உணர்ச்சியின் சாந்தத்தையும் இழக்க வில்லை; அதைக் கண்டு உலகமே பிரமித்தது. எந்த மனிதனும் இத்தனை தீர்மானத்துடன் சாக முடியாது. இதை விட மகத்தானதொரு மரணத்தைக் கற்பனை பண்ணிப் பார்ப்பதுகூடச் சந்தேகம் தான். இந்த மரணம்தான் மகத்தானது என்ருல், இதுவே ஆனந்த மயமும் ஆனது என்று சொல்ல வேண்டும்; இதுவே ஆனந்தமயமானதென்ருல், இதுவே தேவப்பிரீதியான மரணம் என்றும் சொல்ல வேண்டும்.

சாக்ரட்டீஸை மெலிடஸ் தண்டித்த சமயம், ஹெர்மோஜெனிஸ் சாக்ரட்டீசுடன் இருந்ததாக என்னிடம் சொன்னர். அப்போது, சாக்ரட்டீஸ் அந்தத் தண்டனை விஷயத்தைப் பற்றி எதுவும் பேசவே விரும்ப வில்லையாம். சுய நியாயத்துக்காக வேனும் அவர் என்ன பதில் கூற வேண்டும் என்பதை யோசித்துப் பார்த்தாரா என்று ஹெர்மோஜெனிஸ் கேட்டிருக்கிருர். அதற்கு சாக்ரட்டீஸ் அளித்த பதில் இதுதான். "என் வாழ்நாள் முழுதும் நான் அதைத்தவிர வேறெதுவும் செய்தேன் என்று நீ நம்புகிருயா?" என்ருராம். அப்படி சொல்வதற்கு என்ன அர்த்தமென்று ஹெர்மோஜெனிஸ் கேட்டிருக்கிருர். அதற்கு சாக்ரட்டீஸ் எது நன்மை, எது தீமை என்பதை அலசி ஆராய்வதே தம் வாழ்க்கை லட்சியமாக விட்டது என்றும், நியாய வழியில் நின்று அநியாய வழியைப் புறக்கணிப்பதில் அவர் நிலை பெற்று நிற்பதாகவும், எனவே தமக்குத்தாமே நியாயம் வழங்

குவதில் அதைவிடச் சிறந்தவழி வேறு எதுவும் இல்லை என்றும் கூறினாராம்.

ஹெர்மோஜெனிஸ் அவரிடம், "குற்றமற்றவர்களின் வாக்கு மூலம், தம்மைப் பாதிப்பதைக் கண்டு, நீதிபதிகள் அவர்களை மரண தண்டனைக் காளாக்கு வதையும், அதற்கு மாருக குற்ற வாளிகளை விடுவிப்பதையும் தாங்கள் அறியமாட்டீர்களா?" என்று மேலும் கேட்டார்.

"எனக்கு நன்ருய்த்தெரியும். ஆனல், உனக்கு நான் தீர்மான மாகச் சொல்கிறேன். நான் நீதிபதிகளிடம் என்ன சொல்ல வேண்டுமென்பதை எண்ணிப் பார்த்தபோது, அந்தத் தெய்வ சக்திதான் என்னை நல்வழிப் படுத்தியது" என்ருர். இதைக் கேட்டதும் ஹெர்மோ ஜெனிஸ் சிறிது ஆச்சரியமடைந்தார். அதைக்கண்ட சாக்ரட்டீஸ், "நான் இந்த உலகில் இன்னும் வாழாமல், இதை விட்டு விலகு வதேமேல் என்று கடவுள் விரும்பியதைக்கண்டு, நீ ஏன் ஆச்சரியப்படவேண்டும்? ஒரு மனிதன் எப்படி வாழ வேண்டு மோ அப்படியே நான் வாழ்ந் தேன், நன்ருக வாழ்வதற்கு நல் வழியே சிறந்தது என்பதை உணர்ந்து, ஆனந்தமாக வாழ் வது என்பதுநாம் அந்த நல்வழி யில் காணும்முன்னேற்றம்தான் என்பதைத்தெரிந்து நான்வாழ்ந் தேன். இதையெல்லாம் நீ அறி யாதவனு? இப்போது நடந்த விசாரணை இருக்கிறதே, இதுவே ஆனந்தமயமான சம்பவம். ஏனென்ருல் நான் எனது லட்சிய வாழ்வில், எனது நல் வழிப்பாதையில் நிதானமாக முன்னேறியிருக்கிறேன் என் பதையும், இந்தச் சோதனைக் காலத்தில் என் மனம் தடுமாற வில்லை என்பதையும் உணரும் போது ஆனந்த மில்லாமல் இருக்குமா? இல்லை! என்மனச் சாட்சிக்கு நானே நற்சாட்சி கொடுத்து விட்டேன்; நான் என் கடமையைச் சரிவர நிறை வேற்றி விட்டேன். இந்த நம் பிக்கையைத்தான் நான் பிற ரோடு பேசும் போதும், அவர்க ளோடு நான் என்னை ஒப் பிட்டுப்பார்க்கும் போதும் வளர்த்து வந்திருக்கிறேன். எனது நண்பர்களும் என்னைப் பற்றி அப்படித்தான் நம்பினர் கள். நான் நன்ருயிருக்க வேண் டும் என்ற காரணத்தாலல்ல. அந்த முறையில் பார்த்தால், ஒவ்வொரு நண்பனும் தன் நண் பனைப்போலவே நினைத்துப் பார்க்கவேண்டும். ஆனல் அவர் கள் என்னுடன் சம்பாஷித்த தின் மூலம் நல்வழியில் முன் னேறினர்கள் என்ற காரணத் தால்தான்.

"நான் இன்னும் அதிக காலம் வாழ்ந்தால், வயோதிகத் தின் சங்கடத்துக் குத்தான் ஆளாவேன். என் கண் பார்வை மங்கலாம்; காது மந்தமாகலாம்; எனது தீர்மானங்கள் பலவீன மடையலாம். நான் படிப்பதற் குத் தொல்லைகள் ஏற்படலாம்; அது போலவே கற்றவற்றை மனசில் நிறுத்தவும் சங்கடப் படலாம். இது வரை நான் செய்து வந்த நன்மையை இனி மேலும் செய்வதற்கு நான் சக்தியற்றுப் போகலாம். இந்தச் சங்கடங்களையெல்லாம் நிவர்த் திக்க முடியா விட்டால், என் வாழ்க்கை எனக்கு ஒரு சுமை யாகப் போய்விடாதா? அல்லது இதைப் பற்றி நான் மிகவும் உணரத் தலைப்பட்டால், வாழ்க்

கை எனக்குப் பெருந்துன்பமா காதா? இப்போதுள்ள, நிலையில் நான் குற்றமற்றவனாக இறந்தால், இதனால் ஏற்படும் வெட்கமெல்லாம் என்னைக் கொன்றவர்களைச்சாரும். ஏனெனில் சகல விதமான அநீதிகளும் வெட்க காமானவைதான். ஆனால் பிறர் என் குற்றமற்ற தன்மையை ஒப்புக்கொள்ளாததால், எனக்கு நியாயம் வழங்காததால், என்னை யாரும் குறை சொல்லமுடியாதல்லவா? கடந்த கால அனுபவம் நமக்குக் காண்பிப்பதென்ன? அநீதிக்கு ஆளானவர்களும் அநீதி இழைத்தவர்களும் தங்கள் சாவுக்குப் பின்னால் ஒரே மாதிரியான பெயரை அடையவில்லை என்பது தானே! எனவே இந்தச் சந்தர்ப்பத்தில் நான் இறந்து போனால், இன்று என்னைக் குற்றம் சாட்டுபவர்களைவிட, என் நினைவைத்தான் மிகவும் மதிப்பார்கள் என்று நிச்சயமாய் நம்புகிறேன். ஏனென்றால், நான் ஒரு தவறும் செய்யவில்லை யென்றும், எந்த மனிதனுக்கும் எந்தத் துர்ப்போதனைகளையும் செய்யவில்லை யென்றும் பிற்கால சந்ததியார் பேசிக்கொள்ளுவார்கள். அது மட்டுமல்லாமல், என்னை அண்டி வந்தவர்களையும் நல்வழிப் படுத்தவே, நான் வாழ்நாள் முழுதும் பாடுபட்டேன் என்றும் பேசுவார்கள்."

இது தான் சாக்ரட்டீஸ், ஹெர்மோஜெனிசுக்கும் பிறருக்கும் விடுத்த பதிலாகும். ஒரே வார்த்தையில் சொன்னால், சாக்ரட்டீசை அறிந்த நல்லோர்கள் எல்லோரும் அவரது பிரிவுக்காக இந்த நிமிஷம் வரை தினந் தினம் வருந்துகிறார்கள்; ஏனென்றால், அவர் து கூட்டுறவில் தாம் அடைந்த முன்னேற்றத்தையும் நன்மையையும் அவர்கள் உணர்கிறார்கள்.

என்னைப் பொறுத்த வரையில் அவர் ஆண்டவன் திருவுளத்துக்கு கெதிராக எதையும் செய்யாத பக்திமான் என்றே சொல்ல வேண்டும். அவர் எப்படி எந்த மனிதனுக்கும் தீங்கிழைக்கவில்லையோ, அது போலவே பலருக்கும் அவ்வப்போது சேவையும் செய்திருக்கிறார். அடக்கம், பெருந்தன்மை முதலிய குணங்களை பக்தி சிரத்தையோடும் புனிதத்தோடும் கைக்கொண்டு அதில் ஆனந்தமும், எக்களிப்பும் கொண்டவர் அவர்; நன்மை தீமைகளை பகுத்துணர்வதில் என்றும் தவறாத நேர்மை, சரியான முடிவு ஒன்றைப் பண்ண பிறரிடமிருந்து என்றும் உதவி நாடாத தீர்க்க புத்தி, மேலும், சகலவித காரியங்களிலும் தெளிவோடும் தீர்மானத்தோடும் முடிவு காணும் நிச்சய மனப்பான்மை, மனிதர்களை சரிவர ஆராய்ந்து, அவர்களது தீமைகளைக் கண்டிக்கவும், நன்மை புரியத்தூண்டவும் செய்யும் குணம் — சாக்ரட்டீசிடம் இத்தனை குணங்களின் பரிபூரணத்துவத்தையும் நான் காண முடிந்தது; அதனால்தான், அவரை நான் மனிதர்களுக்குள் மிகவும் நல்ல குணமுள்ள, ஆனந்த சொரூபமானவராக மதித்தேன். யாரேனும் என் அபிப்பிராயத்துக்கு மாறுபட்டால், அவர்கள் தயை செய்து அவரை, பிற மனிதர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கட்டும். பிறகு முடிவு கட்டட்டும்.

❀

பெண்ணும் பருவ காலமும்

'மட நோக்கம் தான் வளர்த்த மானுக்கு விட்டு விடநோக்க வேலிரண்டு கொண்டாள்' என்று பெண்ணின் பருவமாற்றத்தைச் சுட்டிக்காட்டிக் கவிஞர்கள் பாடுவார்கள். பருவ மாற்றத்தின்போது பெண்ணிடம் ஏற்படும் மாறுதல்கள் பலப்பல. அவற்றை எல்லாம் கவிஞனல் கூறமுடியுமா? அதற்கு உடலியலில் வல்ல மனோதத்துவ வாதி வரவேண்டும். இங்கே காணும் கட்டுரை நியூ ஹெல்த் என்ற சஞ்சிகையிலிருந்து.

ஒரு உடலியல் நிபுணர்

நாலைந்து வயதாயிருக்கும் போது சிறுமியர் வேண்டாதனவற்றுக்கெல்லாம் முரண்டுத்தனம் பண்ணக்கூடும்; இந்தத் தன்மை பிறகு மறைந்து விடும். இதே மாதிரியான ஒரு எதிர்ப்புணர்ச்சி, சிறுமியருக்கு பத்துப் பன்னிரண்டு வயதிலும் ஏற்படக்கூடும்; அதுவும், அவள் ருது சோபனமான பின்னர் மறைந்துவிட ஆரம்பிக்கும். சிறுமியரின் வாழ்க்கையில் நிகழும் இந்த இரண்டாவது மன உணர்ச்சிக் காலத்தையே நாம் பெண் பருவமெய்தும் காலமெனச் சொல்லலாம். 'இத்தனை நாள் நல்ல பிள்ளையாயிருந்தாயே, இப்போது ஏனிந்த முரண்டுக்குணம்?' என்று அவளைத் தட்டிப் பேசிவிட்டால் அவளால் அதை உணர்ந்து கொள்ள முடியாது. இயற்கையின் வளர்ச்சிக்கு, பாவம், அவள் என்ன செய்வாள்?

ஆனல், பத்துப் பன்னிரண்டு வயதுச் சிறுமி அப்படி ஏன் நடந்துகொள்ள வேண்டும்? அதற்கும் காரணங்கள் உண்டு. அவளுடைய உடலில் சில வளர்ச்சி மாறுதல்கள் நிகழ்கின்றன; அதைக் கண்டு அவள் பிரமிப்பு அடையலாம்; அல்லது பீதியும் அடையலாம். தன் அங்க அமைப்பின் மென்மையை, வளர்ச்சியைக் கண்டு தன்னைப்போல் பிறருக்கும் அம்மாதிரியாக இருக்கிறதா என்று தெரிந்துகொள்ள முனைகிறுள். தன்னை யறியாமல் தன் வம்பும் வாயளப்பும் குறைந்து மௌனம் குடி புகுவதையும், வெட்க உணர்ச்சி தலை தூக்குவதையும் அவள் உணர்கிறுள். அதன் காரணமாக, குளிக்கச் சென்றால், தன் வாழ்விலேயே முதல் முறையாகக் கதவைத் தாளிட்டுக் கொள்கிறுள்.

இந்தப் பருவ காலத்தின் முக்கிய நிகழ்ச்சி அவள் ருது சோபனமாவதுதான். அந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் அவள் ஒரு சிறுமியல்ல; பெண்;

பெண்மைக்குத் தயாராகி வரும் யுவதி. இந்த நிகழ்ச்சியைச் சமாளிக்க பெண்களின் மனநிலை வெகுவாகப் பக்குவப் படவேண்டும். தன்னுடம்பில் நேரும் மாறுதலைப் பற்றிய சந்தேகங்களைத் தாயிடம் கேட்டால், அதைத் தெளிவுபடுத்திவிடுவதே நல்லது; இல்லையெனில் அவளுக்கு தீரா மனச்சங்கடங்கள் ஏற்படலாம். உண்மையை அவள் தெரிந்துகொள்ளும் போது, "பெண் குலத்தின் பலவீனத்தை" உணர்ந்துகொள்கிறாள்.

தன்னுள்ளே தானாக வளர்ந்து வந்த இந்த நிகழ்ச்சி முடிந்தவுடன், இருளும், புரியாத் தன்மையும் நிறைந்த அந்த இடைவெளிக் காலம் கழிந்தவுடன், பருவமடைந்த பெண்ணின் வாழ்க்கையில் அடுத்த மாறுதல் நிகழ ஆரம்பிக்கும். இனிமேல், தன்னைத் திருப்திப்படுத்திக்கொள்ள, அவள் வெளியுலகத்தை எதிர்பார்க்கிறாள். அதிசயமானதும், மகோந்நதமுமான ஆனந்தத்தை எதிர்பார்க்கிறாள். எனவேதான் அந்த யுவதிப் பருவத்தில், அவளுக்குத் தன் ஆசிரியை மீதோ, பாட்டு வாத்தியார் மீதோ, பழைய நண்பன் மீதோ, சினிமா நடிகரின் மீதோ ஆர்வமும் பாச உணர்ச்சியும் உண்டாகின்றன.

இந்த உணர்ச்சியை எள்ளி நகையாடுவதோ, தடுக்க முனைவதோ, குறுக்கிடுவதோ தவறு. பிடிதாரமில்லாமல் கற்பனைக் கனவுகளில் மிதந்து செல்லும் அந்தக் குமரி, என்றுவது வயதுக்கு மூத்தவரின் தயவை நாடக்கூடும்; அந்தச் சமயம், அவளை அன்போடும் ஆதரவோடும் நடத்தி, அவளது மாயை மயக்கத்தைத் தெளிவுபடுத்த வேண்டுவது பெரியோர் கடமை. குமரிப் பருவத்தில் ஏற்படும் இந்த 'முதல் காதல்' உணர்ச்சியைச் சரியான பாதையில் திருப்புவது மிகவும் சிரமமானது. எனவே அவளுக்கு ஆசிரியராயுள்ளவர்கள் அந்த உணர்ச்சியை ஒரு மகோந்நதமான, மதிப்புள்ள காரியத்தின் மீது நாசூக்காகத் திருப்பிவிட முயலவேண்டும்; அவள் உணர்ச்சியை கலை, சங்கீதம், இலக்கியம் சம்பந்தமானவற்றில் திருப்பிவிட்டால், அது நன்றாக வேரூன்றிவிடக் கூடும்; மேலும், அவளுக்கு ஒரு சுதந்திர உணர்ச்சியும், தன் காதலுணர்ச்சிக்கு சரியான புகலிடமும் பெற்ற சந்தோஷம் கிட்டும்.

அந்த வயதில் அவள் பள்ளிக்கூடம் விட்டு வீட்டுக்குத் திரும்பியதும், தாய் அவளைத் தன் வீட்டு வேலைகளுக்குத் துணையாக அழைக்கிறாள். ஆனால், அதே சமயம் தனது அண்ணன், தம்பி, தங்கையர்கள் வெளியிலே விளையாடச் செல்வதும், வீட்டு வேலையைப் பொருட்படுத்தாதிருப்பதும், குமரியின் மனத்தில் ஒரு சிறுமை உணர்ச்சியை ஏற்படுத்தக்கூடும். 'நான் மட்டும் வேலைக்காரிமாதிரி, பண்ட பாத்திரங்களைக் கழுவி, மசாலா அரைத்துக்கொடுக்கும் போது, அவர்கள் மட்டும் ஏன் குஷாலாய்த் திரியவேண்டும்?' என்ற உணர்ச்சி அவளுக்கு ஏற்படலாம். இந்த உணர்ச்சியின் காரணமாக, அவளது நோக்கம் ஆணுலகத்தோடு தானும் ஒன்றிவிடுவதற்காக, புத்திசாதுர்யமான அறிவுத் துறையிலும் திரும்பலாம்; அல்லது ஆணு

லகத்தை தன்னுடைய மோஹ னமயக்கத்தாலும் கண்ணசைப் பினலும் வசப்படுத்தும் துறை யிலும் திரும்பிவிடலாம். எனவே அவள் தவருன பாதை யில் சென்றுவிடாதபடி பார்த் துக்கொள்ள, அவள் தன்னே டொத்த ஆண்களோடு பேசிப் பழகவும், அவர்களும் தானும் சமம் என்ற உணர்ச்சி பெறவும் சந்தர்ப்பங்கள் அளிக்கப் பெறல் வேண்டும்.

பருவமடைந்த குமரிக்கு நாம் செய்யவேண்டிய உதவி என்ன வென்ருல், எந்தக் காரியமான லும், அதில் அவளுக்கு ஒரு நல்ல ஈடுபாடும், தொடர்பும் கொள்ளச் செய்வதுதான். எவ் வளவோ காலமாக, நாம் மானி டக் கருமங்களைப் பற்றி அவர் களுக்குத் தவருன கருத்தைத் தான் ஊட்டி வந்திருக்கிரேம். கல்யாணமாகப் போகும் நமது சகோதரி, புத்திரி, பௌத்திரி களுக்கு நாம் கொடுக்கக்கூடிய சிறந்த சீதனம், பிரத்தியக்ஷ வாழ்க்கைக்கு உதவும் ஒரு ஈடு பாட்டுணர்ச்சிதான். இந்த வாழ்க்கை ஈடுபாட்டை அவ ளுக்குக் கற்றுத்தர, நாம் அவள் மனசில் சிறுமை உணர்ச்சி ஏற் படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்; இந்த சேவையை நாம் செய்துவிட்டால், அவள் பிரதியாக நமக்குத் தரும் கைம் மாறு "நம்பிக்கை" என்ற சிறந்த தன்மைதான்.

அதுபோலவே, தன் உடலின் மீது தனக்கு ஆதிக்கம் இல்லை என்று அவள் கருதுங்கால், அவள் தன் மனசில், இல்லாத பொல்லாத கற்பனையெல்லாம் பண்ணி, மனசைக் குழைத்துக் கொள்வாள். பல இளங் கும களின் டயரிக் குறிப்புக்களின் மூலம் நாம் அவர்கள் "தன்னை யறிந்துகொள்ளும்" தன்மை யைத் தெரிந்துகொள்ள முடி யும்; "என் பெயரைச் சொல்லி யாரோ கூப்பிட்டார்கள். உடனே எனக்கு வாழ்க்கை ஒரே மர்ம மயமானதாகப்பட் டது; என்னுடன் படிக்கும் தோழியரில் எவரும் இதை உணரவில்லையே என்று நினைத் தேன். அவர்களிலிருந்து நான் வேறுபட்டவளா?...வாழ்க்கை என் என்னை இத்தனை ஆர்வத் தோடு அலைக் கழிக்கிறது? என் எல்லோரும் பராமுகமாயிருக் கிருர்கள்? நான் வேற்ருள் என்று நானே உணர்கிறேன். அந்த உணர்ச்சியே என்னைத் தனிமையாக்குகிறது? நான் என்னுடைய பெற்ருேருக்கு எதற்காக நன்றியுடையவளாயி ருக்கவேண்டும்? இந்தத் துன்ப மயமான உலகில் நான் ஏன் பிறந்தேன்?" இது ஒரு இளம் பெண்ணின் டைரிக் குறிப்பு.

இந்தமாதிரியான எண்ணங் களால் அவளுக்கு சுற்றுச் சூழ் நிலையில் ஒரு வெறுப்பு ஏற்பட்டு, அது பயங்கரமான ஆபத்துக் களுக்கும் வழிகோலக்கூடும். இளங் குமரியுள்ளத்தில் பெரும் போராட்டம் நிகழும் உண் மையை நாம் உணர்ந்துகொண் டால், நாம் அவளிடம் பச்சாத் தாபப்பட முடியும். அந்தப் பச்சாத்தாப உணர்ச்சியே அந் தப் பருவத்தில் நாம் அவளுக்கு அளிக்கும் பேருதவியாகும். வெட்கம் அல்லது கோபம், ஆனந்தம் அல்லது மனப்பாரம் குழந்தைக் குணம் அல்லது கும ரிக் குணம் போன்ற இரு வேறு இயல்புகளோடு அவள் நடந்து கொள்ளக்கூடும். அது போலவே தனது உள்ளுணர்ச்சி

யால் உங்களை அவள் திகைக்க வைக்கக்கூடும்; அதே சமயம் தனது பழைய நண்பன்மீது கொண்ட ஆராக் காதலால், தன்னையே முட்டாளாக்கிக் கொள்ளவும்கூடும். இதெல்லாம் பருவ காலத்தின் அறி குறிகள்தான்.

தனது சுய உணர்ச்சிக் கோட்டைக்குள்ளாகவே அவள் சமயங்களில் உலாவ முடியாமல் போகலாம்; அதற்கு நமது அமைதி நிலையே கடினமாகலாம். அதுபோலவே நாம் அவளிடம் காட்டும் பரிவையும் பரிகாசத்தையும் கண்டு அவள் தனக்குள் தானே சிரித்துக் கொள்ளவும் கூடும். பருவ கால யுவதியை நல்வழிப்படுத்த உணர்ச்சி மயமான பரிவுணர்ச்சியும், சமயாசமய முரட்டுத்தனமும் தேவை. அவளை அவள் வழியில் விட்டுப்பிடிக்க வேண்டும்; தனது தவருன முடிவுகளைத் தானே உணரும் வரை விட்டு விடவேண்டும். நமது குழந்தைகளுக்கு நமது அனுபவங்களைக்கொண்டு உதவமுடியாது; அதை அவர்கள் ஒப்புக்கொள்ளவும் மாட்டார்கள். மறுத்துப் பேசுவதிலுள்ள ஆனந்த உணர்ச்சிக்காகவே, அவள் நாம் சொல்லும் விஷயங்களை மறுதளிக்கக்கூடும். அந்த மறுதளிப்பினல் நாம் எவ்வளவு தூரத்துக்குப் பாதிக்கப் படாமல் இருக்கிருேமோ, அவ்வளவு சீக்கிரத்தில் அவளது உணர்ச்சி நிலையும் மாறிவிடும். எனவே அவளது அபிப்ராயங்களை, கருத்துக்களை நாம் காதுகொடுத்துக் கேட்கவேண்டும்; அதே விஷயத்தை நாமும் தீவிரமாய்ப்பேச வேண்டும். அதன் மூலம் அவள் தன் அபிப்பிராயத்தையே மாற்றிக் கொள்ள நேரலாம்.

இனி அழகுணர்ச்சிமீது பருவ யுவதிக்குள்ள ஈடுபாட்டைப் பார்க்கலாம். பருவ காலத்துக்கு முன்னல் எந்தக் கலையிலும் எதைச் சொன்னலும், ஆணுக்கும் பெண்ணுக்கும் அவ்வளவாக ஈடுபாடு உண்டாவதில்லை. ஆனல் பருவ காலத்தில் தங்கள் மன உணர்ச்சிகளையே பிரதிபலிக்கும் கலா சிருஷ்டிகள் அவர்களை மிகவும் கவர்ந்துவிடும். எனவே அவர்கள் எப்படிப்பட்ட கலைகளை விரும்புவார்கள்? தங்கள் பிரதிபிம்பங்களையே, தங்கள் கருத்துக்களையே, தங்கள் அதீத மனப்பாங்குகளையே சித்தரிக்கும் கலையைத்தான் விரும்புவார்கள். சங்கீதத்தைப் பற்றி அதிகம் தெரியாமலே, சங்கீதத்தையும், பாடகர்களையும் அவர்கள் விரும்புவார்கள். இலக்கியம் பருவ கால யுவதிகளின் பாதி வாழ்க்கை யாகிவிடும். அந்தப் பருவத்தில் படித்ததைப்போல், அதன் பின்னர் எந்தப் பருவத்திலும் படிப்பதில்லை. யாரையாவது சந்திக்கவேண்டிய வேலை, வீட்டு வேலை, முதலியனவற்றையெல்லாம்கூட ஒரு ருசிகரமான புத்தகத்துக்காக ஒதுக்கிவைக்கும் பருவம் அது. தனது சுற்றுச் சூழ்நிலையில் ஆனந்தத்தைக் காண்கிருள்; தனது இதய தயத்துக்கு அதில் சாந்தி தேடுகிருள். தனது துன்பங்களை புத்தகங்களில் காணும்போது, அவள் நிவர்த்தி கண்டு ஆனந்தப்படுகிருள். காதலுணர்ச்சியில் அவளுக்குள்ள ஆர்வத்தால், அவளுக்கு காதல் கதைகளிடம் ஈடுபாடு உண்டாகிறது. அவள் தன் வீட்டுக் கட்டுப்பாட்டினல் விலங்கிட்ட உணர்ச்சி பெறும் போது, அவள் வீரப்பிரதாபக் கதைகளையும், பிரயாண நூல்

எல்லாவற்றையும்
சுத்தம் செய்வதற்கு
மிகவும் உயர்ந்தது

மைசூர் சோப்

எங்கும்
கிடைக்கும்

கவர்ன்மெண்ட் சோப் பாக்டரி
பெங்களூர்

தங்கத்தின்
மதிப்பு கூட குறையலாம்
ஆனால்
தங்க பஸ்பம்
புகையிலையின்
குணம் மாறுவதில்லை

THANGA BASPAM TOBACCO
N. ARUMUGAM PILLAI - - KARAIKUDI.

சிறந்த நூல்கள்

கடற்கரையிலே

பேராசிரியர் ரா. பி. சேதுப் பிள்ளையவர்களின் சிறந்த கட்டுரைத் தொகுதி. புது முறையில் எழுதப் பெற்றது.

விலை ரூ. 1—4—0

ஒரே உரிமை

விந்தன் எழுதிய அருமையான சிறுகதைகள்.

விலை ரூ. 2—8—0

நம் போர்ப்படைகள்

நமது இராணுவத்தைப் பற்றிய முழு விவரங்களும் அடங்கிய நூல். ஏராளமான கலர், புகைப்படங்கள் நிறைந்தது.

விலை ரூ. 3—0—0

மாக்ஸிம் கார்க்கி

ரஷ்யப் பேரறிஞன் மாக்ஸிம் கார்க்கியின் வரலாறும், அவரது இலக்கிய சேவையும் பற்றிய சிறந்த நூல்.

விலை ரூ. 2—8—0

ஸ்டார் பிரசுரம்

திருவல்லிக்கேணி சென்னை 5.

ஆஸ்த்மா அபாயத்தை

அனுபவ ஸம்மதமான மருந்தினுல்தான் தடுக்கலாம்

தாற்காலிகமான குணத்தை சீக்கிரத்தில் கொடுக்கும் மருந்துகள் கடைசியில் வியாதியை முற்றவைக்கின்றன. பலவருஷ அனுபவத்தைக் கொண்டு தயாரித்த "புரோஹித் ஸ்வாஸஹாரி" தான் சாஸ்திரீக முறையில் கைகண்ட ஔஷதமாக அனுமானிக்கப்பட்டிருக்கிறது.

புரோஹித் ஸ்வாஸஹாரி ஒன்றுதான் உட்கொண்ட ஆரம்பத்திலிருந்தே கபத்தைக் கரைத்து அஜீரணத்தை குணப்படுத்தி நுரையீரல்களை பலப்படுத்தி ஆஸ்த்மாவினின்றும் பூரண சௌக்கியத்தை நிச்சயமாக அளிக்கிறது. ரூ 3-8, ரூ 6. ரூ 10. பாக்கிங்களில் எல்லா இடங்களிலும் கிடைக்கும். அல்லது "டாக்டர் புரோஹித் பார்மஸி, கோலாப்பூர்" விலாசத்திற் கெழுதி பெற்றுக் கொள்ளலாம்.

மதருஸ் ஸ்டாகிஸ்டுகள் : (1) அப்பா & கோ. சைனு பஜார் (2) ஜெ. பலாபாய் & கோ. 260, சைனு பஜார் ரோட் (3) தாதா & கோ. நைநியப் பநாயக் கன் தெரு.

மதுரை ஸ்டாகிஸ்டு :
என். ஆர். ஸவாமி கெமிஸ்ட்.

புரோஹித ஸ்வாஸஹாரி

களையும் விரும்பிப் படிப்பாள். சோம்பேறித்தனமற்ற சுறு சுறுப்பான வாழ்க்கை நடத்த வேண்டும் என்று அவள் விரும் பினுல், சரித்திர நாவல்களை விரும்புவாள். வாழ்க்கை வர லாறுகளை அநேகமாக அவர்கள் படிப்பதில்லை. ஏனெனில், அவர் கள் இலக்கியத்தில் தமது பிரதி பிம்பத்தைத் தான் பார்க்கிறுர் களே ஒழிய, தனிப்பட்ட வேறு நபரையல்ல. எனவே ஒரு மனே தத்துவ வாதி ஒரு யுவதி விரும்பி படிக்கும் புத்தகங் களைக்கொண்டு, அவள் மன நிலையை லகுவாக உணர்ந்து கொள்ளமுடியும். இதே மாதிரி தான் சினிமா நாடகங்களில் அவர்களுக்கு ஏற்படும் ஈடு பாடும் இருக்கும்.

அந்தப் பருவத்தில் தான் விரும்பும் ஆசிரியரோடு பொருட்காட்சிசாலைக்கு அவள் என்ருவது போய்வரக்கூடும்; அந்த ஒரு நாள் நிகழ்ச்சி அவ ளுக்கு அந்தப் பொருள்களில் தன்னையறியாத ஒரு ஈடுபாட் டை ஏற்படுத்தி, அதுவே பிற் காலத்தில் அவளது தொழிலாக வும் உண்டாகிவிடக்கூடும். புத் தகங்களை விரும்பிப் படிப்பது போலவே, சிலர் சித்திரங்களை விரும்பிப் பார்க்கக்கூடும். வர் ணக்கலவையின் மயக்கத்தில் அவர்கள் சுய உணர்ச்சிக்கு சாந்தி காணக்கூடும். எனவே, இந்தப் பருவத்தில் நாம் அவர் கள் மனம் சீரிய நற்கலைகளின் பால் திரும்பிவிடச் செய்ய வேண்டும்; அதே சமயம், குப்பை கூளமான போலி சிருஷ்டிகளின் மீது அவர்களது மனம் திரும்பிப் பாழ்பட்டுப் போகாமலும் பார்த்துக்கொள் ளவேண்டும்.

நகர்ப்புறங்களில் வாழும் பருவகால யுவதியர்க்கு இயற் கைக் காட்சியிலே விருப்பம் தோன்றலாம். எனவே அவர் களை நாட்டுப்புறங்களுக்கும், கடற்பிராந்தியங்களுக்கும் அழைத்துச் செல்லவேண்டும். பருவகால அமைதியின்மையை மாற்றி ஹிதம் கொடுக்கும் சக்தி இயற்கைக்கு உண்டு. மழையும், காற்றும் அவர்களது இதயத்தைக் குளிர்விக்கும். மேலும், தன் இதயத்துக்குள் ளாக ஆயிரம் அழிவுக் கோட் டைகளைக் கட்டி, அதனுள் குமுறும் இளம் உள்ளங்களின் கதவுகளை, இயற்கை திறந்து விட்டு விடும். இயற்கையை அவர்கள் ஈடுபட்டு ரசிப்பார் கள். இதே மாதிரி விளையாட் டுக்களிலும் அவர்களை ஈடுபடுத் தலாம்.

பெண் கல்வி சமீப காலத்தில் வளர்ச்சியுற்றதால், அது ஆண் கல்வியை காப்பியடித்ததாகவே படுகிறது. என்ருலும், பெண் கல்வியை அவர்களது பருவ காலத்துக்கு ஏற்றவாறு மாற்றி யமைக்கவேண்டும். பல மணி நேர வீட்டுக்கணக்கு, பரீட்சை கள், கட்டாயத் தேகப்பயிற்சி முதலிய வேண்டாத நிர்ப்பந்த சங்கடங்களையும் சரியாக மாற் றியமைக்க வேண்டும். இந்த இரண்டு அம்சங்களும், பருவ கால யுவதியின் உடல் நலத்தை யும் உற்சாகத்தையும்பொறுத்த விஷயங்கள். அவளைச் சரி யானபடி கவனிக்க வேண்டிய து மிகவும் முக்கியம். ஏனெ னில் அவள்தான் வருங்காலச் சந்ததியின் தாய்!

❋

'அரேபியக் கதைகள்' என்ற கதை இலக்கியம் இந்நாட்டு மன்னன் ஒருவனைப் பற்றித்தான் இயற்றப்பட்டது. பழம் பெருமை படைத்த இந்நாட்டில்தான் ஏடன் தோட்டம் இருந்த தாகச் சொல்லப்படுகிறது. இந்நாட்டைப் பற்றிய பிற விவரங்களைக் கட்டுரையில் படியுங்கள்.

ஈராக்

விஸ்தீரணம் : 1,77,100 சதுர மைல்

ஜனத்தொகை : ஏறக்குறைய 36 லட்சம்

தலைநகரம் : பாக்தாத்

பழம் பெருமை வாய்ந்த இந்த நாட்டை மெஸபெடோமியா என்றும் சொல்லுவதுண்டு. இந்த நாட்டின் தலைநகராகிய பாக்தாத், முற்காலத்தில் மேற்கே டமாஸ்கஸுக்கும், தெற்கே மெக்காவுக்கும், வடக்கே சாமர்கண்டுக்கும், கிழக்கே பாரசீகம், இந்தியா முதலிய நாடுகளுக்கும் செல்லுகிற யாத்திரா மார்க்கங்கள் சந்திக்கும் இடமாக இருந்தது. ஒட்டகச் சாரைகள் அந்தக் காலத்தில் இந்நகரத்திலிருந்து நாற்றிசைகளுக்கும் சென்ற வண்ணமாகவே இருக்கும்.

இந்நாட்டில் பல இனத்தவர்களும் வசித்துவந்தபோதிலும் பெரும்பாலானவர்கள் அரேபிய முஸ்லிம்கள்தான். மற்றும் கிறிஸ்தவர்கள், யூதர்கள், அஸ்ஸீரியர்கள் முதலியவர்களும் இங்கே வசிக்கிறார்கள். யூதர்களின் மொத்தத்தொகை 70,000. இவர்கள் வியாபாரம் செய்து வருகிறார்கள்.

ஈராக்கைத்தான் பைபிளில் வரும் ஏடன் தோட்டம் என்று சில கிறிஸ்தவப் பண்டிதர்கள் கூறுகிறார்கள். டைக்ரிஸ் யூப்ரடீஸ் பள்ளத்தாக்கில் பாபிலோனியா என்ற பழம் பெரும் நகரம் இன்றைக்கு 6000 வருஷங்களுக்கு முன் கட்டப்பட்டது. ஈராக் சரித்திரத்தின் ஆரம்பகாலத்திலிருந்து கி. மு. 600 வரையிலுள்ள பகுதி, பாபிலோனியா, அஸ்ஸீரியர் இவற்றின் சரித்திரமே தான். சுமர், அக்கத் ஆகியவர்களின் ராஜாங்கம் அந்த நாளில் இந்நாட்டில் சீர்பெற்றுத் திகழ்ந்தது. கி. மு. 2000-ல் ஹாமுராபி என்ற மன்னன் அரசாட்சியை கைப்பற்றி, சிம்மாசனம் ஏறியதுதான், பாபிலோன் உலகப் பிரசித்தி பெறத் தொடங்கி விட்டது. ஹாமுராபி பெரிய சட்ட நிபுணன். அவனுடைய சட்டமுறை இன்னும்கூட அமலில் இருந்து வருகிறது.

கி. மு. 700லிருந்து 600க்குள்ளாக பாபிலோனியாவின் புகழ் மங்கி அஸ்ஸீரியா தலையெடுத்து விட்டது. பிறகு அஸ்ஸீரியர்களைத் தோற்கடித்து விட்டு சால்டியர்கள் சுமார் 50 வருஷ காலம் ஆண்டனர். பிறகு வந்த நெபுசட்நெஸார் என்ற மன்னன் பாபிலோனியாவைப் புதுப்பித்துக் கட்டினான். அப்புறம் இந்நகரம் இடிபாடுகளாய் விட்டதின் சின்னங்களை இப்போதும் காணலாம். அந்த மன்னனின் காலத்தில் பாபிலோனியாவின் செல்வாக்கு மத்தியதரைக்கடல் வரையும் பரவியிருந்தது. பிறகு பாரசீகர்களின் செல்வாக்கு சுமார் 200 வருஷகாலம் நீடித்தது. அதற்குப் பின் மகா அலெக்ஸாண்டரின் உலக படையெடுப்பின் முன் மெஸபடோமியோவும் தோற்றுப்போய்விட்டது. ஆனாலும், இரண்டாவது முறையாக பழையபடியும் பாரசீகர்கள் சுமார் 400 வருஷகாலம் இந்நாட்டை ஆண்டார்கள். அதே சமயத்தில்தான் இஸ்லாம் மதம் பிறந்தது. அப்போது பாக்தாத்தில் காலிப்களின் சகாப்தம் தொடங்கி அதிகாரத்திலும் மோடியிலும் தனக்கு ஈடில்லை எனத்திகழ்ந்தது. இந்த காலிப் மன்னர்களில் ஒருவனாகிய ஹரூன் அர் ரஷீத் என்பவனைப் பற்றித்தான் 1001 இரவுகள் என்ற கதைத்தொகுதி (அரேபியக் கதைகள்) இயற்றப்பட்டது.

காலிப்களுக்குப்பின் மங்கோலிய, தார்த்தாரிய ஆட்சி 13-வது நூற்றாண்டின் நடுவில் நடைபெற்றது. அந்த சமயத்தில் பாக்தாத் சூறையாடப்பட்டதையும், நிர்மூலமாக்கப்பட்டதையும் வர்ணிக்க முடியாது. கி. பி. 1534ல் ஈராக் ஆட்டோமன் ஆட்சிக்கு உட்பட்டது. இப்போது ஈராக் சுதந்திர நாடாக உள்ளது. 1932-ல் தான் இது சுதந்திர நாடானது.

டைக்ரிஸ் யூப்ரடீஸ் என்னும் இரண்டு நதிகளினால் இந்நாடு வளம்பெற்றுத்திகழ்கிறது. மக்களில் 100-க்கு 90 பேர் விவசாயிகளே. உலகத்துக்குக் கிடைக்கும் ஈச்சம்பழத்தில் முக்கால்வாசிக்குமேல் ஈராக்கிலிருந்து தான் ஏற்றுமதியாகிறது. இதைத்தவிர கோதுமை, பார்லி, நெல், கம்பு, பருத்தி, ஒருவகை நாரத்தை முதலியனவும் ஏராளமாக விளைகின்றன.

இந்நாட்டிலுள்ள ரயில்வே மார்க்கத்தின் மொத்த நீளம் சுமார் 1157 மைல்; சாலைகளின் நீளம் 4000 மைல். வெளி நாடுகளை ஈராக்குடன் இணைக்கும் விமான நிலையங்களும் உள்ளன.

பெட்ரோலியம் இந்நாட்டில் ஏராளமாகக் கிடைக்கிறது. கிர்குக் என்ற இடத்தில் எண்ணெய்க் கிணறுகள் இருக்கின்றன. இந்த எண்ணெய்ச் செல்வம் எல்லாம் பிரிட்டன் போன்ற மேற்கத்திய நாட்டுக் கம்பெனிகளின் ஆதிக்கத்தின் கீழ்தான் இருக்கிறது. பாஸ்ரா இந்நாட்டின் பிரதான துறைமுகப்பட்டணம்.

ஈராக்கில் அரசர், மந்திரிசபை பார்லிமெண்ட் இந்த அடிப்படையில் ராஜாங்க அமைப்பு இருக்கிறது. ஜனநாயகம் இன்னும் இங்கு நன்ருக வளர்ச்சி படையவில்லை.

❋

குடியரசின் வளர்ச்சிக்குத் திட்டம் போடுகிறவர்கள், குடியரசின் இலக்கிய வளர்ச்சிக்குத் திட்டம் போடத் தவறிவிடக் கூடாது. நம் நாட்டில் கலைகளும், இலக்கியமும் வளர்ச்சி பெறுவதற்குத் தம்முடைய யோசனைகள் சிலவற்றை இங்கே கட்டுரையாளர் தெரிவிக்கிறார். ஆங்கில மூலத்தில் எழுதப்பட்ட கட்டுரையின் சாரமே இக் கட்டுரை.

இந்தியக் குடியரசில் இலக்கியம்

மஞ்சேரி எஸ். ஈச்வரன்

பழைய காலத்தில் அரசர்களின் ஆதரவிலும் பிரபுக்களின் ஆதரவிலும் இலக்கியம், கலை முதலியன வளர்ந்து வந்தன. ஷேக்ஸ்பியர், ஸௌதாம்ப்டன் பிரபுவுக்கு, தம் கவிதை ஒன்றைச் சமர்ப்பணம் செய்திருப்பதை நாம் காண்கிறோம். காளிதாசன், மகா விக்கிரமாதித்தனுடைய ஆஸ்தானத்தில் திகழ்ந்தவன். அரசர்களின் ஆதரவு பெற்றிருந்த நாள் முதல், பொருளாதார மயமாக இருக்கும் இன்றைய தினம் வரையிலும் இலக்கியம் எத்தனையோ மாறுதல்கள் அடைந்துள்ளன. வாழ்க்கையை வளம் படுத்த எண்ணிய கலைஞர்கள், தங்களுடைய துன்பங்களுக்கும் போராட்டங்களுக்கும் மத்தியிலும், தங்கள் மனம் திருப்தி கொள்ளும் படியாக தங்களுடைய பணியை ஆற்றியிருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட காலத்தில் தலைசிறந்த கவிதையோ, தலை சிறந்த ஓவியமோ, தலை சிறந்த இசையோ தோன்றவில்லை என்றால் அதற்கு மோசமான கால நிலையோ, சூழ்நிலையோ காரணங்களாகாது; உண்மையில் அதற்கு, சிறந்த கலைகளைச் சிருஷ்டிக்கும் உண்மைக் கலைஞர்கள் அப்போது தோன்றவில்லை என்று தான் அர்த்தம்.

மகத்தான கலைக்கு, மகத்தான மனத்திராணி வேண்டும்; அது இன்றியமையாத ஒன்றாகும்.

படையெடுப்பாளர்களால் குழப்பம் மண்டிக் கிடந்த காரணத்தால் பல நூற்றாண்டுக காலமாக இந்தியாவில் கலா சிருஷ்டி க்ஷீண

தசையடைந்து கொண்டு வந்தது. அந்த நிலையில் தான் பிரிட்டிஷ்காரர்கள் இந்தியாவை வெற்றிகொண்டார்கள். கலாசார ரீதியிலும் வெற்றி கொள்ளுவதற்காக, மெக்காலே பிரபு அதற்கேற்ற கல்வி முறைகளை இந்தியாவில் புகுத்தினர். அதனல், கல்வியானது மக்களின் அறிவை மலரச் செய்யும் சாதனமாக இல்லாமல், மக்களை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் குமாஸ்தாக்களை உற்பத்தி செய்யும் யந்திர சாதனமாக ஆகி விட்டது. ஆனலும், இந்த நிலையில் பிறகு மாறுதல் தலைகாட்டியது. மேலை நாட்டவரின் தொடர்பால் நம் நாட்டு மக்கள் சுதந்திரக் கருத்துக்களையும், ஜனநாயகக் கருத்துக்களையும் அறிந்துகொள்ளவே, தேசத்தில் ஒரு விழிப்பு ஏற்படலாயிற்று. இதற்குப் பிரதி பலனக, மேற்கத்திக் காரர்களும், சமஸ்கிருத மொழியில் உள்ள இலக்கியம், தத்துவம் முதலியவை பற்றிய ஞானத்தைப்பெறலாயினர். அதே சமயத்தில் இந்தியப் படிப்பாளிகளும் தங்கள் தாயகத்தின் கலைகளைக் கற்று பெரிய அறிஞர்களாகப் பிரகாசித்தனர். சமயம், தத்துவம் ஆகியவற்றில் ராம கிருஷ்ணரும், விவேகானந்தரும், கவிதையில் தோரு, சரோஜினி, தாகூர், பாரதி ஆகியவர்களும், நாவலில் பங்கிம் சந்திரர், வேதநாயகம் பிள்ளை, ராஜம் ஐயர் ஆகியோரும், இது போல் இந்திய ஓவியம், இந்திய சிற்பம், இந்திய சங்கீதம் முதலிய துறைகளில் பல மேதாவிகளும் திறமை பெற்று இலங்கவே, கலா சிருஷ்டி செய்வதில் ஒரு உத்வேகம் கிளம்பியது. ஆனல் மிகவும் அதிகமாக விழிப்பு ஏற்பட்டது அரசியல் அரங்கத்தில் தான். இந்தியாவில் தலையெடுத்த தேசீய உணர்ச்சியின் பயனே மகாத்மா காந்தி முன்னணியில் நின்று பிரகாசித்தது. தேசீய இயக்கத்துடன், தேசீயப் பத்திரிகைகள் தோன்றின; எழுத்தாளர்கள் தோன்றினர். எல்லாமும் எல்லோரும் சுதந்திரப் போராட்டத்தை இடை விடாது நடத்தி வரும் போது, தலைவர்களாக விளங்கிய காந்தியும், நேருவும், பேரு மன்னர்களாகவும் விளங்கினர். நாம் போராடிய சுதந்திரம் கிட்டி விட்டது; இனி நமக்கு நாமே மன்னர்களாக வாழப்போகிறோம். இந்த சந்தர்ப்பத்தில் நம் கலைகளும், இலக்கியங்களும் மலர்ச்சி பெற்று, விரிவடையா விட்டால் இந்த சுதந்திரத்தைப் பெற்றும், அதனல் பயனில்லாது போய் விடும். அத்துடன் கலாசாரத்துக்கும் சமுதாயத்துக்கும் விரோதமான சக்திகள் கலை வளர்ச்சியை மோதிப் பின்னுக்குத்தள்ளி விடும்.

நம் நாடு தற்போது கலை, கலாசாரம் சம்பந்தப்பட்ட மட்டில் எந் நிலையில் உள்ளது? முதலில் ஆங்கில பாஷையில் இலக்கிய சிருஷ்டி செய்வதை எடுத்துக் கொள்ளுவோம்: ஆங்கிலத்தில் எழுதி, மேலை நாட்டவர்களின் பாராட்டுகளையும் பெற்ற எழுத்தாளர்கள் இங்கு தோன்றியிருக்கிறார்கள். ஆனால் இனி, காலக்கிரமத்தில் இந்த ஆங்கில பாஷை — எழுத்தாளர்கள் தங்கள் தாய்ப் பாஷைகளில் எழுத ஆரம்பித்து விடுவார்கள என்றே தோன்றுகிறது. ஆங்கிலம் இனி பதினைந்து வருஷ காலமே நம் நாட்டில் உபயோகிக்கப்படும் என்றாலும், வேறொரு உருவில் அதற்குப் பிறகும் அது இருந்து வரத்தான் செய்யும். ஆங்கில பாஷை மூலமாக உலக இலக்கியங்களைக் கற்றுணர்ந்தவர்கள் அந்த இலக்கியங்களில் உள்ள செல்வங்களைத் தாய் மொழிகளில் கொண்டு வந்து சேர்க்க வேண்டும்.

பிரிட்டிஷார் ஆட்சியில் ஆங்கிலத்துக்கு இருந்த ஸ்தானம் இனி தேசிய பாஷையாகிய ஹிந்தி பாஷைக்கு இருந்து வரக் கூடும். அப்பொழுது அது தாய்ப்பாஷைக்கு அடுதத படியான ஸ்தானத்தைப் பெறும். ஹிந்தி பாஷை பேசுகிறவர்கள் மட்டுமின்றி, ஹிந்தி கற்ற மற்றவர்களும் ஹிந்தியில் எழுதத் தொடங்குவார்கள். அவ்விதம் எழுதும் காலத்தில், எப்படி ஆங்கிலேயன் இந்தியர்கள் எழுதும் ஆங்கிலத்தை இறக்கமாக மதிப்பிட்டானோ, அப்படி உத்தர பிரதேசத்து ஹிந்தி விமர்சகனும் தக்ஷிண ஹிந்தி என்று தாழ்வாகக் கருதுவானா என்பது இனிமேல் கண்டறியவேண்டிய விஷயம். பாஷை விஷயத்தில் ஏகாதிபத்தியப் புத்தி தலைகாட்டினால், ராஷ்டிர பாஷைக்கு அற்பாயுள் தான் என்று சொல்லலாம்.

சமஸ்கிருதத்தைத் பற்றி ஒரு வார்த்தை. அது இந்த பெரிய உபகண்டத்தின் கலாசாரக் களஞ்சியமாக இருக்கிறது. இலக்கியம், தத்துவம் சம்பந்தமான மிகச்சிறந்த சிருஷ்கள் அதில் உள்ளன. அந்த சிருஷ்டிகள் மேலை நாட்டு எழுத்தாளர்களான ஆல்டெளஸ் ஹக்ஸ்லி, ஜெரால்டு ஹேர்டு, ஸாமர்ஸட் மாகம், கிறிஸ்தோபர் இஷர்வுட் போன்றவர்களுக்குக் கலா போஷணை அளித்துள்ளன. அவர்களைப் போஷித்து வளர்ப்பது நம்மையும் வளர்க்கத் தானே செய்யும்?

தேசிய வளர்ச்சியுடன் தாய்ப்பாஷை இலக்கியமும் வளர்ந்தது. ஆனாலும் தாய்ப் பாஷையில் எழுதுவது சில வரையறைகளுக்கு அடங்கியே நடைபெற்றது.

ஐரோப்பிய இலக்கியபாணி களை அப்படியே பின்பற்றி, அந்தப்பாணிகளைத் தாய்ப் பாஷையில் எழுதும்போது கையாளத் தொடங்கினர். இந்த 'இமிட்டேஷன்' இலக் கியத்தை உயர்தர கலா சிருஷ்டி என்று கூற இய லாது. ஆனாலும், இவ்வித மாகத் தோன்றிய நூல் கள், தாய்ப்பாஷையின் விளை நிலத்துக்கு நல்ல உர மாகப் பயன்பட்டன.

தாய்ப்பாஷையில் எழுது வது அதிகப்படவே வாசகர் களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் வளர்ந்து வரத் தொடங்கியது ஆனாலும், இந்தியர்களிடம் விலை கொடுத்து புத்தகங்களை நிரந்தரமாக வாங்கும் பழக் கம் நன்கு உண்டாகவில்லை. இதனால் இலக்கிய கர்த்தாக் கள் சுதந்திரமாய் பிழைக்க இயலாமல், முதலாளித் துவப் பிரசுர கர்த்தர் களின் கைப்பிடிக்குள் ஆட வேண்டியிருக்கிறது. அந்தப் பிரசுர கர்த்தர்களுக்கோ கலை ஞானம், லாபம் என்ற இரண்டு குறிக்கோள்களை யும் சரிவரக் கொண்டு செலுத்த இயலவில்லை. மேலும், பிரசுர கர்த்தர் களிடம் செல்வாக்கு பெற் றுள்ள சில எழுத்தாளர்கள் தங்கள் சுய நலத்தைமட்டும் தேடிக்கொள்ளுவது, குறிப் பிட்ட ஒரு பாஷையின் எழுத்தாளர்கள் சிலர் சங் கம் சேர்ந்து கொண்டு, ஏற் கெனவே உயர்ந்த இலக்கி யங்கள் எதையுமே சிருஷ்டி செய்யாமல், (1) கோஷ்டி மனப்பான்மை (2) மட்ட ரகச் சரக்குகளைப் படைத் துக் குவிப்பது (3) அடுத்த பாஷை மீது விரோதத்தை வளர்த்துத் தங்கள் பாஷை யே மிக உயர்ந்தது என்று கூறுவது இவை போன்ற அபாயங்களுக்குத் தங்கள் சங்கத்தின் வாயிலாக வழி பண்ணுவதும் கூடாது. பாஷாவாரியாக உள்ள கழகங்கள் இவை போன்ற அபாயங்களைத் தவிர்க்க வேண்டும். வெறுப்பு, சகிப் பின்மை, மமதை முதலியன விஷத்தைப் போன்றவை.

விமர்சனக் கலை, சிருஷ்டிக் கலையுடன் கைகோத்துச் செல்லக்கூடியது; மேலும் சிருஷ்டிக்கு உத்வேகம் அளிப்பதும் ஆகும். இந்தியா வில் நல்ல, தரமான விமர் சனம் என்பது இனிமேல் தான் தோன்ற வேண்டும். மேலை நாட்டு விமர்சன முறைகள் நமக்குப் பொருந் தாது. நம் நாட்டின் அழகுக் கலையை இனி நன்கு கற்ற றிய வேண்டும். கோஷ்டி கூடிக்கொண்டு பிறரை ஒரேயடியாகத் தூற்று வதோ போற்றுவதோ கூடாது.

இந்தியாவில் தங்கள் குறிக்கோள்களை நிறை வேற்ற இலக்கியத்தைப் பயன் படுத்துகிறார்கள் அநேக எழுத்தாளர்கள். ஆனால், அரசியல் பிரசாரத்

தைக் கலக்காமல் சிருஷ்டிப்பதுதான் கலை மதிப்பைப் பெற முடியும். ஆகவே எழுத்தாளர்கள் தங்கள் கலை உள்ளத்தை பிறவற்றிற்குப் பணிய வைத்து விடக்கூடாது.

புதிய குடியரசில், பொருளாதாரத் துறையில் மட்டுமின்றி, ஆத்மீகத் துறையிலும் தரம் உயரவேண்டும். சமூகத்தில் ஏற்படும் குறைபாடுகள் இலக்கியத்திலும் பிரதிபலிக்கின்றன. அநேக சமுதாயக் குறைபாடுகளுக்கு அடிப்படையான காரணம் பொருளாதாரச் சீர் கேடாகும். வளம் பொருந்திய வாழ்க்கை, இதய மலர்ச்சிக்கும், தேசிய ஒழுக்கத்துக்கும் மிக மிகத் தேவை. மனிதனிடம் உள்ளும் புறமும் உயர் குணம் வளர்ச்சி பெற்றால் ஒழிய, சர்க்காரோ கலைஞர்களோ ஏற்படுத்தும் கழகங்களால் தேசத்தில் கலாசார வாழ்க்கையை வளர்த்து வர முடியாது. ஆகவே மாகாணம், பாஷை ஆகியவற்றின் அடிப்படையில் கொள்ளும் தப்பான கர்வம் இல்லாது ஒழிக! வகுப்புவாரியாகப் பிரிந்து சதிகாரர்களும் அரசியல் புரட்சிக்காரர்களும் இழைக்கும் மிருகத்தனங்களும், பொதுஜனப் பிராபல்யம் பெற்ற "கலாசார உழைப்பாளர்" களின் மோசமான பண்புகளும் முகஸ்துதிகளும் ஒழிவதாக! சிறந்த கலைகளுக்கும் மக்களுக்கும் நடுவே மதில் எழுப்பாதிருப்பார்களாக! எழுத்தாளர்களும் கலைஞர்களும் தங்கள் சாதனைகள் விரிவு பெற, தங்கள் தங்கள் அனுபவங்களைப் பரிவர்த்தனை செய்து கொண்டு, மனித உரிமைகளுக்காகவும் மனிதப் பண்புகளுக்காகவும் தைரியமாகப் போராட முன் வந்து, இந்தியக் குடியரசு மேலான நிலையை அடைய வழி காட்டுவார்களாக!

*

என் வாங்குகிறாள்?

ஒரு பெண் ஒரு சாமானை என் வாங்குகிறாள் என்றால்......

1. அவளுடைய கணவன், அந்த சாமானை அவள் அடைய முடியாது என்று சொல்லுவதால்.
2. அந்த் சாமான் அவளை ஒல்லியான தேகமுடையவளாகக் காட்ட முடியும் என்பதால்.
3. அவளுடைய பக்கத்து வீட்டுக்காரர்களால் அதை வாங்கும் சக்தி இல்லை என்பதால்.
4. யாரிடத்திலும் அந்த சாமான் இல்லை என்பதால்.
5. ஒவ்வொருவரிடத்திலும் அந்த சாமான் இருக்கிறது என்பதால்.
6. அது புதுமாதிரியாக இருப்பதால்.
7. "ஏனென்றால்"

—திரஸ்கோனியன்

பட்டினியிலிருந்து நம்மை டீ எப்படிக் காப்பாற்றுகிறது?

அயல் நாட்டு நாணயச் செலாவணி நம் நாட்டுக்கு இன்று மிகவும் அவசியமாக இருக்கையில், நாம் ஏற்றுமதி செய்யும் 44 கோடி பவுண்டு தேயிலை, அவசியமான உணவுப்பொருள்களை வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய ஏராளமான தொகையை அளிக்கிறது. டீ நம் நாட்டு கலாசாரத்தூதர் மட்டுமல்ல, பட்டினியைத் தடுக்க உத்திரவாதமும் அளிக்கிறது. ஏற்றுமதித்தொழிலில் இரண்டாவதாக நிற்கும் டீத்தொழில் நாட்டின் பொருளாதாரத் துறையில் பிரதான ஸ்தானம் வகிக்கிறது.

டீயைப்பற்றிய சில புள்ளி விவரங்கள்.

- ஏழு லக்ஷத்து அறுபதினாயிரம் ஏக்ரா நிலத்தில் வருஷமொன்றுக்கு 56½ கோடி பவுண்டு டீ உற்பத்தி செய்கிறோம்.
- இத்தொழிலில் 15 லக்ஷம் ஆண்களும் பெண்களும் ஈடுபட்டிருக்கிறார்கள்.
- உள்நாட்டில் அருந்தும் டீயிலிருந்து பவுண்டு ஒன்றுக்கு 3 அணா வரியும், ஏற்றுமதி செய்யப்படும் டீயிலிருந்து பவுண்டு ஒன்றுக்கு 4 அணா வரியும் சர்க்காருக்கு கிடைக்கிறது. நாட்டு கஜானாவுக்கு வருஷமொன்றுக்கு கிட்டத்தட்ட ரூ. 13 கோடி வரும்படி கிடைக்கிறது.
- மேலும் டீ தொழிலகம் செலுத்தும் பல வரிகள் மூலமாக சர்க்காருக்கு கணிசமான தொகை கிடைக்கிறது.

டீ

ஒரு மகத்தான இந்தியக் கைத்தொழில்.

சென்ட்ரல் டீ போர்ட் வெளியிட்டது.



லிப்டன்ஸ்
என்றால்
சிறந்த டீ

LTX-179G

இந்தக் கட்டுரையில் காணப்படும் செய்திகள் யாவுமே ருசிகரமான செய்திகள் தான். சில ஹாஸ்யமாகக் கூட இருக்கின்றன. சமீப காலத்தில் ஏற்பட்ட புகை பிடிக்கும் பழக்கத்தை ஒட்டி பாட்டுகள், பழமொழிகள், கதைகள், சாஸ்திர சடங்குகள்........

இந்தியாவில் புகை பிடித்தல்

கு. அ.

இந்தியர்வுக்குப் புகையிலையைக் கொண்டு வந்தவர்கள் போர்த்துக்கீஸியர்கள் என்று ஏற்கெனவே பார்த்தோம். தென்னாட்டில் பரவித்தான், பிறகு வடநாட்டில் புகை பிடிக்கும் பழக்கம் பரவியதென்று சொல்லலாம். ஏனென்றால், போர்த்துக்கீஸியர்கள் தென்னாட்டில்தான் முதல் முதலில் வந்து இறங்கினார்கள். வட இந்தியாவில் முதல் முதலில் புகை பிடித்த பிரபலஸ்தர் ஜஹாங்கீர் சக்கரவர்த்தி. சிலர் அக்பர்தான் என்று சொல்லுவார்கள். அக்பருக்கு தக்ஷிண சுல்தான்கள் புகையிலையைக் கொண்டு போய்க் கொடுத்ததாகவும் அவர்கள் சொல்லுகிறார்கள்.

குணபாடம் என்னும் நூல் பின் வரும் செய்தியைத் தெரிவிக்கிறது. இது எவ்வளவு தூரம் உண்மை என்று தெரியவில்லை. இந்தச் செய்தியில் காணப்படும் யூனன் என்னும் தேசம் எது என்று தெரியவில்லை. செய்தி யாவது :

"யூனன் என்னும் தேசத்தில் ஹகீம் என்னும் சாஸ்திரியார் காலத்தில் ஊழி நோய் உண்டாகி அனேகரை வருத்தி மரணம் உண்டாக்கியபோது, இவர் புகையிலையை ஊர் முற்றிலும் கொளுத்தும்படி செய்வித்து அந் நோயை ஒழித்தாராதலால், இதன் (புகையிலையின்) உபயோகம் யூனனி வைத்தியர்களால் பல வழிகளிலும் கண்டு பிடிக்க நேரிட்டதாகக் கூறப்படுகிறது. இதனுலும் அன்றி பர்மா, இந்தியா முதலிய இடங்களில் இதன் உபயோகம் நீண்ட காலமாய்த் தெரிந்திருந்ததனுலும், இச்செடியானது அமெரிக்காவுக்குரிய பயிர் எனக் கூற இடமில்லை."

நம் நாட்டில் புகையிலையைக் குழாய்களில் வைத்துக் கொளுத்திப் புகை பிடிப்பதுடன், சுருட்டு, சிகரெட், பீடி ஆகிய உருவங்களிலும் உபயோக்கிறார்கள். அரசர்களும், கன தனவான்களும், தூரத்தில் ஒரு கெண்டியில் (ஹுக்கா) புகையிலையை வைத்துப் பற்றவைத்து விட்டு, புகையை ஒரு குழாய் வழியாகக் கொண்டு வந்து தம் இருப்பிடங்களில் அமர்ந்தபடியே புகையை உறிஞ்சுவது உண்டு. இந்தக் காட்சியை சினிமாவில் பலர் பார்த்திருக்கலாம். சில சமயங்களில் புகை வரும் குழாயை மதுக் கூஜாக்களின் வழியாகக் கொண்டு வந்து புகை பிடிப்பதும் உண்டு. இப்படி மதுக் கூஜாக்களில் புகுந்து வரும் புகையில் போதை இருக்குமாம்.

புகை பிடிப்பதை அனுசாரமான பழக்கம் என்று நம் நாட்டில் பெரியவர்கள் கண்டிக்கிறார்கள். ஆனால் சீக்கிய மதத்தினர் புகை பிடிக்கவே கூடாது என்பது அவர்களுடைய மதாசார மாகும். "1891-ம் வருஷ ஜனக் கணித அறிக்கையின்படி, ஒருவன் சீக்கியன் தானு என்பதைக் கண்டறிய நம்பகமான ஒரு வழி என்னவென்றால்,

அவன் கூவாத் தொழிலாளி, புகையிலை வியாபாரி ஆகிய இருவர் பக்கத்திலும் அண்டாமல் இருக்கிறனு என்று கேட்க வேண்டும்.''—இவ்வாறு தோரணக்கல் பிஷப் ஸ்ரீ வி. எஸ். அசரய்யா தம் நூலில் கூறியிருக்கிறர்.

சீக்கிய மதத்தினருக்கு என்று கபீர் பின்வரும் எட்டுக் கட்டளைகளைத் தயாரித்துள்ளார்: (1) நியாயமான காரணமின்றி எவனையும் அடிக்கக் கூடாது. (2) உலகத்தை ஏமாற்றுவதற்காக மத சம்பந்தமான உடைகளை அணியக்கூடாது. (3) மதுபானங்களை அருந்தக் கூடாது. (4) திருடக்கூடாது. (5) தற்கொலை செய்து கொள்ளக் கூடாது. (6) புகையிலைப் புகை பிடிக்கக் கூடாது. (7) வழிப்பறி கொள்ளை நடத்தக் கூடாது. (8) கொல்லக் கூடாது.

புத்த மதத்தினரும் புகை பிடிக்கக் கூடாதாம். ஆனல், இன்றைய நிலை அப்படி இல்லை. ஆகவே சீக்கிய மதத்தினரைத் தவிர மற்ற எல்லா மதத்தினருமே புகை பிடிக்கிறர்கள்.

மகாத்மா காந்தி புகை பிடிப்பதைப் பற்றி கூறியிருப்பதாவது:

''புகை பிடித்தல் மனித அறிவை மழுங்கச் செய்கிறது; அப் பழக்கம் மிகக் கொடியது. புகைக் குடியர்களுடைய சுவாசமே அருவருப்பைத் தருகிறது. இத்தகைய வழக்கத்துக்கு நாம் அடிமைகளாகிவிடக் கூடாது. சுருட்டு, சிகரெட் முதலியன நம் நாட்டுச் சரக்காயிருந்தாலும் சரி, பிற நாட்டுச் சரக்காயிருந்தாலும் சரி நிராகரிக்கப்பட வேண்டியவையே.''

காந்திஜீ இப்படிக் கூறியிருக்க, பீடிக் கம்பெனிகள் ''மனிதருள் சிறந்தவர் மகாத்மா; ஆடைகளில் சிறந்தது கதர் ஆடை; பீடிகளில் சிறந்தது...பீடி'' என்று தங்கள் பீடிகளை விளம்பரம் செய்கிறர்கள்! சிலர் 'தேசீய மணம் கமழும் பீடி' என்றும் தங்கள் பீடிகளை விளம்பரம் செய்கிறர்களாம்!

சென்ற நவம்பர் 5-ம் தேதி வெளிவந்த அறிக்கையின்படி, இந்திய மத்திய புகையிலைக் கமிட்டி, சிகரெட்டுகள் தயாரிப்பதற்கான புகையிலையைப் பதப்படுத்தும் முறைகளை சுமார் 20 பேருக்குக் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறது. இந்தப் பயிற்சி ராஜமகேந்திரபுரத்திலும் குண்டூரிலும் உள்ள கமிட்டியின் ஆராய்ச்சி நிலையங்களில் அளிக்கப்படுமாம்.

சுங்கக் கட்டணம் செலுத்தாமல் இந்தியாவின் மாகாணக் கவர்னர்கள் தங்கள் சொந்த உபயோகத்துக்கும் தங்கள் விருந்தினர்களின் உபயோகத்துக்கும் புகையிலை வாங்கிக்கொள்ளலாம் என்று சமீபத்தில் சட்டம் பிறப்பிக்கப் பட்டுள்ளது.

இந்தியாவில் புகைபிடிக்கும் பழக்கம் எல்லா இடங்களிலும் பரவியிருப்பதுடன், புகை பிடிப்பதை ஒட்டிய பழக்கங்களும், சம்பிரதாயங்களும் இருந்து வருகின்றன.

வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் பின் கண்டவாறு ஒரு பழமொழி இருப்பதாக என். எம். பென்ஸர் என்பவர் எழுதியிருக்கிறர்:

''போஷகன் ஒருவன் இல்லாமல் செய்யும் ஊழியமும், கேடயம் இல்லாத இளைஞனும், புகையிலை இல்லாத வெற்றிலையும் ஒன்றுபோலப் பயனற்றவையாகும்.''

'புகையிலை இல்லாத வெற்றிலை பயனற்றது' என்பது இங்கே, பீடா போட்ட பிறகு புகை பிடிக்கவேண்டும் என்பதை குறிப்பிடுகிறது.

இந்தியாவில் ஒரு வருஷத்தில் 760 கோடி சிகரெட்டுகள் செலவாகின்றன.

* * *

தமிழ் நாட்டில் புகையிலைச் சுருட்டை விராலிமலைக் கோவிலில் சுவாமிக்கு நிவேதனமாகப் படைப்பதுண்டாம். பழனி முருகனுக்கும் புகையிலைச் சுருட்டு நிவேதனம் உண்டென்று சொல்லப்படுகிறது. தென் பாண்டி நாட்டில் கருப்பசாமி கோவில் திருவிழாவில், கருப்பசாமி கோவிலில் உள்ள தபசுத் தம்பிரானுக்கும், சுடலை மாடனுக்கும் சுருட்டும் சாராயமும்

வைத்துக் கும்பிடுவார்கள். மேலும், சில ஜாதியினரின் குலதெய்வமாகிய மனை காவல் பெருமாள் சுவாமிக்கு சுருட்டு வைத்துக் கும்பிடுவது உண்டு.

புகை பிடிப்பதுபற்றி வழங்கும் இரண்டொரு பழமொழிகளில், 'தாடி தீப்பிடித்து எரியும்போது பீடி பிடிக்க நெருப்பு கேட்டானும்' என்பது மிகவும் பிரசித்தி பெற்றது. மிகவும் குறைந்த சில்லரைக் காசை ஏதோ, 'பீடிச் செலவு' என்று குறிப்பிடுவார்கள். 'நீங்கள் புகையிலை போடுவீர்களா? அல்லது புகை பிடிப்பீர்களா?' என்று கேட்பதற்குப் பதிலாக "நீங்கள் பிரம்ம பத்திரமா? இல்லை அக்னி ஹோத்ரமா?" என்று தமாஷாகக் கேட்பது உண்டு. 'அக்னி ஹோத்ரம்' என்பது இங்கே புகை பிடிப்பதையே குறிக்கிறது. புகை பிடிப்பதை வெறுப்பவர்கள், புகை பிடிப்பவர்களைப் பார்த்து "கொள்ளிக் கட்டையை சொருகிக்கொண்டே அலையவேண்டுமா?" என்று கேட்பார்கள்.

*　　*　　*

இனி இலக்கிய உலகத்தைக் கவனிக்கலாம்.

"புகையிலை விடுதூது" புகையிலைப் புகையைப் புகழும்போது,

*ஆகாயம் உன் புகைபோல்
ஆனமையாலே அரனர்
ஆகாயமே காயம்
ஆயினர்.

என்றும்,

பகைக் கட்டாய்க் கட்டும்
படுசூலைக் கட்டும்
புகைக் கட்டால் ஓடாதோ !

என்றும் கூறுகிறது. புகையிலைப் புகையைப்போல ஆகாயம் இருப்பதால், சிவபெருமானுடைய சரீரம் ஆகாய ரூபமாகவே இருக்கிறதாம்! மனிதனைப் பந்தப்படுத்தும் சூலை நோயும், புகையிலைப் புகையால் ஓடி மறைந்து விடுமாம் !

1910-ல் சிறுமணவூர் முனிசாமி முதலியார் வெளியிட்டுள்ள ஒரு சிறு புத்தகத்தில் 'கெஞ்சாவின் ஆனந்தக் களிப்பு' என்று ஒரு பாட்டு காணப்படுகிறது. அதில் புகையிலையைப்பற்றிய குறிப்பு ஒன்று இருக்கிறது. அக்காலத்தில் சிறுமணவூர் முனிசாமி முதலியார் எழுதிய பாட்டுப் புத்தகங்கள் தமிழ் நாடெங்கும் பரவி யிருந்தன என்பது யாவரும் அறிந்ததே. அவர் திருவொற்றியூர் உற்சவம் பார்க்க வீரபத்திரன் என்பவருடன் போகும்போது ரங்கசாமி முதலியார் என்பவர் 'ஒரு பதம் பாடுங்கள்' என்று சொன்னதும், சில பதங்கள் பாடினராம் முனிசாமி முதலியார். அவற்றில் ஒரு பதமே பின்கண்ட 'கெஞ்சாவின் ஆனந்தக் களிப்பு.'

இதுவே ஆனந்தம்
கைலாசம்—இதற்(கு)
இணையில்லையே இந்த
செகத்தினில் மோசம் (இது)

சீரான கெஞ்சாவை
வாங்கி—ஒரு
சிலும்பில் அதனைச்
சிறப்புடன் வைத்து
பாராமல் ஒரு 'தம்'
இழுத்தால்—அப்போ
பரம பதத்தினைப்
பார்க்கலாம் நாமே (இது)

இலை, காம்பு, விரைதள்ள
வேணும்—இதுக்
கெதிரான பிர்மபத்ரி
இலை போடவேணும்
சிவ கங்கை* மூன்று துளி
விட்டு—அதைச்
சிக்கென உண்டையாய்ச்
சிலும்பில் அடைத்து

---

* தில்லை வெளியில் சிதம்பர ரகசியமாக சிவபெருமான் இருப்பதை இந்தப் பாட்டு குறிப்பிடுகிறது. அங்கு சிவன் ஆகாய லிங்கமாகவே காட்சியளிக்கிருர் என்பது ஐதீகம். சிவபெருமானுக்கு, "விண்ணே திருமேனி" என்று திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி கூறுவதையும் கவனிக்கவும்.

* சிவகங்கை—தண்ணீர்

அக்கினி பகவானை
மூட்டி—எங்கள்
ஆத்தாள் சிவகாமி
யம்மனை நினைத்து
திக்கென்றொரு மூச்
சிழுத்தால்—அப்போ
தேவர் களெல்லோரும்
திறமுடன் வந்து
எவ்வரம் வேணும் என்று
கேட்பார்—எனக்
கெதிராளி யில்லாமல்
இருக்கவே கேட்பேன் (இது)

ஆகவே, கஞ்சாப் புகை பிடிப்பவர்கள், கஞ்சாவுடன் பிர்மபத்ரி என்று சொல்லப்படும் புகையிலையையும் கலந்து கொள்ளுவது உண்டென்பது உறுதியாகிறது.

சுமார் 200 வருஷங்களுக்குமுன் இராமநாதன் கவிராயரால் இயற்றப்பட்டது 'சிவசயிலப் பள்ளு' என்னும் நூல். இது நெல்லை ஜில்லாவில் ஆழ்வார் குறிச்சியில் வாழ்ந்த ஆறை அழகப்ப முதலியாரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு இயற்றப்பட்டது. இதில் பண்ணைக்காரன் வருகையைக் கூறும் ஒரு பாட்டில், புகைப் பிடிப்பதைப் பற்றியும் சொல்லப்பட்டுள்ளது. பண்ணைக்காரனுர் விக்கல் வாயும், நரைத் தலையும், நாய் குரைப்பது போன்ற இருமலும், சாய்வான தொண்டைக் கட்டும் உருமாலுமாகவும்,

கைக்குள்ளே புகைச் சுருட்டும்
சக்கிமுக்கியும் பஞ்சுங் கல்லும்

கையில் வைத்துக் கொண்டும் வந்தாராம். இந்தப் பள்ளு தோன்றிய காலத்தில் (சுமார் 1720-ம் ஆண்டை அடுத்து) சக்கிமுக்கிக் கற்களையும் பஞ்சையும் தட்டி, நெருப்பு உண்டாக்கியே சுருட்டுப் பற்றவைத்ததாக அறிகிறோம். தீப்பெட்டி கண்டு பிடித்தது 1805-ம் ஆண்டில் தான் என்பதையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

சுகாதார விஷயங்களைப் பாட்டுகளாகப் பாடி 1933-ல் ஒரு நூல் வெளி வந்தது. அதை எழுதியவர் ராமநாதபுரம் எஸ். எம். மணி செட்டியார். அதில் புகை பிடிப்பது கெடுதல் ஒன்று ஒரு பாட்டு கூறுகிறது.

திருநெல்வேலி திருச்சிற்றம்பலக் கவிராயர், திருநெல்வேலியைப் பற்றியே கிண்டலும் கேலியுமாகப் பாடியுள்ள (அச்சேறு திருக்கும்) 'நெல்லைக் கலம்பகம்' என்ற நூலில் காணப்படும் ஒரு பாடலை மட்டும் இங்கே கொடுக்கிறோம்:

நகரினில் ஓட்டலெங்கும்
நடமிடும் புகையும், மைனர்
புகைத்திடும் புகையும், வீதிப்
புழுதியும், துறைகளெங்கும்
தகனத்தில் எழுந்து வானைத்
தழுவிடும் புகையும்—இன்ன
சகலமும் சேர்ந்து வானில்
சதிர் நடம் புரியும் மாதோ

அதாவது திருநெல்வேலி நகரத்தின் மீது வானமண்டலத்தில் ஹோட்டலிலிருந்து வரும் புகையும், மைனர்களின் சிகரெட்டுப் புகையும், தெருப் புழுதியும், கருப்பந்துறைச் சுடுகாட்டுப் புகையும் நடனம் புரியுமாம்.!

இனி நாட்டுப் பாடல்களைப் பார்ப்போம்:

பல வருஷங்களுக்குமுன் பிரசித்தி பெற்ற சிவகாசிக் கொள்ளையை நடத்தியதாகச் சொல்லப்படும் வெள்ளையத் தேவன் என்பவன் பூணூல் போட்டவர்களைம், புகைச் சுருட்டு பிடித்தவர்களையும் கொன்று விட்டான் போலும்! இந்த இரண்டு விஷயங்களும் அவனுடைய எதிரிகளைச் சுட்டிக் காட்டும் அடையாளங்களாக இருந்தனவோ, என்னவோ? இந்தச் செய்தியைக் கூறும் நாட்டுப் பாடலைப் பார்க்கலாம்:

பூணூலு போடாதடா
புகைச் சுருட்டு குடியாதடா
வீணுலே சாகாதடா
வெள்ளையத்தேவன் கையாலே

மற்றொரு பாடல்:

ஒரு வாலிபன் சிகரெட்டும் கையுமாக ஒய்யாரமாய்த் தெருவழி போகிறான்.

அவனைப் பார்த்து, தன் காதலை முறை யிடும் ஒரு இளம் பெண் பின்வரும் பாடலைப் பாடுகிறாள் :

> சிரேட்டுக் கைபுடிச்சி
> தெருவழியே போறவரே !
> சிரேட்டை விட்டெறிஞ்சி—ஒரு
> தெளிவு சொன்னால் ஆகாதோ?

தான் மனச் சமாதானம் அடை வதற்கு ஒரு ஆறுதல் சொல்லக் கூடாதோ, என்று அவள் முறையிடும் போது, சிகரெட்டை விட்டெரியும் படியும் சொல்லுகிறாள். 'அந்த டாம் பீகம்' அவளுக்குப் பிடிக்கவில்லை போலிருக்கிறது ! இந்தப் பாட்டும் சிவகாசிச் சீமைப் பாட்டுதான்.

பீடிக் கம்பெனிக்காரர்கள் தத்தம் சொந்தக் கம்பெனிகளில் தயாரிக்கும் பீடிகளின் புகழை எடுத்துக் கூறும் பாடல்களை சில நாட்டுப்புறக் 'கவிஞர்' களைக் கொண்டு பாடச் செய்து, அவற்றைப் புத்தக ரூபமாக ஆக்கி, திருவிழாக் காலங்களில் பொது ஜனங்க ளிடம் இனமாக விநியோகம் செய்வார் கள். பீடிகளின் பெருமையைக் கூற நாடகங்களும் நடத்தப்படும். இப்படிப் பாடிய புலவர்கள் பலர். அவர்களில் சங்கரன் கோவில் தாலுகாவைச் சேர்ந்த தேவர்குளம் என்னும் ஊரில் வாழ்ந்து சுமார் பத்து வருஷங்களுக்கு முன் காலமான வெங்கடேஸ்வரக் கர்த்தா என்பவர் தெற்கத்திய பிராந்தியத்தில் மிகவும் பிரசித்தி பெற்றவர். சுமார் 20 வருஷங் களுக்கு முன் இவர் இயற்றிய பாட்டு களைப் பாடாத நாடகங்களும், பஜனை களும் சோபிக்காது. 'கர்த்தா பாட்டு' என்றால் அப்போது ஒரே மதிப்பு.

கதைகள் :

புகை பிடிப்பதைப் பற்றி மத்திய இந்திய பூர்விக ஜாதியினரிடம் நான்கு கதைகள் வழங்கி வருகின்றன. ஒரு கதையில், புகை பிடித்து இரு மலைப் போக்கியதாகச் சொல்லப்பட்டி ருக்கிறது. மற்றொரு கதை, ஸர் வால் டர் ராலேயின் தலையில் வேலைக்காரன் தண்ணீரைக் கொட்டிய நிகழ்ச்சியைப் போன்ற ஒரு நிகழ்ச்சியைச் சொல்லு கிறது. வேறொரு கதையில் கூறப் பட்டிருக்கும் செய்தி :

காட்டிலே இருக்கும் ஒரு கிராமத் தில் பிராமணன் ஒருவன் வசித்து வந்தான். அந்த ஊரில் வேறு பிரா மணக் குடியிருப்பு கிடையாது. அந்தப் பிராமணனுக்கு ஒரு அழகான மகள் இருந்தாள். சாமார் என்னும் தாழ்த் தப் பட்ட ஜாதியைச் சேர்ந்த ஒருவன் தன்னை பிராமணன் என்று சொல்லிக் கொண்டு, அந்தப் பிராமணனிடம் வேலையில் அமர்ந்தான். சிறிது நாளில் அந்தப் பெண்ணுக்கும் சாமார் வாலி பனுக்கும் கல்யாணம் நடந்து விட்டது.

ஒரு நாள் அந்தப் பெண் தயாரித் திருந்த ருசிமிக்க பதார்த்தத்தைச் சாப் பிட்ட சாமார் வாலிபன், 'இது பசு மாட்டின் காலைப் போல அவ்வளவு ருசியாக இருக்கிறது' என்று சொல்லி விட்டான். பிறகு விசாரித்ததில் அவன் சாமார் ஜாதியினன் என்பது வெளி யாகி விட்டது. இந்த செய்தி அந்தப் பெண்ணுக்கு அதிர்ச்சியை உண்டாக்கி விட்டது; துக்கம் தாங்காமல் அவள் செத்துப் போய் விட்டாள். அவள் செத்துக் கிடப்பதைப் பார்த்த வாலி பனும் செத்துப் போய் விட்டான்.

பெண்ணின் தகப்பன் இரண்டு பிணங்களையும் கொண்டு போய் அடக் கம் செய்தான். பெண்ணின் சாம்பலி லிருந்து புகையிலைச் செடியும், வாலிப னுடைய சாம்பலிலிருந்து கஞ்சாச் செடியும் முளைத்து விட்டன. இதனால் தான் அன்று முதல் ஜனங்கள் புகை யிலையையும் கஞ்சாவையும் சேர்த்து வைத்தே புகை பிடிக்கிறார்கள்.

கடைசியாக ஒரு கதையில்...

ஒருவன் விடிந்தது முதல் அஸ்தமிக் கும் வரையில் தன் வயலை உழுது கொண்டே இருந்தான். அஸ்தமித்த பிறகுதான் அவன் சாப்பிடுவதே ஒழிய

மற்ற நேரங்களில் சாப்பிட உட்காருவதே இல்லை. ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் கலப்பையை இழுக்கும் மாடுகள், "இப்படி நம்மால் வாழ முடியுமா? நாம் நிச்சயம் செத்துப் போய் விடுவோம்" என்று விசனமாகப் பேசிக் கொண்டன. இதை அறிந்த மகா தேவன் (கடவுள்) ஒரு கிழவனுடைய ரூபதத்தில் பூலோகத்துக்கு வந்து, ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் உழுகிறவனிடம் ஒரு ஹுக்காக் குழாயைக் கொடுத்து புகை பிடிக்கச் சொன்னான். அந்தச் சுகத்தில் ஆழ்ந்த உழவனும், அவனுடைய சக பாடிகளும் அன்று முதல் அரைமணி நேரத்துக்கு ஒரு தடவை உழவை நிறுத்தி விட்டு உட்கார்ந்து புகை பிடித்து வந்தார்கள். மாடுகளுக்கும் ஓய்வு கிடைத்தது.

தமிழ் நாட்டில் உண்மையாக நடந்தது என்று நான் கேள்விப் பட்ட ஒரு கதை:

ஒரு கிராமத்தில் இரண்டு கிழவர்கள் சிநேகிதமாக இருந்து வந்தார்கள். ஒரு நாள் இரவில் ஒரு கிழவன் மற்றொரு கிழவனுடைய வீட்டுக்குப் போனான். அந்தக் கிழவன் வீட்டில் இல்லை. அவனுடைய பேத்திதான் வீட்டின் உள்ளே இருந்தாள். வாசல் நடையில் ஒரே இருட்டு. இந்தக் கிழவன் வாசல் நிலையில் சந்தர்ப்ப வசமாகக் கையை வைத்தபோது ஏதோ ஒரு சாமான் தட்டுப் பட்டது. அந்த வீட்டுக்காரக் கிழவன் சுருட்டுப் பிடிப்பது வழக்கம். இந்தக் கிழவன் சுருட்டுப் பிடிப்பதில்லை என்றாலும், அன்று சபலம் தட்டி விட்டது. 'கையில் சுருட்டு அகப்பட்டுக் கொண்டது' என்று சந்தோஷப் பட்டுக் கொண்டு நிலையிலிருந்து அதை எடுத்து வாயில் வைத்துக் கொண்டான். நிலையை மற்றொரு தடவை தடவும்போது அங்கே தீப் பெட்டியும் இருந்தது. கிழவன் தீக்குச்சியை உரசி புகைபிடிக்க முயன்றான். எத்தனை தடவை தீக்குச்சியைக் கிழித்து வைத்தாலும் 'சுருட்டு' கருகியதே ஒழிய அதில் தீ பற்றவில்லை. எவ்வளவு உறிஞ்சியும் புகை வரவில்லை. கடைசியில் தோல்வி அடைந்து தீப் பெட்டியையும் 'சுருட்'டையும் அதே நிலையில் வைத்து விட்டுக் கிழவன் போய் விட்டான். மறுநாள் பொழுது விடிந்ததும் வீட்டுக்காரக் கிழவன் வாசல் நிலையில் இருந்த பென்சிலை சந்தர்ப்ப வசமாக எடுத்துப் பார்த்தான். பென்சில் கருகிப் போயிருந்த காரணம் அவனுக்குத் தெரியவில்லை. முதல் நாள் இரவு அந்தக் கிழவன் வந்து பென்சிலில் புகையை இழுக்க முயன்ற கதை அந்தக் கிழவனைத் தவிர வேறு யாருக்குத்தான் தெரியும்?

புகை பிடிப்பதன் பலா பலன்களைப் பற்றியும், அவற்றிற்குரிய பரிகாரங்களைப் பற்றியும் இந்த வரிசையில், கடைசிக் கட்டுரையில் பார்ப்போம்.

விடாக்கண்டன்

அமெரிக்கப் பள்ளிக்கூடம் ஒன்றில் ஒரு வாத்தியார் தம் வகுப்புக்குப் போனார். அங்கே ஒரு குழந்தையைக்கூட காணவில்லை. எல்லாம் அன்று வந்த ஒரு புது சினிமாப் படத்தைப் பார்க்கப் போயிருந்தன. இதை அறிந்த வாத்தியார், அந்த சினிமாக் கொட்டகை மானேஜரைப் போன் மூலம் அழைத்து வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தார். சிறிது நேரத்தில், அந்தக் குழந்தைகள் மறுநாள் செய்து வரவேண்டிய வீட்டுக் கணக்குகள் என்னென்ன என்பது சினிமாத் திரையிலேயே காட்டப்பட்டது. குழந்தைகள் இனி எப்படித் தப்புவது?

வானுலக பிர்மாவை நமக்குத் தெரியாது. ஆனால், இதோ இருப்பவர் ஒரு பூலோக பிர்மா; அவர் செய்த சிருஷ்டியே........

'மிக்கி மவுஸ்'

தொ. மு. சி.

மேலே காணும் மனிதரை உங்களில் அனைவருக்கும் தெரிந்திருக்காது; ஆனால், அவர் பக்கத்தில் எகத்தாளமாகச் சிரித்து நிற்கும் சுண்டெலியை உங்களுக்கு நிச்சயம் தெரிந்திருக்கும். அதுதான் உலகப் பிரசித்தி பெற்ற கார்ட்டூன் சித்திர பாத்திரமான மிக்கி மவுஸ்! அவர்தான் அதன் தந்தை, அதன் சிருஷ்டி கர்த்தாவான வால்ட் டிஸ்னி! இன்று திரைப்பட வுலகில் லக்ஷ ரூபாய் நட்சத்திரங்களாகப் பலர் விளங்குவதை நாம் காண்கிறோம்; அந்த நட்சத்திரங்கள் உயிருள்ள நடிகர்கள்; என்றாலும் பலர் உயிரில்லாமலே நடிக்கின்றனர். ஆனால், மிக்கி மவுஸ் போன்ற ஒரு பாத்திரம் வெறும் கற்பனை; டிஸ்னியின் சிருஷ்டி; உயிரில்லாதது. அது லக்ஷ ரூபாய் நட்சத்திரமும் அல்ல. ஆனால், உடலில் உயிரிருந்தும் உயிரில்லாமல் நடிக்கும் அபிமான நட்சத்திர நடிகர்களைக் காட்டிலும், உயிரற்ற இந்த பொம்மையின் நடிப்பு உலகத்தின் ஜனக்கூட்டத்தின் முழு அன்பையும் ஆதரவையும் பெற்றிருக்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது. அதனால்தான் இந்த மிக்கி மவுஸின் சிருஷ்டிகர்த்தாவான வால்ட் டிஸ்னி இன்று லட்சாதிபதியாக விளங்குகிறார். திரைப்பட உலகில் இப்படி ஒரு மகத்தான புரட்சியை ஏற்படுத்திய நிபுணரைப் பற்றி நாம் தெரிந்து கொள்ளவேண்டாமா? அவசியம் தெரியத்தான் வேண்டும்.

இன்று வால்ட் டிஸ்னிக்கு நாற்பத்தொன்பது வயதாகிறது அவர் 1901ம் வருஷம் சிகாகோ நகரில் பிறந்தார். இவரது தந்தை ஒரு காண்ட்ராக்டர். குழந்தைகளெல்லாம் சிறு வயதிலேயே தன்னைப் பேணி வாழக் கற்றுக் கொள்ளவேண்டும் என்ற கருத்துடையவர். எனவே, டிஸ்னி தமது ஒன்பதாவது வயதிலேயே, பள்ளிக்கூட நேரம் ஒழிந்த பிற வேளைகளில் பத்திரிகை விற்கத் தொடங்கினர். பின்னர் அவரது குடும்பம் கான்ஸாஸ் நகரிலிருந்து, சிகாகோ நகருக்கு மீண்டும் வந்தபோது, ஒரு ஹைஸ்கூலில் சேர்ந்து படித்தார். ஆனால், பாவம்—பின்னால், அமெரிக்க சர்வகலா சாலைகளால் பற்பல கௌரவப் பட்டங்கள் பெறவிருந்த டிஸ்னி, தமது இளமைக் காலத்தில் ஒரு ஹைஸ்கூலைக் கூடத் தாண்டவில்லை. அந்தச் சமயம் அவர் கற்றுக்கொண்டதெல்லாம் ஓவியக்கலையில் ஓரளவு பயிற்சிதான்.

பதினைந்தாவது வயதில் அவர் வேலைக்குப் போய்விட்டார். என்ன வேலை தெரியுமா? பத்திரிகை விற்பது, பழங்களை விற்பது பட்டாணிக் கடலை விற்பது, அதன் பின்னர் ஒரு தபால் ப்யூன் வேலை மாதிரிகூட பார்த்தார். ஆனால், அந்த வேலை கிடைப்பதில் கூட அவருக்குச் சிரமமிருந்தது. அவரோ சிறு பையன். அவரை நம்பி யார் வேலை கொடுப்பார்கள். எனவே, ஒட்டுமீசை வைத்து தம்மைப் பெரியவன்மாதிரி சிங்காரித்துக்கொண்டு, காரியத்தைச் சாதித்துக்கொண்டார். ஆனால், வேலைக்காகச் செய்த இந்த வேஷத்தின் வெற்றி அவருக்கு உண்மையிலேயே வேஷம் போடும் நாடகக்கலையின் மீது நாட்டம் உண்டாக்கிவிட்டது. எனவே அவர் நாடகங்களில் நடிக்கத் தலைப்பட்டார். அந்தச் சமயம் அவர் உலகப் பிரசித்திபெற்ற ஹாஸ்ய நடிகரான சார்லி சாப்ளினை அப்படியே தமது பாவனைகளில் காப்பியடிக்க முற்பட்டார், இதன் காரணமாக, அவருக்குப் படுதோல்வி ஏற்பட்டது. எனவே அரிதாரத்தலையும் ஒட்டு மீசையையும் மூட்டை கட்டி விட்டு மீண்டும் தமக்குத் தெரிந்த, ஓவியக் கலைக்குத் திரும்பினர் டிஸ்னி. எனவே, கான்சாஸ் நகரில் ஒரு விளம்பரக் கம்பெனி தொடங்கி விளம்பரதாரர்களுக்கு சித்திரம் எழுதிக்கொடுத்து பிழைக்க ஆரம்பித்தார். இவரது சித்திரங்கள் அந்தச் சமயம் வியாபாரிகளுக்குப் பிடித்துப்போயிற்று. தொழில் சுமுகமாக நடந்து வந்தது.

அந்தச் சமயம், அதாவது 1917ம் வருஷம் ஐரோப்பிய மகாயுத்தம் நடந்துகொண்டிருந்தது. அமெரிக்கா அவ்வருஷம்தான் யுத்தத்தில் தலையிட்டது. டிஸ்னிக்கு யுத்த சேவையில் சேர விருப்பம். வயதோ பதினறு; ஆளோ சின்ன உருவம். எப்படிச் சேர்வது: இருந்தாலும், எப்படியோ தம் தாயின் உதவியினல் வயதையெல்லாம் மாற்றிக்கொடுத்து ராணுவத்தில் சேர்ந்தார். பிரான்சுப் போர் முனையில் சேவை செய்தார். யுத்த காலத்தில் சேவை செய்யும் காலததிலும், அவர் அங்குள்ள ராணுவ லாரிகளிலெல்லாம் பற்பல கேலிச்சித்திரங்களைக் கிறுக்கிவைப்பதில் ஆனந்தம் கொண்டார். யுததம்

முடிந்து; டிஸ்னி கான்சாஸுக் குத் திரும்பியதும். தமது சித்திரசாலையை விரிவுபடுத்தி ஒரு புகைப்படக் காமிரா ஒன்றையும் ஸ்தாபித்து கார்ட்டூன் படமெடுக்கத் திட்டமிட்டார். கார்ட்டூன் படம் என்பது டிஸ்னி கண்டுபிடித்த சிருஷ்டியல்ல. அதற்கு மூன்பே பத்தொன்பதாம் நூற்ருண்டின் இறுதியில் ஒரு பிரெஞ்சுக் கலைஞர் செய்து காட்டியதுதான். அதன் பின்னும் அம்முயற்சியில் பலர் வேலை செய்துள்ளார்கள். ஆனால் டிஸ்னி தமது கலைமூதாதையர்களின் சிருஷ்டிகளிலிருந்து முன்னேறவும், மேம்படவும் திட்டங்கள் வகுத்தார். கார்ட்டூன் படத்தை சர்வ ஜனரஞ்சகமான கலையாக மாற்ற யோசித்தார். ஆனல் இந்த முயற்சி தோல்வியைத்தான் கண்டது. கைமுதல் கரைந்து கையைக் கடித்தது. விரிவடைந்த அவரது ஸ்டூடியோ மீண்டும் ஒடுங்கிவிட்டது. எனவே கார்டூன் பட யோசனையை ஒதுக்கி வைத்துவிட்டு, வீடு வீடாய்ச் சென்று புகைப்படம் பிடித்து பிழைப்பு நடத்திஞர் டிஸ்னி. அந்தச் சமயம் அவர் ஒரு பழைய சட்டையும் தொள தொளத்த கால்சராயும் தான் போட்டிருப்பார். அவரது பெட்டியிலும் சித்திரக் கருவிகளைத் தவிர வேறு சாமான்கள் கிடையாது. அத்தனை தரித்திரம்!

இப்படிச் சுற்றித் திரிந்து அவர் ஹாலிவுட் வந்து சேர்ந்தார். அங்கு அவரது கார்ட்டூன் பட எண்ணம் மீண்டும் தலை தூக்கியது. எனவே தமது கார்டடூன் சிததிரங்களை புகைப்படமாக்கி, ஓட்டிப் பார்த்தார். இந்த முயற்சி வெற்றியளிக்கவில்லை. என்ருலும், அதனல் அவரது மூளைக்கு புதிய பாதை தோன்றியது. அதன் காரணமாக நம்பிக்கை ஏற்பட்டு விடாப்பிடியாய் தமது முயற்சியை நிறைவேற்றித்தான் பார்ப்பது என்று திட்டமிட்டார்.

இந்த முயற்சிக்கு அனுசரணையாக, அவர் ஒரு கம்பெனி தொடங்க முனைந்தார். எவ்வளவோ தோல்விகளுக்கிடையே பாடுபட்டும் அவரது கம்பெனி மூன்று பேர்களுடனேயே அடங்கிவிட்டது: அவர் ஒன்று; அவரது சகோதரரான ராய் ஒன்று; ஸ்டூடியோவைப் பெருக்கி மெழுகுவதோடு, டைப் அடிப்பது, கடிதம் எழுதுவது முதலிய தொழில்களைப் பார்த்துவந்த ஒரு இளம் பெண் ஒருத்தி. ஒரு வருஷம் கழித்து டிஸ்னி அந்தப் பெண்ணையே மணந்துகொண்டார். பின்னர் அவர் தமது தொழில் சம்பந்தமாக நியூயார்க் நகருக்கு ஒரு ஒப்பந்தம் செய்யப் போஞர். அவரது மனைவிக்கோ தம் கணவரின் துரதிருஷ்டத்தைப் பற்றிக் கவலை. ஆனல், நியூயார்க் சென்ற டிஸ்னியிடமிருந்து ஒரு தந்தி வந்தது. தமது காரியங்கள் எல்லாம் சுமுகமாய் முடிந்துவிட்டதென்றும், தாம் வீடு திரும்புவதாவும் டிஸ்னி தந்தி கொடுத்திருந்தார். அவரது மனைவி ஒரே குதூகலத்தில் இருந்தார். ஆனல், உண்மையில் டிஸ்னிக்கு அந்த ஒப்பந்தம் நிறைவேறவே இல்லை. டிஸ்னியின் சகோதரரான ராயும், ஸ்ரீமதி டிஸ்னியும் குதூகலமாயிருக்கும்போது, டிஸ்னி வந்து சேர்ந்தார். அவர்

கொண்டுவந்தது ஒப்பந்தமல்ல, ஆனால், ஒரே ஒரு கருத்து— அதுவும் ஒரு சுண்டெலியைப் பற்றி!

இந்தக் கருத்தை அவர் வெளியிட்டதும், எதிர்காலத்தில் இது பிரமாதமான வெற்றியைக் கொணர்ந்து தரும் என்று அவர்கள் நினைக்கவே இல்லை. இருந்தாலும், இந்த சுண்டெலிக்கு திருநாமம் சூட்டினார்கள். முதலில் மார்ட்டிமர் என்று வைக்கலாம் என்றார் டிஸ்னி. 'இல்லை. மிக்கி என்பதே நன்றாயிருக்கும்' என்றாள் ஸ்ரீமதி டிஸ்னி. மிக்கி என்பதே நிலைத்தது. அந்தக் கருததின் சிருஷ்டிதான் மிக்கி மவுஸ்!

முதலில் பிடித்த இரண்டு மிக்கிமவுஸ் படங்களும் பேசும் படங்களல்ல. மூன்றாவது படத்தில்தான் சங்கீதமும் பேச்சும் சேர்க்கப்பட்டது. இந்தப்படம் தயாராகி, 1929ம் வருஷம் முதன்முதலாக நியூயார்க்கில் திரையிடப்பட்டது. டிஸ்னிக்கும் பெரிய வெற்றி. திரைப்பட உலகிலேயே இது ஒரு புதுமையாகத் தென்பட்டது. நியூயார்க்கிலேயே எந்தப் படமும அத்தனை நாள் ஓடவில்லை. அத்தனை கூட்டம்! பிறகு கேட்பானேன்! மறு வருஷமே டிஸ்னி ஐந்து ஏக்கர் நிலம் வாங்கி, பெரிய ஸ்டூடியோ ஒன்றைக் கட்டினார். பிறகு அவர் 'மூன்று பன்றிக் குட்டிகள்' என்ற படத்தை 1933-ல் திரையிட்டார். அதிலும் பிரமாதமான வெற்றி. எனவே, அவருக்கு அந்த வருஷத்தின் சிறந்த திரைப்படத்துக்குரிய கலைப்பரிசு கிடைத்தது. அதன்மூலம் டிஸ்னியின்

பெயரும் உலகப் பிரசித்தம் அடைந்தது.

இந்தப் படங்களைத் தொடர்ந்து, 'ஸ்நோ ஒயிட்டும், ஏழு குள்ளர்க்களும்' என்ற முழு நீளப் படத்தைத் தயாரித்தார். அதை நீங்கள் அனைவரும் பார்த்திருப்பீர்கள். பிரமாதமான படம். மகத்தான வெற்றி. டிஸ்னிக்கு பணம் குவிந்தது. எனவே அவர் சான் பிரான்சிஸ்கோ நகரில் 50 ஏக்கர் நிலம் வாங்கி, ஒரு பெரிய திரைப்பட ஸ்டுடியோவைக் கட்டினார். அதில் சமனமான சீதோஷ்ண நிலை வசதியும் அமைக்கப்பட்டது. டிஸ்னி ஸ்டுடியோவில் நூற்றுக்கணக்கான கலைஞர்கள் வேலை பார்க்கத் தொடங்கினர். அவர்கள் அனைவரும் நிபுணர்கள். பூக்களைப் பேச வைப்பது முக பாவக் கோரணி செய்வது முதலியவற்றில் நிபுணர்கள். எல்லாம் சித்திரத்தில்தான். இந்தக் கலைஞர்களில் பலர் கிராமப் புறங்களிலிருந்து வந்து, டிஸ்னியிடம் பயிற்சி பெற்றார்கள். அவர்கள் அனைவரும் டிஸ்னியை வால்ட் என்றுதான் அருமையோடு அழைக்கிறார்கள்.

இத்தனை அருங் கலைஞர்களின் ஒத்துழைப்போடுதான் டிஸ்னி தமது கற்பனைகளை உருவாக்குகிறார். இந்தக் கார்ட்டூன் பட உற்பத்தியில் டிஸ்னிக்கு அதிக வேலை இல்லை. என்றாலும், அவர்தான் முக்கியமான வேலையைச் செய்கிறார். படத்துக்கு வேண்டிய கருத்தை கற்பனை பண்ணுவது, கதையை உருவாக்குவது அவரது வேலை. பிறகு அந்தக் கருத்தைத் தமது சித்திரக்காரர்கள், புகைப்பட



நிபுணர்கள், பாடகர்கள் முதலியவர்களோடு விவாதித்து, உருவம் சமைப்பார். கதை சரியானபடி உருவாகி முடிந்தவுடன் படத்தில் அந்தக் கதை எப்படியெப்படி வரவேண்டும் என்பதை விவாதித்து விளங்க வைப்பார். அதன் பின்னர் அந்தக் கதையை, சினிமாப் படமாக, அதாவது எழுத்தில் எழுதி 'சினரியோ' தயாரிப்பார். அதற்குப் பிறகுதான் படப் பிடிப்பு வேலை ஆரம்பமாகும்.

கார்ட்டூன் படமாதலால், ஒவ்வொரு பாத்திரத்தின் அங்க அசைவுகளுக்கும் தனித்தனியாக படம் எழுதவேண்டும். உதாரணமாக, மிக்கி மவுஸ் தன் கையைத் தூக்குகிறது என்று கொள்வோம். வெறும் சித்திரப் பொம்மை சொன்னவுடன் கையைத் தூக்கிவிடுமா? எனவே, கை முதலில் இருந்த நிலையிலிருந்து, கையைத் தூக்கி முடியும் நிலைவரையிலும் பல சித்திரங்கள் வரையப்படும்; இந்தப்படங்கள் திரையில் விறு விறு என்று ஓடும்போது, கையைத் தூக்குவது போலவே தோன்றும். இதுதான் கார்ட்டூன் படத்தின் சூட்சுமம்.

மேலே கூறியபடி, படங்கள் எழுதி முடிந்தவுடன் பின்னணிச் சித்திரத்தைத் தீட்டுவார்கள். எல்லாம் முடிந்தவுடன் இந்தப் படங்கள் செல்லுலாயிட் என்னும் கண்ணாடிக்கு மாற்றி யெடுக்கப்படும். இப்படி மாறியவுடன் கார்ட்டூன் சித்திரங்கள் காமிராவின் மூலம் படம்பிடிக்கப்படும். சாதாரணமாக நாம் ஐந்து நிமிஷத்தில் பார்த்து முடிக்கும் கார்ட்டூன் படத்துக்கு சுமார் 8000 படங்கள் எழுதியாக வேண்டும். முதலில் கார்ட்டூன் படத்தை பேசாப்படமாக எடுத்து முடித்து விடுவார்கள். அதன் பின்னர் படத்திலுள்ள அபிநயங்கள், பேச்சுக்கள் முதலியவற்றுக்கு ஏற்றவாறு சிறந்த நிபுணர்களைக்கொண்டு சங்கீதமும், குரலும் தானம் செய்யப்படும். மிக்கி மவுசைப் பொறுத்தவரை, வால்ட் டிஸ்னியே இன்றுவரை குரல் தானம் செய்து வருகிறார். அதில் அவருக்கு பரம ஆனந்தம். இவ்வளவு சிரமப்பட்டுத் தயாரிக்கும் படங்களைத்தான் நாம் கண்டு மகிழ்கிறோம். மற்ற திரைப்படங்களைப் போல கார்ட்டூன் சித்திரத்துக்கு அதிகச் செலவு கிடையாது; ஆனால் உழைப்பு அதிகம். எனவே தான் வால்ட் டிஸ்னிக்கு தமது தொழிலில் ஏராளமான பணம் மிஞ்சுகிறது.

ஆனால், இந்தக் கலையினால் செல்வந்தராகி விட்ட வால்ட் டிஸ்னி படாடோபமான ஆசாமியல்ல. சாதாரணமாகத் தான் உடை உடுத்திக்கொள்வார். மேலும் கோடீசுவரப் பிரபுக்களைப்போல, சதா சர்வ காலமும் பணத்தைத் தேடுவதில் கண்ணும் கருத்துமானவர் அல்ல. சாயந்திரம் 5-மணியாகி விட்டால், அவர் எந்த அவசர காரியமாயிருந்தாலும் கவனிக்க மாட்டார். மறுநாள் காலைவரை பொறுத்திருக்கமுடியாத அளவுக்கு எதுவும் அவசர காரியமல்ல என்பது அவர் அபிப்பிராயம். அவர் சீக்கிரமே தூங்கப் போய் விடுவார். அது போலவே காலையில் சீக்கிரமே எழுந்து ஏழரை மணிக்குள் சாப்பாட்டை முடித்துவிட்டு, ஸ்டூடியோவுக்குப் போகும்

பாதையில், தமது புதல்வியரான டியானி, ஷரோன் இருவரையும் பள்ளிக்கூடத்தில் விட்டு விட்டு, ஆபீசுக்கு வருவார்.

டிஸ்னியிடம் எந்தச் சமயத்திலும், அவரது மனத்தில் சுமார் ஒரு டஜன் படங்களுக்குரிய கற்பனை ஊடாடிக்கொண்டே இருக்கும். டிஸ்னி மட்டுமல்லாமல், அவரது ஸ்டுடியோவிலுள்ள அத்தனை பேரும் தங்கள் கார்ட்டூன் சித்திரங்களை உயிருள்ள பிராணிகளாக மதித்து பேசிக்கொள்வார்கள். ஹாலிவுட்டிலுள்ள எந்த ஸ்டுடியோவிலும், டிஸ்னி ஸ்டுடியோவைப் போன்ற உணவு விடுதி வசதி கிடையாது. அங்கு எல்லாக் கலைஞர்களும் சமமாகப் பழகுவார்கள். டிஸ்னியும் அங்கு வந்து தமக்கு இஷ்டமான பொருளை வாங்கிச் சாப்பிட்டுக்கொண்டு, தம் சகாக்களோடு அரட்டையடிப்பார். அத்தனை சௌஜன்யம்.

ஆறு மணிக்கு ஆபீஸ் முடிந்ததும் டிஸ்னி தமது குழந்தைகளோடு விளையாடப் போவார். அல்லது தமக்குப் பிரியமான ஒரு மாடல் ரெயில் வண்டியுடனும், கிராமத்துடனும் பொழுது போக்குவார். அவர் எந்தக் கேளிக்கை மண்டபத்துக்கும் அர்த்த ராத்திரி விருந்துக்கும் செல்வதில்லை. எல்லாப் பொழுது போக்கும் வீட்டுக்குள்தான். அதிலேயே திருப்தியடைவார்.

டிஸ்னி, மிக்கி மவுஸ் படத்தைப் போலவே பல படங்கள் எடுத்திருக்கிறார். மிக்கி மவுஸ் நமக்கெல்லாம் எப்படி ஒரு அபிமான பாத்திரமாகிவிட்டதோ, அதுபோலவே அவரது சிருஷ்டிகளான டோனல்ட் வாத்து, ஸ்நோஒபிட், டம்போ யானை, பாம்பி மான்குட்டி முதலியனவும் சிறந்த சிருஷ்டிகளாகத் திகழ்கின்றன. துண்டுப்பட உற்பத்தியிலிருந்து முழு நீளப் பட உற்பத்தியைத் தொடங்கியவுடன், டிஸ்னி தமது கார்ட்டூன் சித்திரங்களோடு உயிருள்ள பாத்திரங்களையும் நடிக்க வைத்தார். இது கார்ட்டூன் படக்கலையிலேயே ஒரு புது நுணுக்கம்; புதிய வெற்றி. 'திரி காபெல்லரோஸ்' என்ற படமும் சமீபத்தில் திரையிடப் பெற்ற 'என் இதயத்துக்கு மிகவும் இனிதானது' என்ற படமும் இந்த ரகத்தைச் சேர்ந்தவை.

டிஸ்னியின் கார்ட்டூன் கலையினால் ஏற்படக்கூடிய நுணுக்க வெற்றிகள் பல. அதன் மூலம் சிறந்த கல்வி அறிவைப் பரப்ப முடியும். முதலாவது அதில் அபூர்வமான கற்பனைகளும், அழகும் நிறைந்திருப்பதால், பார்த்தவுடனேயே மனசைக் கவர்ந்துவிடும் சக்தி படைத்திருக்கிறது. மேலும், கண்ணிமைப்பில் நடந்து விடக்கூடிய சம்பவங்களை, அல்லது படம்பிடிக்க முடியாத சில நடவடிக்கைகளை கற்பனையின் மூலம் உருவாக்கித் தரமுடிகிறது. ஒரு கண நேர சம்பவத்தை படிப்படியாய் சொல்ல முடிகிறது. மேலும், மலேரியா, பிளேக் முதலிய நோய்க்கிருமிகளின் கெடுதலை, அதன் வளர்ச்சியை, அதற்கான காரணங்களை கார்ட்டூன் சித்திரங்களின் மூலம் படிப் படியாக ரச உணர்ச்சியோடு காட்ட முடியும். இது போலவே படித்தும் லகுவில் புரிய முடியாத பல விஞ்ஞான விஷயங்களை, கார்ட்

டுன் சித்திரங்கள் மூலம் லகுவாகப் புரிய வைக்க முடியும். மேலும், மிருகராசிகள் பழகும் நீதிக்கதைகளை ருசி நிறைந்ததாக்கி, படமாக்கிக் காட்டுவதன் மூலம் குழந்தைகளை லகுவில் வசீகரிக்கமுடியும். இதையெல்லாம் உணர்ந்ததால் தான் அமெரிக்கா சர்க்கார் அவரை ஒரு பிரசாரப்படம் தயாரிக்கச் சொன்னபோது, 'உலகத்தில் எந்தப்பாகத்திலும் இந்த மாதிரியான வசதி டிஸ்னியைத் தவிர வேறு யாரிடமும் இல்லாததால் அவரிடம் இதை ஒப்படைக்கிறோம்' என்று கூறிற்று.

இப்படியெல்லாம் டிஸ்னியின் கற்பனைச் சிருஷ்டி உலகப் புகழ் பெற்று, உலகத்துச் சிறுவர் சிறுமியர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட காரணத்தால், இன்று டிஸ்னியின் கதாபாத்திரங்களுக்கு வியாபார உலகில் ஏகப்பட்ட கிராக்கி. குழந்தைகளுக்காகச் சாமான் விற்கும் பல வியாபாரிகள் டிஸ்னியின் கதாபாத்திரங்களைத் தமது விளம்பரத்துக்கு உபயோகிப்பதற்காக, டிஸனிக்கு பணம் கொடுக்கிறார்கள். ஆனால், டிஸ்னி இது விஷயமாக ஒரு முக்கிய நிபந்தனை விதித்திருக்கிறார். மிக்கி முதலிய பாத்திரங்களின் படத்தை குழந்தைகளுக்கு ஆகாத சிகரெட், மது பானம் முதலியவற்றின் விளம்பரத்துக்கு உபயோகிக்கக்கூடாது என்பது தான் அந்த நிபந்தனை. அமெரிக்காவில் மட்டும் மிக்கி படம் போட்ட சாமான்கள் சுமார் 10 லட்சம் பவுனுக்கு விற்கின்றன. இந்த விற்பனையில் டிஸ்னிக்குச் சேரும் சன்மானம் ஐந்து சதவீதம்.

மிக்கிமவுஸ் படங்களால் கல்வியறிவு பரவுவதோடுமட்டுமின்றி, வைத்திய உதவிக்கும் கூடப் பயன்படுகிறது. கண்கோளாறு உள்ளவர்கள் இரண்டு கண்களையும் ஒரே நிலையில் வைத்து ஒருபொருளைக் காண்பது கஷ்டம். ஆனால் மிக்கி மவுஸ் படத்திலுள்ள கலை யழகால், மாறுகண் உள்ளவர்கள் அந்தப் படத்தில் லயித்து, தமது கண்கள் ஒரு நிலையில் நாடி வரும் வேதனையை மறந்து ஆனந்திக்கிறார்கள். இதனால், கண் சிகிச்சை செய்வது சுலபமாகிறது. மேலும், ஆஸ்பத்திரியிலும், ஓய்வெடுக்கும் நிலையங்களிலும் மிக்கிமவுஸ் படங்கள் மனக் குதூகலத்துக்காகவும், சாந்திக்காகவும் படிப்பினைக்காகவும் காட்டப்படுகின்றன.

இத்தனை காரியங்களுக்கும் தமது அருமையான கலையை டிஸ்னி பயன் படுத்தப் போய்த்தான் அவரை உலகத்தார் பெரிய மேதையென்றும், தத்துவார்த்தி யென்றும் பாராட்டுகிறார்கள்; ஆங்கில எழுத்தாளரான ஆல்டஸ் ஹக்ஸ்லி மிக்கி மவுஸ் படங்களிலுள்ள தத்துவங்களைப் பாராட்டி டிஸ்னியிடம் பேசியபோது, "உங்களால் எப்படி இம்மாதிரியான கலை நுணுக்கங்களை யெல்லாம் சொல்ல முடிந்தது?" என்று கேட்டாராம். ஆனால், அதற்கு டிஸ்னி சொன்ன பதில் இது தான். "நாங்கள் வெறுமனே குஷிக்காகத்தான் படங்களைத் தயாரிக்கிறோம்; உங்களைப் போன்ற அறிவாளிகள் தான் அதன் உள்ளர்த்தங்களைத் தெரிவிக்கவேண்டும்."

வெண்டைக் காய் பச்சடி

'வழ வழ' என்று பேசுபவனை 'வெண்டைக் காய்' என்று கேலி செய்கிறோம். ஆனால், வெண்டைக்காய் கேலி செய்யும் அளவுக்கு இளப்பமான பொருளா? இல்லை. அது ஒரு போஷணைச் செல்வம். படித்துப் பாருங்கள்.

வை. கோ.

'கணபதி! நேற்று சாயங் காலம் உங்கள் வீட்டிற்கு வந்தேன். உன்னைக் காண வில்லையே. எங்கே போயிருந்தாய்?'' என்றான் நண்பன் கோபாலன்.

'ஓஹோ! நேற்று என் வீட்டிற்கு வந்திருந்தாயா? எங்கள் வீட்டில் நீ வந்ததாகச் சொல்லவில்லையே. நேற்று பட்ஜட் சம்மந்தமாக ஒய். எம். ஐ. ஏ. யில் பிரசங்கம். பிரசங்கம் கேட்பதற்காக அங்கே போயிருந்தேன்' என்றான் கணபதி.

'பிரசங்கம் எப்படி இருந்தது?'

'பிரசங்கமா! வெண்டைக்காய் பச்சடியை விளக்கெண்ணை விட்டுத் தாளிதம் செய்தது மாதிரி இருந்தது.'

'கணபதி, வெண்டைக்காயை பிரசங்கத்துக்கு ஒப்பிடாதே. வெண்டைக்காயிலே மூளையை வளர்க்கும் சக்திஇருக்கிறதாம். இன்னும் என்னென்னவோ சத்துகளெல்லாம் இருக்கிறதாம். வெண்டைக்காய் சாம்பார், வெண்டைக்காய் புளிக்குழம்பு, அப்பப்பா இப்பொழுதே நாக்கில் ஜலம் ஊறுகிறதே'.

'சரி சரி, நீயே ஒரு வெண்டைக்காய்க் கதை 200 பக்கம் வரும்படியாகப் பாடிவிடுவாய் போலிருக்கிறதே'.

'போதும். மானேஜர் வரும் சமயமாகிவிட்டது. வேலைகளைப் பார்க்கலாம்' என்றான் கோபாலன்.

இப்பொழுது நாகரிக புருஷர்கள், நாரீமணிகள் இவர்களுக்கு பழைய காலத்திலிருந்து சாப்பிட்டு வந்த கத்தரிக்காய், வெண்டைக்காய், முருங்கைக் காய், அவரைக்காய், வாழைப்பூ வாழைக்காய், வாழைத்தண்டு, கருணைக்கிழங்கு, அகத்திக் கீரை என்றாலே கௌரவமாகத் தோன்றுவதில்லை. 'இன்றைக்கு, எங்கள் வீட்டில் டொமெடோ சூப், நூக்கோல் அவியல், காலிபிளவர் பொரியல், செலரிக் கீரை பொடிமாஸ், இவைகள் சமையல் செய்திருக்கிறோம்' என்று சொல்லிக் கொள்வதிலே தான் இவர்கள் பெருமையடைகிறார்கள்.

நம் நாட்டிலே அமோகமாக விளையக் கூடிய காய்கறிகளில் வெண்டைக் காயும், ஒன்று.

'உண்டி இல்லாதவன் வெண்டையைச் சாப்பிடு' என்ற பழமொழி தமிழ் நாட்டில் வழங்கி வருகிறது.

அந்த வெண்டையைப் பற்றி நாம் தெரிந்து கொள்வதில் குற்றம் ஒன்றும் இல்லையே?

வெண்டைச் செடி செம்பருத்தி இனத்தைச் சேர்ந்தது. இந்தியாவில் வெப்பமான பகுதிகளில் பயிரிடப் படுகிறது. நான்கு மாதப் பலன் தரக் கூடிய பயிர்.

வெண்டைக்காயிலே உடலை வளர்க்கும் சத்துகள் நிறைய இருக்கின்றன. வைடமின் A, வைடமின் B1, வைடமின் B2, வைடமின் C, புரோட்டின், கொழுப்பு, தாதுப் பொருள், கார்போ ஹைட்ரேட், சுண்ணம்பு, இரும்பு ஆகிய சத்துகள் கூடியது வெண்டைக்காய்.

வெண்டைக்காய் குளிர்ச்சி உண்டாக்கும். காமம் பெருக்கும். உள் அழலாற்றும். சிறுநீர் பெருக்கும். வரட்சி அகற்றும். இத்தனை நலமுடைய வெண்டைக்காயை மனிதர் உண்ணலாம் என்று கண்டு பிடித்த மகான் யாரோ? அவருக்கு நமஸ்காரம்.(அவருக்கு ஒரு கல் தூண் எழுப்ப வேண்டா மென்று மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.)

இப்பொழுது உலகத்தை அழிக்க ஹைட்ரோஜன் குண்டு கண்டு பிடிக்கும் விஞ்ஞானிகள் எப்பொழுது வெண்டைக்காய் மாதிரி நல்ல காய்கறிகளைக் கண்டு பிடித்துத் தரப் போகிறார்களோ தெரியவில்லை. அவர்கள் கண்டு பிடிக்கும் போது கண்டு பிடிக்கட்டும்.

நாம் ஒன்று செய்யலாம் முன்னோர்கள் கண்டு பிடித்த வெண்டைச்செடியை நம் வீட்டுத் தோட்டத்தில் பயிரிடலாம். பத்துசெடி இருந்தால் போதும். நாலு மாதங்களில் பலன் தரும். ஒரு நாள் விட்டு ஒரு நாள் வெண்டைக்காய்ப் பச்சடி, வெண்டைக்காய் சாம்பார், வெண்டைக்காய் வறுவல், வெண்டைக்காய்ப்புளிக்குழம்பு சாப்பிடலாம். நம் வீட்டு வாண்டுகளும் பச்சையாகவே வெண்டைக் காயை சாப்பிடுவார்கள்.

காரெட்டைக் காட்டிலும் வெண்டையில் சத்து அதிகமிருக்கிறது. காரெட்டில் 'காரொட்டின்' என்ற சத்து வெண்டையைக் காட்டிலும் அதிகமாகஇருக்கிறது. கொத்துமல்லித் தழையிலே காரட்டைக் காட்டிலும் 5 மடங்கு அதிகமாகக் காரொட்டின் இருக்கிறது. வெண்டைக்காய்ப் பச்சடியிலே கொத்து மல்லியைச் சேர்த்துச் சாப்பிடலாமல்லவா?

வெண்டைச் செடி பயிரிடுகிறீர்களா உங்கள்தோட்டத்தில்? கட்டுரை வெண்டைக்காய் மாதிரி இருக்கிறதோ?

*

வேறு காரணம் வேண்டாம்

கல்யாணம் ஒன்றே விவாகரத்துக்குப் போதிய காரணமாகக் கூடியவாறு நிலைமை வளர்ந்திருக்கிறது. —கே. இங்க்ராம்.

★ மதிப்புரைக்கு இரண்டு இரண்டு புத்தகங்கள் அனுப்ப வேண்டும்

புத்தக உலகம்

குழந்தைமை ரகசியம்: [ஆசிரியை: மேரியா மாண்டிசோரி. கிடைக்குமிடம்: சக்தி காரியாலயம், சென்னை—14. விலை ரூபாய் ஆறு.]

இத்தாலியில் பிறந்து, நம் நாட்டில்—அதிலும் சென்னையில்—பெரும்பாலும் வசித்துவரும் மூதாட்டியான மாண்டிசோரி அம்மையின் பிரசித்தி பெற்ற நூல்களில் குறிப்பிடத் தகுந்தது "குழந்தைமை ரகசியம்" என்பதாகும். ஆங்கிலத்தில், அதிக விலையில் வெளிவந்து உலகப் புகழைச் சம்பாதித்த இந்த அரிய பெரிய நூல், இப்போது தான் குறைந்த விலையில் தமிழில் வெளிவந்திருக்கிறது. குழந்தையின் மனோதத்துவத்தின் காவிய அழகும் அதன் வளர்ச்சியும் இந்நூலில் விஸ்தாரமாகக் கூறப்பட்டுள்ளன. குழந்தைகளுக்கு சம்பிரதாய முறைப்படி கல்வி அறிவு புகட்ட நினைத்து, அவர்களை இம்சைக்குள்ளாக்குவதே இன்று நடைமுறையில் இருக்கும் பழக்கமாகும். இந்நூலைப் படித்தால் குழந்தைகளுக்கு எந்த முறையில் கல்வி புகட்டவேண்டும் என்பதை ஒவ்வொருவரும் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

மூலத்தின் அமைப்பை அடியொற்றி தமிழில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. மாண்டிசோரிக் கல்வி முறையில் பல வருஷ அனுபவம் பெற்று விளங்கும் ஸ்ரீ சி. ந. வைத்தீஸ்வரன் இப்படிப்பட்ட சிறந்த நூலை மொழி பெயர்த்துத் தமிழுலகத்துக்கு வழங்கியதற்காக அவரை பாராட்டுகிறோம்.

தீக்ஷிதகீர்த்தன மாலா (2-ம் பாகம்): [பிரசுரம் செய்தவர்: வைணீக வித்வான் ஏ. ஸுந்தரமய்யர். கிடைக்குமிடம்: 5, கெங்கயம்மன் தெரு, ராயப்பேட்டை, சென்னை. விலை ரூ. 1—8—0.]

தமிழகத்தின் சங்கீத சாஹித்ய கர்த்தாக்களில் தலைசிறந்தவர்களில் ஒருவரான ஸ்ரீ முத்துசாமி தீக்ஷிதர் இயற்றிய நவக்ரஹ கீர்த்தனங்களும், வேறு சில கீர்த்தனங்களும், ஸ்வர தானக் குறைப்புகளுடன் இந்த இரண்டாம் பாகம் வெளியிடப்பட்டுள்ளன. கீர்த்தனங்களின் சமஸ்கிருத மூலமும் புத்தகத்தின் ஆரம்பத்தில் கொடுக்கப் பட்டுள்ளன.

இனியவை நாற்பது: [பதிப்பாசிரியர்; ஸ்ரீ எஸ். வையாபுரிப்பிள்ளை. கிடைக்குமிடம்: ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், 53—56, பவழக்காரத் தெரு, சென்னை. விலை அணா பன்னிரண்டு.]

பேரறிஞர் ஸ்ரீ எஸ். வையாபுரிப் பிள்ளை, பூதஞ்சேந்தனார் என்னும் பழம் புலவரால் இயற்றப்பட்ட இந்நூலை ஆராய்ச்சி முன்னுரையுடன் அழகிய முன்னுரையில பதிப்பித்துள்ளார். பாடல்களுக்கு பொழிப்புரையும் போதிய விளக்கங்களும் உள்ளன.

பாரம்பரியம்: [ஆசிரியர்: பெ. தூரன். கிடைக்குமிடம்: ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயம் போஸ்ட், கோயமுத்தூர் ஜில்லா. விலை ரூ. 1—4—0.]

தமிழ் நாட்டில், பாரம்பரிய சாஸ்திரத்தைப் பற்றிய பழைய நம்பிக்கைகளைத்தவிர, ஆராய்ச்சி நூல்கள் எதுவும் இல்லை. இப்படிப்பட்ட நிலையில் ஸ்ரீ பெ. தூரன் எழுதியுள்ள இந்த நூல் எவ்வளவு பயன்தரத் தக்கது என்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை. பாரம்பரியத்தைப் பற்றிய சில அடிப்படையான கருத்துக்களை அறிந்து, மேற்கொண்டு இது சம்பந்தமான பெரிய ஆங்கில நூல்களைப் படிப்பதற்கு, இந்த நூல் உதவும் என்பது நம் நம்பிக்கை.

ராஜாஜி: [ஆசிரியர்: 18 பேர். **கிடைக்குமிடம்:** ஹிந்துஸ்தான் பதிப்பகம், 69, பீட்டர்ஸ் ரோடு, சென்னை—6. விலை ரூ. 2—8—0.]

ராஜாஜியைப்பற்றி பதினெட்டுப் பேர் எழுதியுள்ள குறிப்புகள் அடங்கிய இந்தப் புத்தகத்தில், ராஜாஜியின் வாழ்க்கையில் நிகழ்ந்த பல சம்பவங்களும், அவருடன் தொடர்பு கொண்ட ஸ்தலங்களின் படங்களும், அவருடைய குடும்பத்தார் சிலரின் படங்களும் இருக்கின்றன. இந்தப் புத்தகம் படிப்பதற்கு ருசிகரமாக இருக்கிறது.

— கு. அ.

உயிரோவியம்: [ஆசிரியர்: ஜீவா. **கிடைக்குமிடம்:** ஜீவோதயம் பிரசுரம், சௌராஷ்டிர நகர், சென்னை—24. விலை ரூ. 2—0—0.]

முன்பு நாவலாக வெளிவந்த இந்தக் கதை இப்போது நாடகமாகப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

இந்த நாடகத்தில் தமிழ்ப்பண்பை விளக்கியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதைத் தேடித் துருவும் போது, ஒரு தமிழ்ப் பெண் உயிருக்கு ஒரு நாயகனையும் உடலுக்கு வேறொரு நாயகனையும் ஏற்று வாழ விரும்புவது தான் கண்ணில் படுகிறது! தமிழ் பண்பைப் பரப்ப வந்தவனான காதலனும் இதை ஏற்றுக்கொள்ளுகிறான்! இந்த விசித்திரம் தான் தமிழ்ப் பண்பா? ஒரு காதலனையும் காதலியையும் அவளுக்குக் கணவனாக வந்து வாய்த்தவனையும் இறக்கும் வரை பிரமசாரிகளாக்கி வாழவிட்டிருக்கும் கதையின் முடிவு பொருத்தமாக இல்லை.

ஹாஸ்யப் பகுதி சிறப்பாக அமைந்திருக்கிறது. படிக்கும் போதே சில கட்டங்கள் சிரிப்பை மூட்டுகின்றன. பாட்டுகள் பொருத்தமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. வசனம் ஜீவகளையோடு போகிறது. ஆங்கிலமும் தமிழும் கலந்து பேசுகிற மணிப்பிரவாள நடையை நாகரிகமாக நினைத்துப் பேசுவதை உரிய இடங்களில் எடுத்து எழுதிக் கண்டித்திருப்பது போற்றத்தக்கது. ஆனால் சில இடங்களில் வசனம் மிக நீளமாக இருக்கிறது. பொதுவாகக் கதையின் முடிவை நாம் மறந்துவிட்டால் ஆசிரியரின் ஆற்றலையும் கற்பனைத் திறத்தையும் போற்றுவோம் என்பதில் சந்தேகமில்லை.

— அஜீஸ்கான்.

அழகாம்பிகை; [ஆசிரியர்: நாரண துரைக்கண்ணன்; **கிடைக்குமிடம்:** ஜீவோதயம் பிரசுரம், சௌராஷ்டிர நகர், சென்னை—24. விலை ரூ. 1—4—0.

பொழுதுபோக்குக்காக மாத்திரமின்றி, 'மக்களுக்காகவே கலை; கலைக்காக மக்கள் அல்ல' என்னும் அடிப்படையில், வாழ்வின் உண்மை நிகழ்ச்சிகளை எழுத்தோவியமாய்ச் சித்திரிக்கும் கதைகள், மிக அரிதாகவே வெளிவருகின்றன. அங்ஙனம் வெளிவரும் அரிய புத்தகங்களில், 'அழகாம்பிகை' என்னும் இக்கதைத் தொகுதியும் ஒன்றாகும்.

எளிய, இனிய, சரளமான நடையில், கற்பனைத் திறமும், கலையழகும் கொண்டு, ஆசிரியர் கதைகளைக் கோவைசெய்திருக்கிறார்.

— சு[illegible]ராஜன்.

88817

Edited and Published by Vai Govindan, 115-E Mowbray's Road, Madras-14. & Printed by J. Chelliah at Papa Press, 80, General Patters Road, Madras-2.
Associate Editor: G. Alagiriswami.



(வர...

உலக மகாகவிகளில் ஒருவராகிய மகாகவி பாரதியாரின் வாழ்க்கை வரலாறுகளை அவருடன் கூட இருந்து பழகிய அறிஞர் வ. ரா. இந்த நூலில் படம் பிடித்துக் காட்டி இருக்கிறார். அறிஞர் பலராலும், பத்திரிகைகள் பலவாலும் பாராட்டப்பெற்றது இந்த நூல். பாரதியாரின் மூவர்ணப் படம் இந்தப் புத்தகத்தை அலங்கரிக்கிறது. இந்தப் புத்தகம் மூன்றாவது பதிப்பு. டெம்மி அளவில் 128 பக்கங்கள்.

இதன் விலை
ரூ. 1-8-0

தபால் செலவு தனி

சக்தி காரியாலயம்

ராயப்பேட்டை, சென்னை—14.

சக்தி காரியாலய வெளியீடுகள் அனைத்தும் ஹிக்கின்பாதம்ஸ் புத்தக சாலைகளிலும், சுதேசமித்திரன் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

அழகும் மணமும் பொருந்திய
புஷ்பம் "ரோஜா"
சுவையும் மணமும் பொருந்திய
பாக்குத்தூள் "அசோகா"

தயாரிப்பவர் :

எம். கே. கிருஷ்ண செ

'அசோகா பாக்டரி' கோயமுத்தூ